KALKI 23-6-85

ரூ.1-50



கல்கி

வாய் துர்நாற்றத்தை தடுத்திடுவீர். பற்சிதைவை எதிர்த்திடுவீர்.



கோல்கேட்டின் பாதுகாப்பு வளையத்தை பெற்றிடுவீர் !

தவறாமல் கோல்கேட் உபயோகிப்பதால்,
உங்கள் குடும்பத்தினரின் பற்களுக்கு ஆரோக்கியம், வலிமை, புத்துணர்ச்சி
தரும் தூய சுவாசம் கிடைக்கிறது.
இதுவே கோல்கேட்டின் பாதுகாப்பு வளையம்.


நீங்கள் பல் துலக்கும் ஒவ்வொரு முறையும்
கோல்கேட்டின் சுயமான ஃபார்முலா
செயல்படுவது எப்படி என்றால்...



உணவுத் துணுக்குகள் பற்களுக்கிடையே சிக்கிக் கொள்வதால் துர்நாற்றத்தையும், பற்சிதைவையும் உண்டாக்கும் பாக்டீரியாக்கள் வளருகின்றன.



கோல்கேட்டின் ஒப்பற்ற செயல்புரியும் நுரை ஆழ ஊடுருவிச் சென்று, துர்நாற்றத்தை ஏற்படுத்தும் உணவுத் துணுக்குகளையும் சிதைவு ஏற்படுத்தும் பாக்டீரியாக்களையும் அகற்றுகிறது.



முறையாக கோல்கேட் கொண்டு பல் துலக்குவதால் புத்துணர்ச்சி தரும் தூய சுவாசமும், வலிமை மிகுந்த ஆரோக்கியமும் தருகிறது.

ஒவ்வொரு முறையும் சாப்பிட்ட உடன்,
உங்கள் குடும்பத்தினர் தவறாமல் கோல்கேட்
கொண்டு பல் துலக்கட்டும்.
வாய் துர்நாற்றத்தை தடுத்திடுவீர்.
கோல்கேட்டின் பாதுகாப்பு வளையத்தை பெற்றிடுவீர்.



884.55 Tam

கோல்கேட்டின் புத்துணர்ச்சி தரும்
பெப்பர்மெண்ட் சுவை உங்களுக்கு விருப்பமானது !



* மைதிலி சிவராமன்.

"அமைச்சரே பெண்களைக் கேவலப்படுத்துகிறார்!"



* ராஜம் கிருஷ்ணன்.

"நமது சினிமாக்களும், பத்திரிகைகளும், டி. வி. யும் பெண்களைக் கேவலப்படுத்துவதற்காகவே தோன்றியவையோ என்றுதான் நினைக்கத் தோன்றுகிறது. பண்பாடு, கலாசாரம் என்றெல்லாம் கதாநாயகிகளை டயலாக் பேச வைக்கிற நமது சினிமாக்களில் எந்த சினிமாவாவது பெண்களைக் கௌரவப்படுத்துகிற முடிவைக் கொண்டிருக்கிறதா என்றால் அதுதான் இல்லை..

''இலக்கியத்தை எடுத்துக் கொண்டால் சுதந்திரத்துக்குப்பிறகு எழுதப்பட்ட கதைகள் எல்லாமே குடும்பக் கதைகள் என்ற முத்திரையில், குடும்பத்துக்காகத் தியாகம் செய்யும் பெண்களையும், கற்புக்காக உயிரை விடும் பெண்களையும் சித்திரிக்கும் கதைகள்தான்! பெண்களைப் போகப் பொருளாகக் கருதும் நிலைதான் இன்னமும் நீடிக்கிறது. ''புத்திசாலியான பெண்களையே நான் பார்த்ததில்லை!'' என்று பேட்டி கொடுக்கும் எழுத்தாளர்கள்தான் இன்று பிரபலமாக இருக்கிறார்கள்!

''பெண்களின் படங்களைத் தரக்குறைவாக வெளியிட்டுக் காசு பண்ணும் பத்திரிகைகளுக்குத்தான் பெண்கள் மத்தியிலேயே வரவேற்பு இருப்பது மிகப் பெரிய அவமானம்!

''ஒருமுறை விளக்குப் பூஜையில் கலந்து கொள்ளும்படி என்னை அழைத்திருந்தார்கள். இறைவனை ஜோதி வடிவத்தில் வழிபடுவதுதான் அந்தப் பூஜையின் தத்துவம் என்றால் எல்லாப் பெண்களையும் அழைக்க வேண்டியதுதானே? விதவைகள் கலந்து கொள்ளக் கூடாதாம்! அப்படியானால் விதவைகள் பெண்களே இல்லையா? இது என்ன அநியாயம் என்று நான் அதில் கலந்து கொள்ள மறுத்து விட்டேன்.

''ஆக யாருமே பெண்களை அறிவார்ந்த பிரதிநிதிகளாகப் பார்ப்பதில்லை; சித்திரிப்பதில்லை. மாமியாருக்கும், மருமகளுக்கும் எப்போதுமே ஆகாது என்பது போல்தான் சித்திரிக்கிறார்கள். புராணங்களில் கூட லட்சுமிக்கும் சரஸ்வதிக்கும் ஒத்துக் கொள்ளாது என்றுதான் எழுதியிருக்கிறார்கள். ஏன் இந்த நிலை? எந்தக் காலத்திலும் பெண்கள் ஒன்று சேர்ந்து விடக் கூடாது என்பதற்காக ஆண்கள் கையாளும் திட்டமிட்ட — பிரித்தாளும் மோசடிதான் இவையெல்லாம். இதுபோன்ற மூளைச் சலவைகளின் ஆதிக்கத்தை நாமெல்லாம் எதிர்த்துப் போராடாத வரை இந்தப் பத்தாண்டு என்ன, இனி எத்தனை பத்தாண்டுகள் வந்தாலும் பெண்கள் நிலையில் எந்தவித மாற்றமும் ஏற்பட்டுவிடப் போவதில்லை!''

'கடந்த பத்தாண்டுகளில் பெண்களின் நிலை' என்ற தலைப்பில் சென்னை மத்திய நூலகக் கட்டிடத்தில் அண்மையில் ஒரு கருத்தரங்கம் நடந்தது. அதில் கலந்து கொண்டு பேசிய ராஜம் கிருஷ்ணன்தான் மேற்கண்ட கருத்துக்களைக் கூறினார். அதே கருத்தரங்கில் மைதிலி சிவராமன் பேச்சிலிருந்து சில பகுதிகள்....

''இப்போது என்னிடம் 'மக்கள் குரல்' தினசரியைக் கொடுத்து அதில் வெளிவந்துள்ள அமைச்சர் ஆர். எம். வீரப்பனின் பேச்சுக்கு என்ன பதில் என்று கேட்டிருக்கிறார்கள். எங்கேயோ ஓர் ஆங்கிலோ இந்தியப் பெண் ஏழு முறை திருமணம் செய்து கொண்டாளாம். கடைசியில் முதல் கணவனுடன்தான் வாழ்க்கை நடத்துகிறாளாம். இதைக் குறிப்பிட்ட ஆர். எம். வீ. பெண்ணுரிமை எந்த அளவுக்கு முன்னேறியிருக்கிறது பார்த்தீர்களா? என்று பேசியிருக்கிறார். பலபேரைத் திருமணம் செய்து கொள்ளவா பெண்ணுரிமை கேட்கிறோம்? அவர் அப்படித்தான் பேசியிருக்கிறார். நமக்கு ஏதாவது பிரச்னைகள் என்றால் நாமெல்லாம் போய் மனுக் கொடுக்கிறோமே அந்த அமைச்சர்தான் இப்படிப் பேசியிருக்கிறார். ஓர் ஆண் தவறு செய்தால் அது அவனை மட்டும்தான் பாதிக்குமாம்; ஒரு பெண் தவறு செய்தாலோ அது சமுதாயத்தையே பாதிக்குமாம்! இதையும் அவரேதான் பேசியிருக்கிறார். பெண்ணுரிமையின் அடிப்படைகளைப் பற்றிய சிந்தனையே இல்லாமல் பேசியிருக்கிறார் அவர். இவரைத்தான் நாம் அமைச்சராக்கியிருக்கிறோம் என்பது மிக மிக வேதனையான விஷயம். இப்படிப்பட்ட அமைச்சருக்கு நாமெல்லாம் ஒன்று சேர்ந்து 'கறுப்புக் கொடி காட்டினாலும் தகும்!''

தொகுப்பு: கே. பாரதி



"காஸ் சிலிண்டரைத் திறந்து கொலை செய்யவும் முயன்றார்கள்..."

கண்ணுக்குள் கண்ணாய் வளர்த்த தன் அருமை மகளைத் திருமணமான அடுத்த நாளே காணவில்லை என்று கேள்விப்பட்டதும், துடித்துப் போனார் கல்யாணராம அய்யர். திருவண்ணாமலையிலுள்ள மாப்பிள்ளை வீட்டிலிருந்து, மாப்பிள்ளை விஸ்வநாதனையும் கூட்டிக் கொண்டு, அங்கிருந்து சுமார் இருபது கி.மீ. தொலைவிலுள்ள தனது சொந்த ஊரான வேட்டவலத்திற்கு மகளைத் தேடிக் காரில் சென்று கொண்டிருந்தார் அய்யர்.

தன் மகள் ஏன் போனாள்? எங்கே போனாள்? என்றெல்லாம் தவித்துக் கொண்டிருந்த கல்யாணராம அய்யர், திடீரென்று உணர்ச்சிவசப்பட்டவராக, "டேய், என் பொண்ணை என்னடா செஞ்சீங்க...?" என்று பக்கத்திலிருந்த மாப்பிள்ளையைப் பிடித்து உலுக்கினார்.

அதற்குள் கார் வேட்டவலம் வந்து சேர்ந்தது.

எதிர் வீட்டில் உள்ள நண்பர் ஓடோடி வந்து, "உங்க மகள் என் வீட்டில் தான் ஸார் இருக்கா!" என்று சொன்னவுடன் தான் அய்யருக்கு உயிர் வந்தது.

"அம்மா செல்வி – வாம்மா வெளியே... மாப்பிள்ளை வந்திருக்கார்."

"மாட்டேன்பா – அந்த ஆள் முகத்திலேயே முழிக்க மாட்டேன்!"

"ஏம்மா... என்ன ஆச்சு?"

"......"

"ஏம்மா... சொல்லும்மா!"

பலவித வற்புறுத்தல்களுக்குப் பிறகு, தன் மகளை மாப்பிள்ளையுடன் திருவண்ணாமலைக்கு அனுப்பி வைத்தார். கூடவே தன் மனைவி சரஸ்வதியையும் அனுப்பினார். பிறகுதான், கொந்தளித்த கடல் போலிருந்த அவர் மனம் அடங்கியது.

இருபத்தைந்து வருடங்கள் பள்ளி ஆசிரியராக சர்வீஸ். தலைமை ஆசிரியராகப் பதவி உயர்வு கிடைத்த போது, பள்ளிக்கு இன்ஸ்பெக்ஷன் வந்த மேலதிகாரிகள், 'நல்லாசிரியர்' விருது கொடுக்கத் தகுதியானவர் என்று இவருக்கு ரிப்போர்ட் எழுதி வைத்துவிட்டுப் போனார்கள். முதல் மனைவியின் மகள்தானே என்று எப்போதுமே செல்வியிடம் அலட்சியம் காட்டியதில்லை. பாரதியின் மேல் பக்தி அதிகம். அதனாலேயே மகளுக்குச் செந்தமிழ்ச் செல்வி என்று அழகான தமிழ்ப் பெயரை வைத்தார் அய்யர். இரண்டாவது கல்யாணம் (முதல் மனைவி இறந்த பிறகு)

• சரஸ்வதி அம்மாள்.



செய்து கொண்ட போது, செல்விக்கு ஆறு வயது. இரண்டாவது மனைவி சரஸ்வதியும் செல்விமேல் மிகுந்த பாசத்தைக் கொட்டினாள். செல்வியும் 'அம்மா, அம்மா' என்று சித்தியிடம் ஒட்டிக் கொண்டாள்!

1984-ம் வருடம். எப்படியும் இந்த ஆண்டு செல்விக்குக் கல்யாணம் செய்து வைத்து விட வேண்டுமென்று கணவரிடம் வாதிட்டவள் சரஸ்வதிதான்.

ஒரு புதுமணப் பெண்ணின் கண்ணீர்க் கதை

'ஏன்னா செல்விக்கோ இருபத்தைந்து வயதாகி விட்டது. எப்படியாவது இந்த வருடம் கல்யாணம் செய்து வைத்துவிட வேண்டாமா? பொறுப்பில்லாம இருக்கேளே...' என்று அடிக்கடி அய்யரிடம் நினைவு படுத்தினாள் சரஸ்வதி.

தன் மகளின் கல்யாணத்திற்காகச் சிறுகச் சிறுகச் சேமித்து வைத்திருந்த பணம் கணிசமான அளவுக்குச் சேர்ந்திருக்கிறது. கொஞ்சம் கடன் வாங்கினால் கல்யாணத்தை 'ஜாம், ஜாம்' என்று பண்ணிவிடலாம் என்ற நம்பிக்கை கல்யாணராம அய்யருக்கு இருந்தது. வேட்டவலம் ஊரில் அவருக்கு மிகுந்த மரியாதை இருந்ததால் கடன் கிடைப்பதிலும் சிரமம் ஏதுமில்லை.

மாப்பிள்ளை தேடத் தொடங்கினார்கள். கொளத்தூர் என்ற ஊருக்கு ஒரு வரன் சம்பந்தமாகச் சென்றிருந்த போது, அங்கிருந்த தெரிந்தவர் ஒருவர் திருவண்ணாமலை கற்பகம் கூட்டுறவு அங்காடியில் வேலை செய்யும் விஸ்வநாதன் என்பவரைப் பற்றிக் கூறினார். ஜாதகம் பரிமாறிக் கொள்ளப்பட்டது. நல்ல பொருத்தம். மகளும் பார்க்கவிருக்கும் மாப்பிள்ளையும் ஒரே நட்சத்திரம் வேறு.

'பேஷ் பேஷ்' என்றார் ஜோசியர். கிராமத்திலிருந்து திருவண்ணாமலைக்குச் செல்லும் வழியில் பாறை பிள்ளையார் கோயில்

* திருமணம் நடந்தபோது...



* செந்தமிழ்ச் செல்வி.



என்று ஒரு கோயில் இருக்கிறது. எந்த நல்ல காரியத்தைத் தொடங்கினாலும், அங்கு சென்று 'பூ'ப்போட்டுப் பார்த்துவிட்டுத் தான் தொடங்குவது வழக்கம். 'பூ'ப்போட்டுப் பார்த்ததில், சாதகமாகப் பதில் வரவே, அய்யருக்கு மிகுந்த திருப்தியாக இருந்தது. 'பையனும் அழகாக இருந்தான். பையனுக்கு அம்மா, அப்பா, மூன்று சகோதரர்கள், மூத்த சகோதரர் மனைவி அவர் கூட வசிக்காமல் இருக்கிறார் என்ற விஷயம் அய்யருக்கு அப்போது பெரிதாகப் படவில்லை. மாப்பிள்ளையின் இன்னொரு சகோதரன் ரெவின்யூ இன்ஸ்பெக்டராகவும், அவரது மனைவி டீச்சராகவும் இருந்தார்கள். கடைசித் தம்பி தனியார் கம்பெனியில் வேலை செய்து கொண்டிருந்தான். மாப்பிள்ளைக்கு இரண்டு தங்கைகள்; இருவருக்கும் கல்யாணம் செய்து கொடுத்தாகி விட்டது.

பேச்சு வார்த்தை நடத்திய போது 5,500 ரூபாய் பணமாகவும், பத்து சவரன் நகையும் போட வேண்டுமென்று தீர்மானமாயிற்று. ஆனால் சரஸ்வதி அம்மாவோ (செல்வியின் சித்தி) ஏழரை சவரன் உடனடியாகப் போடுகிறோம். இரண்டரை சவரனை சீமந்தத்தின் போது போடுகிறோம் என்றார். மாப்பிள்ளை வீட்டாரும் ஒப்புக் கொண்டார்கள்.

முதல் தவணையாக நாலாயிரம் ரூபாயைக் கொண்டு போய்க் கொடுத்த போது, அதை எண்ணிப் பார்த்த விதமே அய்யருக்கு வெறுப்பைத் தந்தது. கல்யாணத்தைத் திருவண்ணாமலையில் தான் வைத்துக் கொள்ள வேண்டும். சாத்துக்குடி பை தரக் கூடாது; ஆப்பிள் போட்டுத்தான் தர வேண்டும் என்று வந்த வேண்டுகோள்களை ஏற்றுக் கொண்டு விட்டார் கல்யாணராமன். அதற்குக் காரணம் பெண்ணுக்குப் பையனைப் பிடித்துப் போய்விட்டதுதான். 1985 ஜனவரி 27-ம் தேதி கல்யாணம். தாலி கட்டுவதற்கு



• கல்யாணராமன்

முன் இரண்டரை சவரன் போட்டால்தான் தாலி என்று வற்புறுத்தவே, அதையும் கொடுத்து விட்டார் அய்யர். வரதட்சணையில் ஐநூறு ரூபாய் பாக்கி இருந்தது. அதையும் கொடுத்த பிறகுதான் தாலி கட்டினார் மாப்பிள்ளை.

முதலிரவு. அய்யங்குளம் தெருவில் உள்ள விஸ்வநாதன் வீட்டில்...

பாலுடன் உள்ளே நுழைந்தாள் செல்வி. விஸ்வநாதன் காத்திருந்தான்.

'செல்வி' — கையைப் பிடித்தான். ஆயிரம் கற்பனைகளுடன் அடியெடுத்து வைத்த செல்விக்கு மனம் சந்தோஷத்தால் வழிந்தது. இன்னும் அவன் என்னவெல்லாம் செய்யப் போகிறானோ என்று நினைத்துச் சிலிர்த்தாள்.

''செல்வி — எனக்காக நான் கல்யாணம் செய்து கொள்ளவில்லை. என் அண்ணனுக்காகத்தான் கல்யாணம் செய்து கொண்டேன். அவன் மனம் கோணாமல் நடந்து கொள்...''

கணவன்தான் சொன்னான்!

''இது என்ன பேச்சு?'' என்று திகைத்தாள் செல்வி.

''எனக்கு மார்பு வலி. நான் வெளியே போகிறேன்'' என்று அறையை விட்டு வெளியே வந்து விட்டான் விஸ்வநாதன். அதற்குள் அண்ணி கதவைத்திறந்துகொண்டு வந்து மூன்று சவரன் நகையும் ஐயாயிரம் பணமும் கொடுத்தால்தான் முதலிரவு என்று சொல்லி கதவைத் தடாலென்று சாத்தி விட்டுச் சென்றாள்.

கண்ணீர் கங்கையாக வந்தது செல்விக்கு.

சிறிது நேரத்திற்குப் பிறகு வெளியே வந்து பார்த்தாள். அண்ணியின் மடியில் முகம் புதைத்துக் கொண்டு அழுது கொண்டிருந்தான் விஸ்வநாதன். அண்ணி அவன் கண்ணீரைத் துடைத்து, தலையைக் கோதிவிட்டாள். இந்தக் காட்சியைப் பார்த்த செல்வியின் மனம் தடுமாறியது. முதலிரவு அன்றே துக்கம் அவளைத் தூங்க விடாமல் துன்புறுத்திக் கலங்க வைத்தது.

மறுநாள் காலை சத்திரத்திற்கு விரைந்தனர்.

''என்னம்மா, 'சந்தோஷமா' இருந்தியா?'' என்ற அம்மாவின் கேள்விக்குச் செல்வியால் சரியான பதிலைக் கூடச் சொல்ல முடியவில்லை.

கட்டுச் சாத மூட்டை கட்டிக் கொடுத்துச் செல்வியை மாப்பிள்ளையுடன் மீண்டும் வீட்டிற்கு அனுப்பி வைத்தனர். அந்த நாள்— கல்யாணமான மறுநாள். அன்று மாப்பிள்ளையின் வீட்டிற்குச் சென்ற ஒரு மணி நேரத்தில்தான் எல்லோரையும்விட்டுவிட்டு வேட்டவலத்திற்கு வந்து விட்டாள் செல்வி!

பின் மாப்பிள்ளையோடு செல்வியை அனுப்பி வைத்த அன்று அதாவது திருமணமான மூன்றாம் நாள் மாப்பிள்ளை வீட்டில் சித்தியுடன் ஹாலிலேயே படுத்துக் கொண்டாள் செல்வி. மறுநாள்— அதாவது கல்யாணமான நான்காம் நாள் — 'ஒரு கைதியின் டைரி' படம் பார்த்துவிட்டுக் கோவிலுக்கும் சென்றுவிட்டு, இரவு புதுப் பெண்ணும்-மாப்பிள்ளையும் வீடு திரும்பினார்கள் அன்று இரவு பத்து மணி இருக்கும்.

திடீரென்று ''அய்யோ கொல்ல வராங்க'' என்று கூச்சலிட்டபடியே பக்கத்து வீட்டுக்குள் வந்து நுழைந்து கொண்டாள் செல்வி. உடனே வேட்டவலத்துக்குச் செய்தி பறந்தது. அய்யங்குள அக்ரஹாரமே திரண்டு நிற்க, வேட்டவலத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டாள் செல்வி.

என்னதான் நடந்தது?

''முதலிரவன்றே மூன்று சவரன் நகையும் ஐயாயிரம் ரூபாய் பணமும் கொடுத்தால் தான் முதலிரவு என்று மாப்பிள்ளையின் அண்ணிக்காரி சொல்லிவிட்டு முதலிரவே நடக்க விடாமல் செய்து விட்டாளாம். பிறகு புதன்கிழமையன்று 'மாப்பிள்ளையின் அண்ணன் வந்து, 'வைச்சுக்கவா உன்னை மட்டும் நெஞ்சுக்குள்ளே' என்று, மாப்பிள்ளை எதிரிலேயே பாடினாராம். சென்னையிலிருந்து வந்திருந்த நாத்தனாரின் கணவரோ, கையைப் பிடித்து இழுத்தாராம். கற்பழிக்க முயன்றாராம், மாப்பிள்ளையின் அண்ணன். தடுத்த போது — விடுபட முயன்ற போது, காஸ் சிலிண்டரிடம் இழுத்துக் கொண்டு போய் சிலிண்டரைத் திறந்துவிட்டு கொலை செய்து விட முயன்றார்களாம்.

''உங்கள் கணவர் என்னதான் செய்தார்?''

''பேசாமல் பார்த்துக் கொண்டிருந்தார்.''

''அப்படியானால் அவர் அயோக்கியர் தானே?''.

''இல்ல ஸார். 'அவர் இன்னொசென்ட்' சுற்றியிருப்பவர்கள்தான் மோசம்.''

''அப்ப என்னதான் முடிவு?''

''ஏற்கெனவே பி. ஏ. வரை படித்திருக்கேன். மேலே படிக்கப் போகிறேன். இனிமேல் அவருடன் சேர்ந்து வாழமுடியுமென்று தோன்றவில்லை.''

''அவர்தான் ஒன்றும் அறியாதவர் என்று சொல்கிறீர்களே அப்புறம் சேருவதற்கு வாய்ப்பில்லை என்று சொல்வது சரியா?''

இந்தக் கேள்விக்குச் சரியான பதிலைச் சொல்லாமல் மௌனம் சாதிக்கிறாள் செல்வி.

செல்வி வீட்டிற்கு வந்ததிற்குப் பிறகு வரதட்சிணைக் கொடுமையின் காரணமாகத் தன் மகளை வீட்டை விட்டுத் துரத்தி விட்டார்கள் என்றும், மகளைக் கொலை செய்யப் பார்த்தார்கள் என்றும், கலெக்டருக்கு புகார் கொடுத்தார் கல்யாணராமன். 2.3.85 அன்று கலெக்டருக்கு அனுப்பிய புகார் 14.5.85 அன்று திருவண்ணாமலை டவுன் போலீஸ் ஸ்டேஷனுக்கு வந்து (ஏன் இவ்வளவு தாமதம்?) 275/85 என்ற நம்பரில் முதல் தகவல் அறிக்கையாகப் பதிவாகி, விசாரணை துவங்கியது. மொத்தம் ஐந்து செக்ஷன் படி குற்றம் சுமத்தப்பட்டது. மாப்பிள்ளை விஸ்வநாதனைத் தவிர, அவர் குடும்பத்தினர் அனைவரும் குற்றம் சாட்டப்பட்டவர்கள் ஆனார்கள். இதில் ஒரு செக்ஷன், கைது செய்தால் வெளியே வர முடியாத செக்ஷன். ஆக மாப்பிள்ளை வீட்டில் எல்லோரும் முன் ஜாமீன் வாங்கி வைத்திருக்கிறார்கள். ''அந்த க............க்கு ஜெயில் தண்டனை வாங்கித் தராமல் ஓயப் போவதில்லை'' என்கிறார் கல்யாணராம அய்யர்.

திருவண்ணாமலை அய்யங்குள அக்ரஹாரம் 102—ம் நம்பர் வீடு. விஸ்வநாதனின் அண்ணன் அருணாசலத்தை சந்தித்த போது...

''எங்க தலையெழுத்து ஸார். அந்தக் குடும்பத்தோட சம்பந்தம் வைத்துக் கொண்டோம். வரதட்சிணைப் பிரச்னை ஏதும் கிடையாது. நாங்க எதையும் டிமாண்ட் பண்ணலை. 'உங்க பெண்ணுக்கு என்ன போடறேளோ அதைப் போடுங்கோ' என்றுதான் சொன்னோம். நானும் இரண்டு தங்கைகளுக்குக் கல்யாணம் செய்து கொடுத்திருக்கேன். அந்தப் பெண்ணின் தகப்பனார் நோக்கமெல்லாம் என் தம்பியைப் பிரித்துத் தனிக் குடித்தனம் வைக்க வேண்டுமென்பதுதான். ஆனால் அவன் சம்பாதிப்பது மாதம் 450 ரூபாய்தான். இதில் எப்படிக் குடும்பம் நடத்த முடியும்? இந்தத் தெருவில் தலை நிமிர்ந்து நடந்து கொண்டிருந்த நாங்கள் இப்போது தலைகுனிந்து செல்ல வேண்டியதாகிவிட்டது. எங்கள் தம்பியைத் தனியாகப் பிரித்துத் தனிக் குடித்தனம் வைக்க நாங்கள் தயாராக இருக்கிறோம். கற்பழிக்க முயன்றார்கள் என்பதெல்லாம் சுத்தப் பொய். திருமணத்திற்கு வந்திருக்கும் உறவினர்கள், வீட்டில் நிறைந்திருக்கும் போது இப்படி நடக்க முடியுமா? அந்தப் பெண்ணின் தந்தை ஒரு பெட்டிஷன் மாஸ்டர்!'' என்றார் அவர்.

மாப்பிள்ளை விஸ்வநாதனோ, ''ஏதோ நடந்தது நடந்து விட்டது ஸார். ஒரு சமாதானத்திற்கு வந்து தனிக்குடித்தனம் போக வேண்டும்'' என்கிறார்.

கல்யாணராம அய்யருக்கு இப்போது சமாதானம் செய்து கொள்ள வரும் மாப்பிள்ளை வீட்டார் மீது சந்தேகம். அதுபோல நடித்து, பின் வழக்கை வாபஸ் பெறச் செய்து, மகளை மீண்டும் கொடுமைப்படுத்தினால் என்ன செய்வது? என்று சந்தேகிக்கிறார்.

இதற்கிடையில் மாப்பிள்ளை வீட்டார் அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்தி அய்யரை வேட்டவலத்திலிருந்து பதினைந்து மைல் தள்ளியுள்ள கீழ்பெண்ணாத்தூர் என்ற கிராமத்திற்கு மாற்றி விட்டார்களாம். திருவண்ணாமலையிலுள்ள இரண்டு எம். எல். ஏக்கள், பிராமண சங்கத் தலைவர் போன்றவர்கள் தலையிட்டும் சமாதானம் செய்ய முடியவில்லையாம்.

இந்த வழக்கைத் தற்போது போலீஸ் விசாரித்து வருகிறது. மாப்பிள்ளை ஆண்மையுள்ளவரா, இல்லையா என்பதைத் தீர்மானிக்க மெடிக்கல் செக்—அப்பிற்கு அனுப்ப இருக்கிறார்களாம் போலீஸார். போலீஸ் வட்டாரத்தில் விசாரித்த போது, ''கற்பழிப்பு முயற்சி நடந்திருக்க வாய்ப்பு ஏதும் இருந்ததாகத் தெரியவில்லை. மாப்பிள்ளை மிகவும் நல்ல பையன். ஆனால் அந்தக் குடும்பத்தில் எல்லோரும் 'மிகவும்' சோஷியலாகப் பழகுகிறார்கள். அந்தப் பெண் இதைத் தவறாக எடுத்துக் கொண்டு, 'தனிக் குடித்தனம்' போக வேண்டும் என்று முரண்டு பிடித்திருக்கிறது. இதுதான் அடிப்படையாக இருக்கும் போலிருக்கிறது'' என்று சொன்னார்கள்.

—ப்ரியன்.

படங்கள்: கண்ணன்.

ஹைட்பார்க் பேச்சு – 1.

ஏழைகளின் ஊட்டியான குற்றாலத்தை நவீனப்படுத்தப் போவதாகத் தமிழ்நாடு சுற்றுலா வாரியத் துறையினர் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இப்போதே இருபதாண்டுகளுக்கு முன் பிருந்த இயற்கையரான குற்றாலத்தைக் காண முடியவில்லை. இந்த நிலையில் அதை மேலும், 'நவீன'ப்படுத்திச் சீர்குலைக்க வேண்டுமா? தயவு செய்து 'குற்றாலக் குறவஞ்சி'யிலுள்ள வருணனைக்கே குற்றாலத்தை விட்டு விடுங்கள். உங்களுக்கு ஏதாவது நவீன குற்றாலம் தேவையென்றால் அதைச் சென்னைக்கு அருகிலேயே எங்கேயாவது அமைத்துக் கொள்ளுங்கள்!

திருமதி எம். சுசந்தா,

தஞ்சாவூர்— 2.





'ஒரு மலரின் பயணம்'



"ஸரஜலா ஜெயமன்மதன்"

"குட்மார்னிங், லக்ஷ்மியம்மா இருக்காங்களா?"

"லக்ஷ்மிதான் இருக்காங்க. அவங்கம்மா இல்லே"

"இந்த க்ரேஸி ஜோக்கெல்லாம் வேணும். அவங்க கிட்ட கொடுங்க".

"நீங்க யாரு?"

"ஜெயமன்மதன்னு சொல்லுங்க"

"ஓஹோ பத்திரிகைல விமர்சனம் எழுதறவங்களா? என்னவோ உங்களுக்குத்தான் எல்லாம் தெரியும்னு எழுதிட்டிருக்கீங்க... லட்சம் லட்சமா போட்டுப் படம் எடுக்கிறவன் கைல மாட்டிக்கிட்டு ஹாஸ்பிடல்ல போய் விழப் போறீங்க – இருங்க லக்ஷ்மியே வந்துட்டாங்க. அவங்க கைல தரேன்".

"யாருகிட்ட பேசிட்டிருந்த முனியா? ஹலோ லக்ஷ்மி ஸ்பீக்கிங்".

"வணக்கம் நந்தினியம்மா".

"ஓ. "மலரின் பயணம்" பாத்திட்டீங்களா? படம் எப்படி?"

"ஃப்ரேமுக்கு ஃப்ரேம் நீங்க வர்ற மாதிரி கதை பிடிச்சிருக்காங்க. சும்மா பீச்ல நடக்கற மாதிரி ஹாய்யா பண்ணியிருக்கீங்க. சுலக்ஷணாவை தங்கச்சியா வச்சுகிட்டு நீங்க ஆரம்பத்தில அடிக்கற கூத்து ரொம்ப நேச்சுரலா இருக்குது. குளிப்பாட்டி விடறதும், சாப்பாடு ஊட்டி விடறதும், நடுவில புருஷனைப் பார்த்து கொஞ்சம் ஆதங்கப்படுவதும் பிரமாதமாயிருக்கு. மௌனி கூட பெட்ரூம்ல நீங்க சிணுங்கற சீன்லாம் உங்க வழக்கமான தாளிப்பு. ஆனா ஒண்ணு ரெண்டு சீன்லகொஞ்சம் ஓவர் ஆக்ட் பண்ணிட்டீங்களோன்னு தோணுது."

"அதுதான பாத்தேன், வெறுமனே பாராட்டிட்டு நிறுத்திடுவீங்களா நீங்க?"

"இன்னொரு விஷயம் சொன்னா கோபிச்சுக்க மாட்டீங்களே?"

"நான் தகுதியில்லாதவங்க கிட்டல்லாம் கோச்சுக்கறதில்ல. சொல்லுங்க".

"உங்களை விட சுலக்ஷணாதான் இன்னும் அழகா பண்ணியிருக்காங்க. குழந்தைக் கொஞ்சலா இருக்கற போதும் சரி. அப்புறம் கொஞ்ச நாள் பைத்தியமா இருக்கற போதும் சரி. பாத்திரத்தை உணர்ந்து அழகா செய்திருக்காங்க. ஊர்வசிக்கு பாவம் ரெண்டுங் கெட்டான் ரோல். அருவில நனைஞ்சு பாட்டுப் பாடி தெரியாத்தனமா முரளியால கெடுக்கப்பட்டு அப்புறம் அவரைத் தேடிக்கிட்டு அலைஞ்சு பிடிக்கிற வேஷம். பின்னால கொஞ்சம் பரவாயில்லே".

"சுலக்ஷணாதான் நல்லாப் பண்ணியிருக்கான்னு நீங்க. எனக்கு சந்தோஷம்தான்".

"பாவம் மௌனி, உங்களுக்கு இம்பார்ட்டன்ஸ் கொடுக்கணும்னு அவரை வெளிநாடு டூர் போறவருன்னு சொல்லி டம்மியாக்கிட்டாங்க. ஆனாலும் அவர் வர சீன்லாம் வாய் விட்டு சிரிக்க முடியுது. முரளிக்காக ஒண்ணு ரெண்டு சண்டை சீன்லாம் வச்சிருக்காங்க. இருந்தாலும் இந்த மாதிரி சாதுவான ரோல்ல அவர் பல்லு பிடுங்கின பாம்பு மாதிரி இருக்காரு".

"படம் மெயினா லேடீஸ்க்காகத்தானே எடுத்திருக்காங்க? அதனால எங்களுக்குத்தானே மெயின் ரோல் தரணும்?"

"சந்திரபோஸ் கேக்கும்படியா மியூஸிக் போட்டிருக்கார். வியட்நாம் சுந்தரம் இன்னும் கொஞ்சம் அழுத்தமா டயலாக்ஸ் எழுதியிருக்கலாம்னு உங்களுக்குத் தோணலே?"

"நோ கமெண்ட்ஸ். வேற என்ன விஷயம் சொல்லுங்க. எனக்கு மேக்கப்புக்கு நேரமாகுது."

"எந்தப் படம் பண்றீங்க?"

"விடுதலைன்னு ஒரு படம். ஆறு பொண்ணுங்களுக்கு அம்மாவா, புருஷனுக்கு தினம் வெத்திலே மடிச்சுத் தர பொண்ணா ஒரு ரோல். வச்சிடட்டா?"

"உங்க பயணம் வெற்றியடைய வாழ்த்துக்கள்".

"டாடா".



குற்றவாளிகள்

வாசகர் ஜெயமன்மதன்

"குட் ஈவினிங், ராதாரவி இருக்காரா?"

"ராதாரவிதான் பேசறேன்... (இடீரென பெண் பிள்ளைக் குரலில்)... நீங்க யாருங்ங்ங".

"ஜெயமன்மதன்ங்க... சினிமா விமரிசனம் எழுதறேமே...."

"ஹலோ... நமஸ்காரம்.... வணக்கம்... குட் மார்னிங்.... ஈவ்னிங்.... நைட்... என்ன விசயம்?"

"குற்றவாளிகள் படத்தைப் பார்த்தோங்க..."

"நல்லா இருங்க.... நல்லா இருங்க..."

"இந்த மாதிரி படத்தைப் பாத்தா நல்லா இருக்க முடியாதுன்னு உங்களுக்கே தெரிஞ்சிருக்குதே...."

"என்ன ப்ரதர்... வம்புல மாட்டிவுடப் பாக்கறியா? (கட்டைக் குரலில்) நான் நல்லவனுக்கு நல்லவன்... பொல்லாதவனுக்குப் பொல்லாத வன்.... படத்தில பாக்கலே... பெரிய்ய பேனர் படம்!"

"ஆமாமா... உங்களுக்குத்தான் என்ன ஒரு காரெக்டர்....முதல்லதண்ணி...பொண்ணுங்க கூட ஆட்டம்... அப்புறம் அது என்ன புதுப்பாக்கம் தீவா? அங்கே போய் குதிரை மேலே டொடக் டொடக்... டிஷ்யூம்... டிஷ்யூம்... அப்புறம் புதையல்....அப்புறம் அம்மாவைக் காப்பாத்தறது.... தாலத்து கட்டிக்கறது.... அடடா... அடடா..."

"நிறுத்துங்க ப்ரதர்... படம் ஜாலியா போவணும்னு டைரக்டர் சார், ஒரு பொதையல், அதை எடுக்க நாலு பேர் போறாங்க... போன எடத்திலே கொள்ளைக் காரங்ககிட்ட மாட்டி சண்டை போடறாங்க... அப்புறம் பொதையலைக் கௌப்பறாங்க... அந்தப் பொதையலை அந்த ஊர் ஜனங்களே பங்கு போட்டுக்கறாங் கன்னு கதை உட்டிருக்காரு.... கடைசி ஸீன்லே என்ன ஒரு சோஷலிஸ்டிக் டச் குடுத்திருக்காரு...."

"அட போய்யா... உட்டா மேலே மேலே பேசிட்டே போவிங்களே... இப்ப நீங்க சொன்னது ஒரு கதை... அதை நாங்க வந்து உக்காந்து பாக்கணும்... உறியில பானையாம்... பானையிலே வெப்பாம்... வெப் மேல தண்ணியாம்... தண்ணியை உறிஞ்சிட்டு வெப்பை ரவீந்தர் எடுப்பாராம்... சரியான அம்புலிமாமா கதைய்யா..."

"கார்வார், கோவாவ்லாம் போய் எடுத்திருக்கோமே... அதைப்பத்தி ஒரு வார்த்தை?"

"பீச்ல குதிரைங்க ஓடி வரப்ப பட்சிங்கள்லாம் படபடன்னு மேலே கிளம்பி பறக்குது பாருங்க... பரவாயில்லே. அப்படியே இங்கிலீஷ் படமாட்டம் ஒரு பிரமையைக் கொடுக்குது... மத்த லொகேஷன்லாம் ஒண்ணும் ஒத்துக்கறா மாதிரி இல்லே".

"ரவீந்தர் சார் பத்தி ஒரு வார்த்தை கூட சொல்லலையே..."

"என்ன வாராரு.... அலட்டிக்கறாரு.... சண்டை போடறாரு.... அப்புறம்... ஹஹ்ஹா... ஹஹ்ஹஹ் ஹா... ரொம்ப தமாசுங்க அந்த விஜயகுமாரு... கொள்ளைக் கூட்டத் தலைவன் தம்பியாம்... குதிரை மேல வாராரு... போறாரு... மொறைக்கிறாரு... ஒரு பக்கம் நெனைச்சா பாவமா இருக்குது... ஒரு பக்கம் நெனைச்சா... ஹஹ்ஹா... ஹஹ்ஹஹ்ஹா... அஹ்... அஹ்... அஹ்..."


"சிரிச்சு சிரிச்சே பொக்குனு போய்டப் போறீங்க... நிறுத்துங்க.... பாட்டெல்லாம் எப்படி?"

"ஒரு பாட்டு ஜெயமாலினிக்கு... ஒரு பாட்டு அனுராதாவுக்கு... ஒரு பாட்டு குடியும் கூட்டியுமா இருக்கறப்ப... அப்பல்லாம் பாட்டை எவன் கேப்பான்... அந்தவேட்டைாங்...இரவிலேநிலவிலே...பரவாயில்லே... ம்யூஸிக் யாரு... ஸங்கர் — கணேஷா... ம்... அவங்களும் அப்படி இப்படின்னு ஒரு பாட்டாவது தேத்திடறாங்க...."

"அப்புறம்...."

"இந்தப் படத்துக்கு இவ்வளவு சொன்னதே ஜாஸ்தி... மொதல்ல இந்த டைரக்டர் ராம நாராயணை ஆறுமாசம் ஹாலிவுட்டுக்கு நாடு கடத்தணும்... டெக்னிக் எல்லாம் கத்துகிட்டு வாங்கன்னு சொல்லணும்... என்ன சொல்றீங்க.... ஹலோ... ராதாரவி... ஹலோ.. ராதாரவி... ஹலோ... ஹலோ..."

"டொடக்".



ஹைட்பார்க் பேச்சு — 2

"'இன்றைய இளைஞர்கள் நாளைய தலைவர்கள் — இன்றைய குழந்தைகள் நாளைய மன்னர்கள்' — இப்படியே எல்லாப் பெரியவர்களும் சொல்லிவிட்டுப் போய்விட்டார்கள். ஆனால் இதுவரை 'உலகம் இளைஞர்கள் கையில்' என்று சொன்ன எந்தப் பெரியவரும் இளைஞர்கள் கையில் கொடுத்ததாகத் தெரியவில்லை. எனவே இளைஞர்களே, இனி அதை நாமே எடுப்போம்; முடிவில் நம் குழந்தைகளுக்கும் கொடுப்போம், வாருங்கள்!

சென்னை— 50, பாலசீனிவாசன்.

"அமெரிக்காவைக் கண்டுபிடித்தது தமிழர்களே!"



அமெரிக்காவை முதன் முதலில் கண்டு பிடித்தவர் கொலம்பஸ் என்பதுதான் இது வரை நாம் படித்த வரலாற்றுப் பாடம். ஆனால், கொலம்பஸுக்கு முன்னாலேயே — அமெரிக்காவை முதன் முதலில் கண்டுபிடித்தது நமது தமிழர்கள்தான் என்று அடித்துச் சொல்கிறார் சென்னை பொது மருத்துவமனையிலுள்ள பெர்னாட்—ரேடியாலஜி கான்ஸர் இன்ஸ்டிடியூட்டின் இயக்குனராகப் பணியாற்றி ஓய்வு பெற்ற டாக்டர் ஜி. ஸ்ரீனிவாசன்.

"அமெரிக்காவிலிருந்து வெளி வரும் விஞ்ஞான வார — மாத இதழ்களையெல்லாம் நான் ஆர்வத்தோடு விரும்பிப் படிப்பேன். அப்படித்தான் கடந்த 83 — ஆம் ஆண்டு ஜூலை மாதமும் சயின்டிபிக் இதழைப் படித்துக் கொண்டிருந்தேன். அதில் ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு தென் அமெரிக்காவில், இருந்ததாகக் கருதப்படும் 'இங்கா நாகரிகம்' என்ற கட்டுரையைப் படித்த போது, அதில் ஏராளமான சொற்கள் தமிழ்ச் சொற்களைப் போலவே இருந்தது எனக்கு ஆச்சரியமாகப் போய்விட்டது. ஆர்வத்தோடு துருவினேன்!

'இங்கல்' என்றால் நுழைதல் — ஊடுருவல் என்று சைவசித்தாந்தக் கழகத் தமிழ் அகராதி பொருள் கூறுகிறது. அப்படியானால் தமிழர்கள் அங்கே ஊடுருவியதால்தான் — நுழைந்ததால்தான் அந்த நாகரிகத்திற்கே 'இங்கா நாகரிகம்' என்று பெயர் வந்திருக்க வேண்டும் என்று ஏன் சொல்லக் கூடாது? அதே போல அங்குள்ள ஒரு நாட்டுக்குப் 'பெரு' என்று பெயர். அதாவது தமிழர்களின் நாகரிகத்தைப் பெற்றுக் கொண்டதால்தான் அது 'பெறு'வாகிப் பின் திரிந்து 'பெரு' நாடாக ஆகியிருக்க வேண்டும் என்றும் முடிவு செய்தேன்.


"அந்தக் கட்டுரையின் ஓரிடத்தில் 'மச்சு பிச்சு' என்று காணப்பட்டது. மச்சு பிச்சு என்பது ஒரு மலைக் கோட்டையின் பெயர். பெரு நாட்டிலிருந்த அந்த மலைக்கோட்டையின் விவசாய நிலங்களை அதிகரிப்பதற்காக, நிலத்தை மச்சுப் படிகளைப் போல அதாவது மாடிப் படிகளைப் போல அமைத்து பயிரிட்டு வந்தார்கள். பிச்சு என்றால் தமிழில் பைத்தியம் என்று அர்த்தம். அந்தக் கோட்டையின் தலைவன் மச்சுக் கட்டுவதில் பைத்தியமாக இருந்ததால்தான் அந்தக் கோட்டைக்கு 'மச்சு பிச்சு' என்று பெயர் ஏற்பட்டிருக்க வேண்டும் என்பது எனது கருத்து. அதிலேயே நான் கண்ட இன்னொரு தமிழ்ச் சொல் கொல்லபாதா! மேற்கூறிய மச்சுப்படி வயல்கள் மலைக் கோட்டை வீடுகளின் பின்புறம் அமைக்கப்பட்டிருக்க வேண்டும். பின்புறத்தை நாம் "கொல்லை" என்கிறோம். அந்த வயல்கள் வீடுகளின் பின்புறம் அமைந்திருந்ததால்தான் அதற்குக் 'கொல்லபாதா' என்றும் பெயரிட்டிருக்க வேண்டும் என்று உறுதிப் படுத்திக் கொண்டேன்.

"எப்படித் தமிழர்கள் அந்தக் காலத்திலேயே தென் அமெரிக்காவுக்குப் போயிருக்க முடியும்? கிழக்கு ஆசியாவுடன் கடல் வாணிபம் செய்வதற்காக எகிப்திலிருந்து வந்த கப்பல்களை விட தென்னிந்தியத் துறைமுகங்களிலிருந்து வந்த கப்பல்களே மிக மிகப் பெரியவை என்று கி. பி. 75 — ல் எழுதப்பட்ட பெரிப்ளூஸ் என்ற நூலே கூறுகிறது. இதைவிடவும் நமக்கு இன்னும் என்ன ஆதாரம் வேண்டும்?

"இப்படிப் பல்வேறு ஆதாரங்களையும், அந்த மொழியோடு தொடர்பு கொண்ட இரு நூற்று அறுபத்தியொரு தமிழ்ச் சொற்களையும் கண்டுபிடித்துத்தான் 'ஆதி அமெரிக்காவில் பண்டைத் தமிழனின் பாதச் சுவடுகள்' என்ற தலைப்பில் ஒரு புத்தகத்தையே எழுதியிருக்கிறேன். விரைவில் வெளியிடவும் போகிறேன். அமெரிக்காவை முதன் முதலில் கண்டு பிடித்தது தமிழர்கள் என்பதில் எனக்குத் துளியும் சந்தேகமில்லை. அப்படிச் சந்தேகப்படுபவர்கள் யாராவது இருந்தால் அவர்களோடு விவாதிக்கவும் தயாராக இருக்கிறேன்!" என்று ஆணித்தரமாகக் கூறுகிறார் டாக்டர் ஜி. ஸ்ரீனிவாசன்.

அவருடைய ஆராய்ச்சி முடிவுகள் உண்மையில் சரியானவைதானா? வரலாற்று நிபுணர்களும், அறிஞர் பெருமக்களும்தான் சொல்ல வேண்டும்.

சந்திப்பு: **அமுதன் மைந்தன்**



அமெரிக்காவில் நடக்கும் இந்தியக் கலை விழாவில் தமிழ்க் கலைகள் இடம் பெறாதது ஏன்? — அரங்கநாயகம் கோபம்



கல்கி

1985 ஜூன் 23
மலர் 43 இதழ் 47
குரோதன ஆனி 9



கடவுள் பெற்ற வரம்!

கடவுள்தான் பக்தர்களுக்கு வரமளிப்பார் என்று படித்திருக்கிறோம்; கடவுளுக்கே வரமளித்திருக்கிறார் வீரப்பன்! அறநிலையங்கள் பாதுகாப்புத் துறை அமைச்சர் சட்டசபையில் பேசும்போது, 'குத்தகைக்காரர் சட்டத்திலிருந்து கோயில் நிலங்களுக்கு விதிவிலக்கு அளிக்க,மசோதா சீக்கிரமே தாக்கலாகும்' என்று உறுதி அளித்திருக்கிறார்.

'பெரும்பணக்காரர்கள் மட்டுமின்றி எத்தனையோ அடித்தள, நடுத்தர மக்கள் கூடத் தங்கள் அற்ப சொற்ப நிலத்திலிருந்து குத்தகை பெற முடியாமலும் குத்தகைதாரரை வெளியேற்ற முடியாமலும் பெரு நஷ்டத்துக்குள்ளாகி நலிந்து கிடக்கக் கடவுளுக்கு மட்டும் விதிவிலக்கா?' என்று கேட்பதற்குப் பதில், 'ஏதோ கடவுளுக்காவது விதிவிலக்கு கிடைத்து அவரேனும் சௌக்கியமாய் இருந்தால் சரி' என்று மனத்தைத் தேற்றிக் கொள்ள வேண்டியதுதான்.

உழுபவனுக்கே நிலம் என்ற தன் அறிவிக்கப்பட்ட கொள்கையிலிருந்து அரசு பின் வாங்குவதாகக் கம்யூனிஸ்டுகளின் குற்றச்சாட்டுக்குப் பதிலளிக்கும் முகமாக அமைச்சர், 'உழுபவனை மட்டுமே எண்ணிப் பார்த்துக் கொண்டிருக்காதீர்கள்; பல கோயில்களில் பணியாற்றுவோருக்குச் சொற்ப ஊதியம் கூடத் தர முடியாதபடி பல கோயில்கள் நலிவுற்றிருப்பதையும் அந்த ஊழியர்களின் துயரையும் கொஞ்சம் கருத்தில் கொள்ளுங்கள்' என்றார். குத்தகைதாரரிடமிருந்து 25 சதம் விளைச்சல்தான் குத்தகையாக எதிர்பார்க்கப்படுகிறது என்பதையும் தெளிவுபடுத்தினார். வரப் போகும் புதிய சட்டம் க்ஷீண திசையில் உள்ள பல கோயில்கள் அடியோடு நசித்துப் போகாமல் காக்கும்.

ஹிந்து அறநிலையப் பாதுகாப்புத் துறையின் மான்யக் கோரிக்கை மீதான விவாதத்தின்போது, 'அமாவாசை பற்றி அப்துல் ஸமது என்ன பேச இருக்கிறது?' என்று தம்மைத் தாமே கேட்டுக் கொண்டு பேச ஆரம்பித்த முஸ்லீம் லீக் தலைவர், நிறையவே பேச முடியும் அதையும் அர்த்தமுள்ளதாகச் செய்ய முடியும் என்று நிரூபித்திருக்கிறார். ஆக்கபூர்வமாகவும் சட்டசபை பேச்சுக்கள் எப்படி அமைய வேண்டும் என்பதற்கு முன்மாதிரியாகவும் அமைந்த பேச்சு.

மாநிலத்தில் உள்ள கோயில்கள் பற்றிய அகரவரிசைப் பட்டியல் முக்கிய விவரங்களோடு தயாராக வேண்டும்; பழனியில் ஒரு ஹிந்துமத ஆய்வுக் கேந்திரம் உருவாகி ஹிந்து மதத்தின் பல்வேறு அம்சங்களை விவாதிக்கவும் ஆராயவும் வேண்டும் என்றெல்லாம் அவர் கூறிய யோசனைகள் ஒருபுறமிருக்க, முஸ்லீம் மன்னர்கள் எப்படி ஹிந்து கோயில்களை அமைத்தார்கள் என்பதையும் இந்து அரசர்கள் எவ்வாறு முஸ்லீம் தர்காக்களை எழுப்ப உதவினார்கள் என்பதையும் சரித்திர ஏடுகளிலிருந்து எடுத்து நினைவூட்டினார். இத்தகைய பரஸ்பர உதவியும் சமுதாய ஒப்புரவும்தான் இன்றையத் தேவை.

கோகுலாஷ்டமிக்கும் குலாம்காதருக்கும் சம்பந்தம் இருக்க முடியும் என்று நிலைநாட்டிய அப்துல் ஸமதையும் கடவுளுக்கு வரமருளிய வீரப்பனையும் வாழ்த்துகிறோம்.

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா—பாரதியார்.



* திரு. சிவந்தி ஆதித்தன்.

வருணனை வென்ற வாலிபால்

"ஜப்பானா? இந்தியாவா?—வெற்றி பெறப் போவது யார்?" என்பதே தமிழக வாலிபால் ரசிகர்களின் முன்னிருந்த மிகப் பெரிய கேள்விக்குறி. 'இரண்டு தரப்புக்கும் இல்லை; எனக்குத்தான்' என்பதுபோல் மழை கொட்டித் தீர்த்துவிட்டது! வருணனுடைய உக்கிரமான விளையாட்டுக்கு ஈடு கொடுக்க முடியாமல் வாலிபால் ஆட்டக்காரர்கள் மூலைக்கொருவராக ஓடத் தலைப்பட்டனர்!

இந்த டெஸ்ட் மாட்சைக் காண்பதற்கென்றே நெல்லை, மதுரை, கோவையிலிருந்தெல்லாம் வந்திருந்த வாலிபால் ரசிகர்களுக்கு ஒரே ஏமாற்றம். அந்த ஏமாற்றத்தினூடே 'மழை வெறித்து எப்படியாவது டெஸ்ட் தொடங்காதா? பார்த்துவிட மாட்டோமா?' என்றஎதிர்பார்ப்பு. ஈரம்சொட்டச் சொட்ட காலரியில் உட்கார்ந்த இடத்தை விட்டு அசையாமல் இருந்தனர்.

"என்னவோ வளர்ச்சி வளர்ச்சி என்கிறார்கள். தமிழகத் தலைநகரிலே ஒரு மல்டிபர்பஸ் இன்டோர் ஸ்டேடியம் கூட இல்லை. விளையாட்டுத்துறை இந்த அளவுக்கு அலட்சியப்படுத்தப்பட வேண்டாம்" என்பது போன்ற விமர்சனங்கள், முணுமுணுப்புக்கள்.


காலரி பலகைகளுக்கு அடியில் சில ஜப்பானிய ஆட்டக்காரர்கள் முடங்கிக்கொள்ள, வெகுவேகமாக ஓடிய இந்திய காப்டன் ஜிம்மி ஜார்ஜ், நகரசபை விளையாட்டுக் காரியாலயத்தினுள் மழைக்கு ஒதுங்கினார். நானும் அவர் பின்னால் ஓடினேன் — மாட்ச் தான் பார்க்க முடியவில்லை; அவர் பேட்டியாவது கிடைக்கட்டுமே என்றுதான்.

ஜிம்மி ஜார்ஜ் தலையைத் துவட்டிக்கொண்டே பேசினார்.

"ஜிம்மி! அயல்நாடுகளில் ரொம்ப காலம் தங்கினீர்கள் போலிருக்கே...?"

"ஆமாம். 1974-ல் டெஹ்ரானிலும் 1978-ல் பாங்காக்கிலும் நடைபெற்ற ஆசிய விளையாட்டுப்பந்தயங்களில்வாலிபால் ஆட்டத்தில் கலந்து கொண்டேன். 1979-ம் ஆண்டில் துபாய் போய்ச் சேர்ந்தேன். அங்கே மூன்று வருஷங்கள் ஒரு கிளப்பில் புரொபஷனல் ஆட்டக்காரராக இருந்து நிறைய சம்பாதித்தேன். மேலும் இரண்டு வருஷங்கள் இத்தாலியில் ஒரு கிளப்புக்கு புரொபஷனல் ஆட்டக்காரராக ஆடினேன். அப்புறம் தாயகம் திரும்பிவிட்டேன். இப்போது கேரளத்தில் உதவி போலீஸ் சூப்பரின்டெண்டாகப் பதவி வகிக்கிறேன்."

* சென்னை நகரசபை ஸ்டேடியத்தில்.





• வெற்றி பெற்ற அணியை வாழ்த்துகிறார் சபா நாயகர் பாண்டியன்.

அப்போது பிரதம கோச் பி. வி. மணி வந்து "ஜிம்மி, மாட்ச் நாளைக் காலை ஏழரை மணிக்கு நடக்கும். மழையினால் பாதிக்கப்பட்ட மைதானத்தை பெட்ரோல் விட்டு எரித்து இரவோடு இரவாக சரிப்படுத்தி விடலாம்" என்றார்.

அதேபோல் டெஸ்ட் மாட்ச் நிர்வாகிகள் பிரபாகரனும் ஜானும் செயல்பட்டார்கள். ரயிலிலும் பஸ்ஸிலும் பல நூறு மைல்கள் பயணம் செய்து வந்திருந்த ரசிகர்களுக்கு மறுநாள் காலை மாட்ச் காணலாம் என்றதும் சற்று ஆறுதல்.

* * * * *

ஜப்பான் வாலிபால் ஆட்டத்தில் உலகில் சிறந்த நாடுகளுள் ஒன்று. 1972-ல் ஒலிம்பிக் சாம்பியன். 1982-ல் ஆசிய வாலிபால் போட்டியில் தங்கப் பதக்கம். தற்போது இந்தியா வந்துள்ள இளைஞர் டீம் ஜப்பானில் மூன்றாவது இடம் வகிக்கிறது. காப்டன் ஜோஷி முரகாமி. ஜப்பானிய புகையிலை (சிகரெட்) நிறுவனத்தின் பொருளாதார உதவியோடு இங்கு வந்திருக்கிறது. நமது தரப்பில் இதற்கு முயற்சி எடுத்துக் கொண்டவர்... வேறு யார்...? வாலிபால் ஃபெடரேஷன் தலைவர் சிவந்தி ஆதித்தன்தான்.

ஜூன் 12ல. அதிகாலையில் நடந்த மாட்ச் இந்தியாவின் ஆட்டத்திறமையை நிரூபித்தது. ஸ்கோர் 18—16; 16—14; 15—4. வாலிபால் ரஸிகர்களுக்கு நல்லதோர் ஆட்டத்தைக் கண்டதில் பரம திருப்தி.

வாலிபால் ஃபெடரேஷன் தலைவர் சிவந்தி ஆதித்தன் ஜானைப் பாராட்டினார். நெல்லை நண்பர்கள் சங்கத்தைச் சேர்ந்த ஜான், சப்-இன்ஸ்பெக்டர் உத்தியோகம் வகித்தாலும் அவருக்குச் சதா வாலிபால் ஆட்டத்தின் மீது ஒரு கண். வாலிபால் திறமை குடிசைகளில் வாழ்ந்தாலும் தேடி கண்டுபிடித்து வெளிக் கொணர்ந்து பிரகாசிக்கச் செய்வார். ஜப்பானை வென்றது இந்தியா எனினும் வருணனை வென்று மாட்சை வெற்றிகரமாக நடத்தித் தந்தவர் ஜான். எனவே வாலிபால் ரஸிகர்கள் வாங்கித் தந்த பொன்னாடையை அவருக்கு பெடரேஷன் தலைவர் போர்த்திக் கௌரவித்த போது ரசிகர்கள் பந்து போல் துள்ளியதில் வியப்பில்லை!

—குண்டுமணி.

ஹைட்பார்க் பேச்சு — 3.

மருந்துக் கடைகள் ஏராளமாகப் பெருகியிருந்தாலும் மருந்துகளின் தரம் என்னவோ சந்தேகத்திற்குரியதாகத்தான் இருக்கிறது. சில குறிப்பிட்ட மருந்துகளைக் குளிர்சாதனப் பெட்டியில்தான் வைத்திருக்க வேண்டும். ஆனால், அப்பெட்டிகளில் மருந்துகளை வைத்திருந்தாலும் அந்தப் பெட்டிகளில் குளிர் ஊட்டம் செய்வதில்லை. கேட்டால் மின்சார வெட்டு என்கிறார்கள். இந்த நிலையில் ஏன் ஒவ்வொரு மருந்துக் கடையிலும் ஜெனரேட்டர் இருந்தே ஆக வேண்டும் என்று சட்டம் கொண்டு வரக் கூடாது?

போடிநாயக்கனூர். மூ. ரமேஷ்குமார்



பிராமணர் ஒருவர் கலைஞருக்காகத் தீக்குளித்தது பற்றி...?

* எஸ். பிரபா, காரைக்குடி.

? இலங்கை ஜனாதிபதி ஜெயவர்த்தனாவும், ராஜீவ் காந்தியும் சந்தித்துப் பேசிக் கொண்டதில் ஏதாவது முன்னேற்றம் ஏற்படுமா?

! அதுதான் ஒருபுறம் பேச்சு வார்த்தை நடத்திக் கொண்டேயிருக்க, மறுபுறம் தமிழர்கள் கொல்லப்பட்டுக் கொண்டே இருக்கிறார்களே! இதைவிடவும் என்ன முன்னேற்றம் வேண்டும் உங்களுக்கு?

* ஏ. ஜானி, நடுக்கடை

? எனக்கு நிறையப் பணம் தேவைப்படுகிறது. அதனால் நான் அரசியலில் குதித்து விடலாம் என்று இருக்கிறேன். சரிதானா?

! அதைவிட நர்ஸரிப் பள்ளி ஒன்று தொடங்குங்களேன். ஏராளமாகச் சம்பாதிக்கலாம்!

* பா. கிருஷ்ணதாஸ், கும்பகோணம்.

? 'மந்திர தந்திர வழிபாடுகள் மூலம் பிரதமர் பதவியை அடைய என். டி. ஆர். முயற்சி செய்கிறார்' என்று மத்திய அமைச்சர் அஞ்சையா குற்றம் சாட்டியிருக்கிறாரே?

! இப்போது என். டி. ஆர். நடத்தும் வழிபாடுகளைப் பற்றி அஞ்சாமல் பேசும் அஞ்சையா, முன்பு எத்தனையோ முறை இந்திரா காந்தி ரகசியமாக நடத்திய பூஜைகளைப் பற்றி வாயே திறக்கவில்லையே. ஏன்?

* வலங்கை ஜி. ராஜசேகர், வளையமாபுரம்.

? ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காணலாம். பணக்காரனின் சிரிப்பில்?

! ஏழையின் கண்ணீரைக் காணலாம்.

* சுமாலி, மேலப்பாலையூர்.

? ஆர். எம். வீரப்பனும், திருநாவுக்கரசும் ஒரே மேடையில் தோன்றிவிட்டார்களாமே?

! அதனால், இந்தத் தேசத்தின் எந்தப் பிரச்னை தீர்ந்து விடப் போகிறது என்று நினைக்கிறீர்கள்?

* ரா. ஜோதிராமன், நெல்லிக்குப்பம்.

? இன்றைய இளைஞர்களைக் கெடுப்பதில் சினிமாவும், பத்திரிகைகளும் பாதிபாதி பங்கு போட்டுக் கொள்கின்றன என்னும் குற்றச்சாட்டை ஒப்புக் கொள்கிறீர்களா?

! மனப்பூர்வமாக ஒப்புக் கொள்கிறேன்.

* உ. அசோக்பாபு, மணப்பாறை.

? ஜெயலலிதா இப்படித் திடீரெனச் சப்தமின்றி அடங்கியிருப்பதன் மர்மமென்ன?

! இப்போதுதான் அவர் தம்மைத் தாமே புரிந்துகொண்டிருக்கிறார் நிச்சயமாக இந்தப் புலி பதுங்குவது பாய்வதற்காக அல்ல.

* குமரி ஜெய், சென்னை— 5.

? ராதிகா. பாக்யராஜை மணக்கப் போகிறாராமே?

! அதுபற்றிக் கவலைப்பட வேண்டியவர்கள் பிரதாப்பும், பூர்ணிமாவும்தானே!

* வி. இராஜாராமன், அம்மாசத்திரம்.

? தமிழ் நாட்டிற்கு மேலவை அவசியம் தானா?

! பதில் ஒன்று: ம. பொ. சி. யின்மேல் உங்களுக்கு அப்படியென்ன கோபம்?

! பதில் இரண்டு: எந்த நோக்கத்திற்காக நமது அரசியல் சாசனத்தை வகுத்தவர்கள் மேலவையை உருவாக்கினார்களோ, அந்த நோக்கங்களையெல்லாம் நமது அரசியல்வாதிகள் உடைத்தெறிந்து விட்டார்கள். இந்த நிலையில் மேலவை அவசியமில்லைதான்! அதன் பழைய மதிப்பு திரும்ப வழங்கப்படுமானால் அதனால் உபயோகம் உண்டு.

* பத்ம. சுப்பிரமணியன், நீடாமங்கலம்.

? குடும்பநலத் திட்டத்தில் பண்ருட்டியாரும், தலைமைச் செயலாளரும் முரண்படுவது பற்றி....?

! ஒரு பொறுப்பு வாய்ந்த அமைச்சர், குடும்ப நலத் திட்டத்திற்கு எதிராகப் பேசியிருப்பது — 'இலங்கையில் தமிழர்கள் சாகடிக்கப்பட்டுக் கொண்டேயிருப்பதால் இங்குள்ள தமிழர்கள் குடும்பக்கட்டுப்பாடு செய்து கொள்ளாமல் குழந்தைகளைப் பெற்

* ரூ 10 பரிசு பெறுபவர்:
எஸ். சிவராஜ்,
8, உப்புக்காரத் தெரு,
மன்னார்குடி — 614 001.

– தராசு

றுக் கொண்டே இருக்க வேண்டும்' என்று பேசியிருப்பது — அபத்தத்திலும் அபத்தம். தமிழகம் முழுவதற்கும் மின்வெட்டைக் கொண்டு வந்திருக்கும் அமைச்சர், தமது அபத்தமான பேச்சுக்களுக்கு முதலில் வெட்டுக் கொண்டு வந்தால் நல்லது.

* சி. ராமகோபால், சென்னை— 33.

? அண்ணாசாலையிலுள்ள பெரிய சுரங்கப் பாதையில் கடந்த சில நாட்களாக விளக்கே எரிவதில்லை, பார்த்தீரா? எதிரெதிரில் வரு பவர்கள் முட்டிக் கொள்ள வேண்டியது தானா?

! கவனித்தேன். முட்டிக் கொள்வதிலும் ஒரு சுகம் இருக்கத்தான் செய்கிறது. ஆனால் அது யாரோடு முட்டிக் கொள்கிறோம் என்பதைப் பொறுத்து இருக்கிறது!

* கி. நரசிம்மன், திருவையாறு.

? நீங்கள் சென்னை நகர ஷெரீப்பானால் என்ன செய்வீர்கள்?

! பத்திரிகைகளுக்குப் பேட்டி கொடுப்பேன். அதைவிட வேறு என்ன செய்துவிட முடியும்?

* எஸ். சிவராஜ், மன்னார்குடி*

? இந்திரா வசித்த இடமும், இறந்த இடமும் நினைவுச் சின்னமானது பற்றி....

! இந்த விஷயத்தில் நாம் பிரிட்டிஷாரிட மிருந்து கற்றுக் கொள்வதே நாகரீகம். அங்குள்ள நம்பர் பத்து, டௌனிங் வீதி வீட்டில் யார் பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்களோ அவர்கள் வசித்துக் கொண்டே வருகிறார்கள்; இன்று வரை! பிரிட்டிஷாரால் மிக உயர்வாகப் போற்றப்படும் சர்ச்சிலும் அங்கேதான் குடியிருந்தார். ஆனாலும் அது சர்ச்சிலின் நினைவுச் சின்னமாகிவிடவில்லை. எப்போதும் பிரதமர் இல்லமாகவேதான் இருந்து வருகிறது. அதுபோல் டெல்லியிலும் கடைப்பிடிப்பதுதான் நல்லது.. இந்திரா காந்திக்கு நினைவுச் சின்னம் அமைத்தே ஆக வேண்டும் என்றால், அவர் பிறந்து வளர்ந்த சொந்த வீட்டை ஆக்க வேண்டுமே தவிர, அரசாங்க வீட்டை ஆக்கக் கூடாது.

* கோ. சாம் தர்மராஜ், ஸ்ரீவல்லிப்புத்தூர்.

? ஒரு நாட்டின் சுபிட்சம் ஜனத்திரட்சியில் இருக்கிறதா அல்லது ஜனக் குறைப்பில் இருக்கிறதா?

! மக்கள் தொகை எவ்வளவாக இருந்தாலும் அவர்கள் அனைவரின் சக்தியையும் பயன்படுத்தி நாட்டை முன்னேற்றும் தி[illegible]ங்கள் தான் நிஜமான திட்டங்கள். மக்கள் தொகை அதிகமானாலும் சுபிட்சமாக வாழும் நாட்டிற்கு உதாரணம்: செஞ்சீனா.

* என். செந்தில்குமார், மயிலாடுதுறை — 1.

? பிராமண வகுப்பைச் சார்ந்த ஒருவர் கலைஞருக்காகத் தீக்குளித்தது பற்றி...?

! யாருக்காக யார் தீக்குளித்தாலும் அது அநாகரீகம்தான். அதிலும் ஜாதியை இழுத்துப் பெருமை தேடுவது அதைவிட அநாகரீகம்.

* சி. சுப்பு, தேரழுந்தூர்.

? சட்டசபைக் கூட்டங்களில் பல எதிர்க்கட்சிகள் இனிக் கலந்து கொள்ள மாட்டோம் என்று அறிவித்திருக்கிறார்களே, சரிதானா?

! அந்த அறிவிப்புக்குக் காரணம் எதுவானாலும் நியாயம் அல்ல; அவர்களைத் தேர்ந்தெடுத்து அனுப்பிய மக்களுக்கு அவர்கள் காட்டும் மரியாதையும் அல்ல!

* வி. ரவிகுமார், லால்குடி — 1.

? தங்களின் குரு யார்?

! இந்த விஷயத்தில் எனது முழுமையான ஆதரவு ஜே. கிருஷ்ணமூர்த்திக்கே. அவர் பேச்சுக்களில் பெரும்பாலானவை புரியாது, அல்லது பெரும்பாலானவர்களால் புரிந்து கொள்ள முடியாது,என்றாலும் 'நமக்குக் குரு நாமேதானே தவிர, வெளியிலிருக்கும் வேறு யாரும் நமக்குக் குருவாக இருக்க முடியாது' என்ற அவரின் தத்துவம்(?) கோடி பெறும்!

* கோ. சு. சுரேஷ், கோவை — 9.

? அதிகமான மொழிப் பற்று கூடச் சில சமயம் நாட்டின் ஒற்றுமையைப் பாதிக்கிறது என்பதை ஒப்புக் கொள்கிறீர்களா?

! மொழிப் பற்று எத்தனை அதிகமானாலும் பாதகமில்லை. பற்று கொஞ்சம் வெறியாக மாறிவிட்டாலும் தேச ஒற்றுமைக்கு நிச்சயம் ஆபத்துத்தான்.

* எம். அசோக்ராஜா, அரவக்குறிஞ்சிப் பட்டி.

? அடக்குவது, அடங்குவது — இரண்டில் எது உத்தமம்?

! அடக்கியாளும் திறமை யாருக்கு வரும்? அடங்கிப் போகத் தெரிந்தவர்களுக்குத் தான் வரும் என்று பெரியவர்களே சொல்லியிருக்கிறார்கள்.



J. K.

* ஜெயவர்த்தன. [illegible]. * திருநாவுக்கரசு. * பிரதாப. * பூர்ணிமா. பண்ருட்டி. * இந்திரா

காதலில் வெற்றி பெற்று வாழ்க்கையை எழுத வா!

வாலிபத்தின் வாசலில் நிற்பவனே! வா!

உன்னோடு பாதி வார்த்தைகளால் பேச வேண்டிய ஒரு விஷயத்தை முழு வார்த்தைகளால் பேசவிருக்கிறேன். முகம் சுழிக்காதே.

காதல் என்பதைப் பற்றி நீ கொண்டிருக்கும் கருத்து யாது?

காதல் தோல்வி எனில் அதற்கு என்ன பொருள்?

ஒருவன் அல்லது ஒருத்திக்கு இரண்டு மூன்று காதல்தோல்விகள் இருக்கின்றனவே. எப்படி?

அப்படியாயின் — அது காதலா அல்லது விழியிழந்த ஒருவரை கண்ணாயிரம் என்று கூப்பிடுவது மாதிரி ஏதோ ஒன்றுக்கு நாம் காதல் என்று நாகரிகமாக நாமகரணம் சூட்டியிருக்கிறோமோ?

இனிய இளைஞனே!

இப்படி உன்னை நீயே கேள்விகளால் துளைத்துக் கொண்ட பிறகு —

இமைக் கதவுகளைச் சாத்திவிட்டு, சிந்தனை ஜன்னல்களைத் திறந்து வை.

இரண்டு உடல்கள் சங்கமிக்கச் செய்து கொள்ளும் கற்பனை முயற்சிகள் அல்ல. காதல் —

காதலில் — அந்தச் சங்கமம் மிக முக்கியமான அம்சமெனினும் முதல் அம்சமன்று.

உணர்ச்சிகள் ஆரம்பித்து வைக்க, அறிவு வந்து முடித்து வைப்பதுதான் காதல்.

உணர்ச்சிகளில் ஆரம்பித்து, உணர்ச்சிகளிலேயே முடிந்து போவதற்கு வேறு பெயர் இருக்கிறது.

காதல் என்பது உள்ளங்களால் முன்மொழியப்பட்டு உடல்களால் வழிமொழியப்பட வேண்டும்.

ஒருவரை ஒருவர் புரிதல்தான் காதல்.

ஆனால், நம் இளைஞர்கள் காதல் என்ற வார்த்தைக்கு அவரவர்களுக்கு ஏற்ற அர்த்த முலாம் பூசி வைத்திருக்கிறார்கள்.

இருபது வயதுக்குள் சிலர் ஏழெட்டுக் காதல் தோல்விகளுக்கு ஆளாகிவிடுகிறார்கள்.

இனிய இளைஞனே!

உன் தோளைத் தொட்டு உனக்குச் சொல்லுகிறேன் — அது காதலல்ல — மீசை முளைக்கும் பருவத்தில் அது மனசில் மையமிடுகிற ஒரு மர்ம உணர்ச்சி.

தெரியாத ஒன்றைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற கிறுக்கு உணர்ச்சியின் கிளர்ச்சி.

மீசை என்பது விதைக்காமலே முளைக்கிறதல்லவா? அந்த உணர்ச்சியும் அப்படித்தான்.

அது ஒரு பருவக் காற்று; வீசியே தீரும்.

இளைஞனுக்கு யுவதியும், யுவதிக்கு இளைஞனும் புதிராகத் தோன்றுகிற பொல்லாத வயது அது.

அந்த நேரத்தில் மனமென்னும் பந்து முகவரி தெரியாமல் முட்டி மோதுகிறதே — அந்த அவஸ்தைக்குக் காதல் என்று பெயர் சொல்லுவது பிழை.

நிகழ்காலத்தின் பெரும்பாலான இலக்கியங்களும், கலைகளும் அந்த அவஸ்தையைத்தான் காதலென்று அழைக்கின்றன.

இதனால் விளைவு விபத்தாகி விடுகிறது.

இளைஞனின் வாழ்வில் ஒரு வெளிச்சமான பிரதேசம் இருண்டு விடுகிறது.

இவனாகவே ஒருத்தியை மனதில் வரித்துக் கொண்டு, மனசுக்குள் அவளைச் சிலை செதுக்கி, தனது நந்தவனமெங்கும் ஒரு பொய்க்காகப் பூத்தொடுத்து — பிறகு தன்னோடு தானே யுத்தம் நடத்தி — தன்னோடு தானே தோற்றுப்போய் — சின்ன தாய் தாடி வளர்த்து ஒரு சோக போதையோடு எறக்குறைய கவிதை எழுதி திரைப்படப் பாடல்களையெல்லாம் தன்னோடு சம்பந்தப்படுத்தி ஒரு குறிப்பிட்ட வயதில் ஒரு கூட்டம் வாழ்ந்து வருகிறது என்பது வருத்தத்திற்குரியது.

பேருந்தில் போன எவளோ ஒருத்தி எங்கேயோ பார்த்துச் சிரித்ததைத் தனக்காக்கிக் கொண்டு அவளைத் தேடித் தேடித் தெருத் தெருவாய் அலைந்து — மூளை கலங்கி — ஆடைகளைக் கிழித்துக் கொண்டு ஒரு நல்ல கவிஞன் தெருவோரம் பிணமாய்க் கிடந்தான் என்ற செய்தியை, பொய் சொல்லாதவர்கள் எனக்குச் சொல்லியிருக்கிறார்கள்.

எனவே இளைஞனே!

காதல் என்பது என்ன என்பதையும், ஆண் பெண் உறவு பற்றிய திட்டவட்டமான தீர்மானம் என்பதையும் உன் அறிவுக்குச் சொல்லிக் கொடுத்துக் கொண்டேயிரு.

இளைஞனே! நீ காதலில் தோல்வியுற்றுக் கவிதை எழுத வேண்டாம்!

காதலில் வெற்றி பெற்று வாழ்க்கையை எழுத வா!

வாரம் ஒரு கடிதம்

கவிஞர் வைரமுத்து



வட்ட மேஜை

ஈழப்பிரச்னையை மறந்துவிட்டுத் தங்களின் சொந்த விருப்பு — வெறுப்புகளில் கவனம் செலுத்தும் தமிழக அரசியல்வாதிகளையும், தமிழக அரசையும் 'தேவையற்ற உரசல்கள்' தலையங்கம் மூலம் நன்றாகத்தான் தட்டிக் கேட்டுள்ளீர்கள்.

சென்னை— 93. எஸ். சம்பத்குமார்.

கலைஞர் எத்தனையோ ஆதாரங்களைக் காட்டிய பிறகும், அரசு கொஞ்சமும் விட்டுக் கொடுக்காமல், சட்டமன்ற அலுவலக அறையைக் காலி செய்ததும் அல்லாமல், அது பற்றிச் சட்ட மன்றத்தில் கேள்வி கேட்ட அன்பழகனிடம், 'மக்கள் உங்களை ஒதுக்கி விட்டார்கள்; உங்களுக்கு இங்கு என்ன வேலை?' என்பது போன்ற வார்த்தைகளையெல்லாம் சபா நாயகர் பாண்டியன் பேசியிருப்பது வருந்தத்தக்கது. சபாநாயகர், சபாநாயகராகச் செயல்படாமல் ஓர் ஆளுங்கட்சி எம். எல். ஏ. வைப் போல நடந்து கொண்டது கண்டிக்கத்தக்கது. இது போன்ற சமயத்தில் தக்க பதில் தர சட்ட மன்றத்தில் கலைஞர் இல்லையே என்ற ஏக்கம்தான் ஏற்படுகிறது.

சென்னை— 81. எம். எட்வர்ட்.

ஒவ்வொரு வியாழக்கிழமை இரவும் எப்போது வரும் என்று எங்களை ஏங்க வைத்து வாசகர்களின் கேள்விகளுக்கு நகைச்சுவை ததும்பத் ததும்பப் பதிலளித்து வந்த பாலசந்தரின் 'நேரம் நல்ல நேரம்' நிகழ்ச்சி முடிந்து விட்டதை நினைக்கும்போது வருத்தம்தான் மேலிடுகிறது. நிகழ்ச்சியைச் சிறப்பாகத் தொகுத்தளித்து வந்த மௌலிக்குப் பாராட்டுக்கள்.

அரூர். மு. மதிவாணன்.

'நேரம் நல்ல நேரம்' பகுதியில் வெளியிட கமல், பாரதிராஜா போன்றோரின் புதிய புகைப்படங்களை கிடைக்கவில்லையா? அந்தக் கால புகைப்படங்களைப் போய்த் தேடிப் பிடித்து வெளியிட்டுள்ளீரே!

விருத்தாசலம். சீனி. ரவீந்திரன்.

'அன்பின் முகவரி' விமர்சனத்தில், நீண்ட நாட்களுக்குப் பிறகு நடித்த எஸ். எஸ். ஆரைப் பற்றி ஒரு வரி கூடக் குறிப்பிடவில்லையே!

சென்னை— 23. அயன்புரம் சிவாஜிபாபு.

'மயிரிழையில் உயிர் தப்பினேன்' உண்மைச் சம்பவங்கள் ஒவ்வொன்றும் உண்மையிலேயே மெய் சிலிர்க்க வைத்தன. பாராட்டுக்கள்.

சென்னை— 12. இரா. செல்வகுமார்.

சபாநாயகரா? ஆளுங்கட்சி எம்.எல்.ஏவா?



எம். ஆர். எம். அப்துர் ரஹீம் நூல்களைப் படித்துள்ளவர்கள் மட்டுமே அவரைப் பற்றி அறிய முடியும் என்பதை மாற்றி, எல்லோருமே அறிந்திடுங்கள் என்று கல்கி வாசகர்களாகிய எங்களுக்கு அறிவித்த ஆசிரியருக்கு மிக்க நன்றி.

சென்னை— 56. டாக்டர் நாவலர்தாசன்.

எங்களுக்கு என்ன பதில்? இளைஞர்கள் கேட்ட கேள்விகளுக்கு 'டக்டக்'கென்று பதில் சொல்லியிருக்கிறார் ஜனதா தலைவர் இரா. செழியன். அவர் சொன்ன ஒவ்வொரு பதிலும் நம்மைச் சிந்திக்க வைக்கின்றன.

தொழுதூர். சி. சுப்பு.

* ஓர் அகில இந்தியக் கட்சியின் பொறுப்பு வாய்ந்த தலைவர் என்ற முறையில் கல்வியின்மையை ஒழிக்கச் சரியான வழிமுறைகளை — செயல் திட்டங்களை — இளைஞர்களுக்கான ஆலோசனைகளைக் கூறாமல் மூந்நூறு ஆண்டுகள் ஆனாலும் கல்வியின்மை ஒழியாது என்று கூறி இளைஞர்களுக்கு மேலும் விரக்தியைப் போதிப்பது ஏன்? தயவு செய்து பிரச்னைகளைத் தீர்ப்பதற்கான ஒரு தீர்மானமான முடிவை இளைஞர்களின் முன் வையுங்கள்; வெறும் பேட்டிகளோடு நின்று விடாதீர்கள். இதைத்தான் நான் மிகவும் மதிக்கும், அனுபவம் மிக்க அரசியல் தலைவரான இரா. செழியன் அவர்களிடமிருந்து எதிர்பார்க்கிறேன்.

திருவாரூர். நா. பாலசுப்ரமணியம்

எல்லாப் பத்திரிகைகளும் சினிமா நட்சத்திரங்களை எட்டிப் பார்த்துக் கொண்டிருக்கும் இந்நாளில், தாங்கள் வானத்து நட்சத்திரங்களை எட்டிப் பார்த்திருப்பது, தங்களை வானளாவ உயர்த்தி விட்டது!

சென்னை— 5. குமரி ஜெய.

'கல்கி' 9.6.85 இதழில் 'தாரக பதில்கள்' பகுதியில் இடம் பெற்ற 'அரசாங்க வீட்டைக் காலி செய்ய மறுத்த ராஜ்நாராயணனுக்கு நேர்ந்த கதி....?' என்ற கேள்வியை அனுப்பியது நான்தான். ஆனால் என் பெயர் விடுபட்டு விட்டதே? ராஜ்நாராயணனை விட நான்தான் பரிதாபத்திற்குரியவன்!

கும்பகோணம். எஸ். வெங்கடேசன்.

தினசரி ஒரு காரட் சாப்பிடுங்கள் என்று துணுக்குப் போட்டாலும் போட்டீர்கள்... என் கணவரின் தொல்லையைத் தாங்க முடியவில்லை. அன்புத் தொல்லைதான்!

கோவை — 16. பொன். சாவித்திரி.

(* இக்குறியிட்ட கடிதம் பரிசு பெறுகிறது)

மௌனப் புயல்

11

தன்னுள் ஏற்பட்ட கூச்சத்தை மறைக்க ரஞ்சனி லேசாகச் சிரித்தாள்.

"உன் உபதேசத்தை ஞாபகம் வெச்சுக்கறேன்" என்றாள்.

மௌனமாக நடந்து அமெரிக்கன் சென்டரின் ஏர்கண்டிஷன்ட் கட்டிடத்திற்குள் நுழைந்து லைப்ரரியை அடையும் வரை ரமாவின் கேள்வி மனத்தில் சுழன்றது.

'ஹௌ ஸீரியஸ் இஸ் இட்?'

அவளுக்கே புரியவில்லை. ரமாவைப் போல் மையலும் கனவுப் பார்வையும் மன்மோஹன் ஸிங்கைப் பார்க்கும் போது ஏற்படாவிட்டாலும், இதுவரை அவள் பழகிய மற்ற ஆண்களிடம் ஏற்படாத ஒரு பாசமும் நேசமும் அவனிடம் ஏற்படுவதை மறுக்க முடியாது...

அது தீவிரமானதாகப் போகுமா? 'இப்ப இருக்கிற நிலைமையிலே அது உனக்கு நல்லதில்லே!'

ஏதோ அசரீரிவாக்குபோல ரமா தெரிந்து சொல்கிறாளா, தெரியாமல் சொல்கிறாளா என்று புரியவில்லை. இந்த நிலையிலேயே நெருக்கம் அதிகமாகிப் போனால்?

கடிவாளத்தை இழுத்துப்பிடித்து நிறுத்துகிற மாதிரி இந்த உணர்வுகளை இழுத்துப் பிடிப்பது சாத்தியமா?

வெளியிலிருந்தசூட்டிற்குப்பயந்து அடைக்கலம் தேடிவந்த கூட்டம் போல் வாசகசாலை நிரம்பி வழிந்தது.

"அதிகநேரம் இங்கே உட்கார வேண்டாம் ரஞ்சனி. புத்தகங்களை எடுத்துண்டதும் கிளம்பிடலாம். சீக்கிரம் திரும்பிடும்படி அப்பா சொல்லியிருக்கார்," என்றாள் ரமா மெல்லிய குரலில்.

என்ன காரணம் என்று ரஞ்சனி கேட்கவில்லை. கலவரம் ஏற்படலாம் என்கிற பயம் இருக்கும் ரமாவின் அப்பாவிற்கு.

சீக்கிரம் வீட்டிற்குத் திரும்பினால் நடராஜன் மாமாவிடம் மாட்டிக் கொள்வோம் என்று மெலிதாக எட்டிப் பார்த்த யோசனையை அப்புறப்படுத்திவிட்டு அவள், "ஓ. கே." என்றாள் அடிக்குரலில். தங்களுக்கு வேண்டிய புத்தகங்களைப் பொறுக்கிக் கொண்டு கார்டில் தேதியைப் பதிவு செய்து கொள்ள நிற்கும் போது ரமா பொறுக்கியிருந்த காதல் நவீனங்களைப் பார்த்து ரஞ்சனி சிரித்தாள்.

"சரியான 'ரொமான்டிக்' நீ! இந்த 'மூட்'லே நீ இப்பவே கல்யாணம் செய்துக்கறதுதான் நல்லது!"

"ஐ விஷ் ஐ குட்!" என்று ரமா புன்னகை புரிந்தாள். "இந்த பிளூஸ்டார் ஆபரேஷன் என் திட்டத்தைப் பாழாக்கி விட்டது! அர்



ஜான் வீட்டை இந்த விஷயம் ரொம்பப் பாதிச்சிருக்கு. இப்போதைக்குக் கல்யாண விஷயத்தைப் பேச முடியாது."

அவர்கள் வெளியே வந்ததும் வெயில் அனலாய்த் தகித்தது.

கறுப்புக் கண்ணாடியை அணிந்துகொண்டு ரஞ்சனி சிரித்தபடி சொன்னாள். "இந்த வெய்யில்லேந்தும், என்னுடைய கரோல்பாக் மாமாகிட்டேந்தும் இன்னிக்குத் தப்பிக்கணும்னு நினைச்சேன். சாயங்காலம் வரை லைப்ரரிலே உட்கார்ந்து! என் திட்டம் போச்சு இந்த ப்ளுஸ்டார்னாலே!"

"ஏன், உங்க மாமா என்ன சொல்றார்?"

"ஓ, அவர் ஒரு போர்! எனக்கு வரன் தேடறது பெரிய ஸோஷல் ஸர்விஸ்னு நினைப்பு அவருக்கு. ஐ. ஏ. எஸ். வரன் இருக்கு. என்ஜினியர் வரன் இருக்குன்னு தொணதொணத்துண்டிருப்பார்! அவருக்குக் குழந்தைகள் இல்லே. பொழுது போகல்லே!"

சற்றுநேரம் ருமா எதுவும் சொல்லாமல் நடந்தாள்.

"நல்ல இடமா ஸெலக்ட் பண்ணினார்னு ஒத்துக்கறதிலே என்ன தப்பு?" என்றாள் மெள்ள.

"தப்பொண்ணும் இல்லேதான்!" என்றாள் ரஞ்சனி. "எனக்குத்தான் இந்த மாதிரிப் பேச்சு ரசிக்கறதில்லே. நான் ஒரு 'ரொமான்டிக்' இல்லே. ஆனால் என் மனசுக்குப் பிடிச்சவனைத்தான் பண்ணிக்கணும்னு ஒரு தீவிரம் இருக்கு. வரன் வேட்டை ஆடறது எனக்குள்ளே ஒரு அவமான உணர்வை ஏற்படுத்தறது."

"இந்தக் காரணத்தாலே நீ சிக்கல்லே மாட்டிக்காமல் இருந்தால் சரி!"

"ஒரு காம்ப்பா குடிக்கலாம் வா!" என்றாள் ரஞ்சனி பேச்சை மாற்ற.

பஸ் நிலையத்துக்குப் பக்கத்தில் இருந்த பெட்டிக் கடைக்குச் செல்லும் போது, ருமா



அவள் விலாவில் இடித்தாள்.

"சிக்கல்லே மாட்டிக்கணும்னு உன் தலையிலே எழுதியிருக்குன்னு நினைக்கிறேன்..அங்க நிற்கிறது யாரு பார்!"

ஒரு கோலாவைக் கையில் பிடித்தபடி மன்மோஹன் நின்றிருந்தான்.

அவர்களைப் பார்த்து மலர்ச்சியுடன் "ஹாய்!" என்றான்.

வாஸந்தி

''உன் பேட்டியைப் படிச்சேன்,'' என்றான் ரஞ்சனியிடம்.

''எப்படியிருக்கு?'' என்றாள் அவள், ருமா வின் பரிகாசம் விளைவித்த கூச்சப் புன்னகை யுடன்.

''நான் எதிர்பார்த்த மாதிரி! சீக்கியன் முத லில் சீக், பிறகுதான் இந்தியன் என்கிற அபிப் பிராயத்தை ஏற்படுத்தறது.''

அன்று காலை மாணவர்களிடையே ஏற் பட்ட வாக்குவாதம் அவளுக்கு நினைவுக்கு வந்தது.

''இதுக்கு நீ பொறுப்பில்லே'' என்றான் அவன் சமாதானமாக. ''பேட்டி கொடுத்த வன்தான் பொறுப்பு. பத்திரிகையைப் பொறுத்தவரை உன் பேட்டி வெற்றி தான்!''

''தாங்க்யூ!'' என்று அவள் சிரித்தாள். ''நானே இன்னும் படிக்கல்லே!''

''ஓ. சி. காப்பி கிடைக்கும்னு இருக்கே! ஏய், பை தி பை, அம்ரித்ஸர் போறியா?, ஃப்ரீயா, ப்ளேன்லே?''

''ரெடி! நீ கூட்டிண்டு போறியா?''

''ஐ விஷ் ஐ குட்!'' என்று அவன் இளித் தான்.

''பி.ஐ.பி., முக்கியமான அக்ரெடிட்டெட் ரிப்போர்ட்டர்களை அனுப்பறது.''

அவள் உதட்டைப் பிதுக்கினாள்.

''நான் அக்ரெடிட்டெட் ரிப்போர்ட்ட ரும் இல்லே, முக்கியமானவளும் இல்லே!''

''அந்த ராதாகிஷனைக் கேட்டுப் பார்: உன் பேட்டியினாலே அவன் பேப்பருக்கு மவுசு ஏற்பட்டுப் போச்சு. அவன் சொன்னான்னா மினிஸ்ட்ரி ஒத்துக்கும்.''

''ஓ.கே., முயற்சி பண்றேன்'' என்றாள் அவள் உற்சாகமாக.

''நீ போகவில்லையா?''

''எனக்கும் உன்னுடைய பிரச்னைதான். ஆனா சமயம் கிடைத்த போது நான் பஸ் ஸிலே போவேன், நோ ப்ராப்ளம்.''

அப்பொழுதுதான் ருமாவைக் கவனித் தவன் போல்,

''நீ அம்ரித்ஸர் கோவிலைப் பார்த்திருக் கியா?'' என்றான்.

''சின்ன வயசிலே பார்த்திருக்கேன்.''

''ப்ளூ ஸ்டார் ஆபரேஷனைப் பத்திக் கேட்டபோது எப்படியிருந்தது?''

ருமாவின் முகம் சட்டென்று மாறிற்று.

''ப்ளீஸ், அதைப்பத்திப் பேச வேண் டாம்!'' மன்மோஹனின் பார்வையில் ஒரு புரிந்து கொண்ட அனுதாபம் தெரிந்தது.

''நாமெல்லாம் சினேகிதர்கள் ருமா, பேசி னால்தான் நல்லது!''

''வேண்டாம்! இந்தப் பேச்சு சினேகிதர் களையே பிரிச்சுடும்!''

அவன் சங்கடத்துடன் ரஞ்சனியைப் பார்த் தான்.

''நான் கிளம்பறேன்'' என்றான் பொது வாக.

''நான் பிந்திரன்வாலேயைப் பேட்டி காணணும்னு ஆசைப்பட்டேன். இப்ப ஆசா மியே க்ளோஸ்! அந்த ஆளை சைக்கலாஜிகல் ஸ்டடி பண்ணணும்னு நினைச்சேன்!''

''ஏன்?'' என்றான் அவன் திடீரென்று ஆத்திரத்துடன்.

''ராதாகிஷன் அதையும் உபயோகிக் கவா? சீக்கியர்கள் ஒட்டுமொத்தமாய்ப் பயங்கர வாதிகள், தேசத் துரோகிகள் என்கிற எண் ணத்தை உருவாக்கவா?''

ரஞ்சனி அவனைத் திகைப்புடன் பார்த் தாள்.

அவன் சட்டென்று தன்னைச் சமாளித்துக் கொண்டு, அவள் தோளில் கை வைத்து, ''ஐ ஆம் ஸாரி!'' என்றான். அவள் திகைப்பு குறையாமல் நின்றாள். இன்று காலை ருமா வின் தாத்தாவுக்கு ஏற்பட்ட கோபத்துக்கும் இதற்கும் அதிக வித்தியாசம் இல்லை என்று வியப்பேற்பட்டது.

''ஒரு விஷயம் நீ புரிஞ்சுக்கணும் மன் மோஹன். அவன் சீக்கியன் மட்டுமில்லே, இந்தியன் கூட! அவனுடைய ஸ்தானத்திலே ஒரு தமிழன் இருந்திருந்தாலும் நான் எழுதத் தயங்க மாட்டேன். தமிழர்களை ஒட்டுமொத்த மாய் அது பயங்கரவாதிகளாகக் காட்டும்னு நான் நினைச்சிருக்க மாட்டேன்!''

''நடுத்தெருவிலே இப்ப எதுக்கு விவா தம் ரஞ்சனி?'' என்றாள் ருமா.

''ஐ ஆம் ஸாரி. ரெண்டுக்கும் நிறைய வித்தியாசமிருக்கு. சரித்திர காரணங்களி னாலே. சரி விடு. நீ இப்பக் கிளம்பு. ராதாக் கிஷனைப் பிடி ஃபோன்லே. நாளைக்கு உன்னைக் கான்டாக்ட் பண்றேன்'' என்று மறுபடியும் அவன் தோளைச் சமாதானமாகத்

ஹைட்பார்க் பேச்சு — 4.

தொலைக்காட்சி வரவரத் தொல்லைக் காட்சியாகிவிட்டது. இந்தியின் ஆதிக்கம் அரக்கத்தனமாக உள்ளது. 'யே ஜோ ஹை ஜிந்தகி'யாம்! 'இதுதான் வாழ்க்கை' என்று இருக்கக் கூடாதா? 'மகான்தான்' என்கிறார்கள். 'ம னி' என்ற தீந்தமிழ்ச் சொல் கிடைக்கவில்லையா? ஐந்நூறு தடவை இந்துஸ்தானியை அழுது விட்டுப் பிறகு போனால் போகிறதென்று ஒரு கர்நாடக சங்கீத நிகழ்ச்சி: அதுவும் நடுநிசியில்! இந்த அநியாயத்தைத் தட்டிக் கேட்க யாருமே இல்லையா? அல்லது ஒருவருக்கும் ஆண்மை யில்லையா?

வ. நா. சுப்பிரமணியன்.

பம்பாய்— 86.



ஹைட்பார்க் பேச்சு — 5.

உபன்யாசம் செய்யப்படும் இடங்களிலெல்லாம் பரவலாகப் பிராமண பாஷையில்தான் செய்யப்படுகிறது. அதனால் எத்தனை நல்ல விஷயங்களைச் சொன்னாலும் ஏதோ அவையெல்லாம் பிராமணர்களுக்குத்தான் சொல்லப்படுவதாக மற்றவர்கள் நினைத்துக் கொண்டு பேசாமல் இருந்து விடுகிறார்கள்? அதனால் உபன்யாசம் செய்யும் அனைவரும் சாதாரணத் தமிழிலேயே செய்தால் அது அனைவருக்கும் போய்ச் சேரும். செய்வார்களா?

எஸ். கண்ணன்.

வடுவூர்



தட்டிவிட்டு மன்மோஹன் ஹிந்துஸ்தான் டைம்ஸ் பில்டிங்கை நோக்கி நடந்தான்.

பஸ் நல்லவேளையாக உடனே கிடைத்தது. அவர்களுக்கு. வழி முழுவதும் பேசுவதற்கு எதுவுமே இல்லாதது போல் இருவரும் ஒரு மெல்லிய ஏமாற்றத்துடன் மௌனமாக இருந்தார்கள்.

பஸ் ஸ்டாப்பின் அருகிலேயே இருக்கும் குமாவின் வீட்டருகில் வந்ததும் குமா சொன்னாள்.

"நமக்குள்ளே பேசிக்கவே இப்ப வேற விஷயங்கள் கிடைக்கல்லே பாத்தியா? இது ஒரு சோகமில்லே?"

"இல்லே! இது ஒரு அவமானம்! நீங்கள் எல்லாரும் தொட்டால் சுருங்கிகளாய் இருப்பது தான் சோகம்! பை!"

"பை ரஞ்சனி!"

ரஞ்சனி மேற்கொண்டு ஏதும் பேசாமல் வீட்டிற்கு விரைந்தாள்.

கதவைத் திறந்த அம்மா "வெயில் விணைப் போறதாடி?" என்று முணுமுணுத்தாள் தூக்கக் கலக்கத்துடன்.

அவள் நேராகச் சென்று ஃப்ரிஜ்ஜைத்திறந்து பாட்டிலோடு நீரைக் குடித்துவிட்டு, ரகசியக் குரலில்,

"மாமா மாமி இருக்காளா?" என்றாள்.

"இல்லே, ஏதோ காரியம் இருக்குன்னு அப்பவே கிளம்பிப் போயிட்டா!"

"நல்லவேளை!" என்றாள் அவள், சின்னப் புன்னகையுடன்.

"எதுக்கு வந்தாராம்?"

"எதுக்கோ வந்தான் போயேன்! தோசை வாத்து வெச்சிருக்கேன் வேணா சாப்பிடு!"

அம்மாவின் மழுப்பல் வேடிக்கையாக இருந்தது. அவள் தோசையைத் தட்டில் போட்டுக் கொண்டு வந்து அம்மாவின் எதிரில் உட்கார்ந்தாள்.

"என்ன சொல்றார் மாமா?"

"ஆமாம், உனக்கு உறவுக்காரர் யார்கிட்டேயும் பேச நேரம் கிடையாது! என்கிட்ட வம்பு கேளு!"

"இது வம்பா?"

"இல்லேன்னு தும்பு!"

"உன்னுடைய சுத்தத் தமிழெல்லாம் எனக்குப் புரியாது. விஷயத்தைச் சொல்லு!"

"ஒரு ஐ.ஏ.எஸ். வரன் இருக்காம். நல்ல மனுஷாளாம். ஜாஸ்தி கேக்க மாட்டாளாம். உனக்குப் பார்க்கலாம்னான்."

"என்ன கேக்க மாட்டாளாம்?"

"என்ன கேள்வி இது? வரதட்சணைன்னு வெச்சுக்கோயேன்!"

அவளுக்குச் சிரிப்புப் பொத்துக் கொண்டு வந்தது.

"நீ என்ன சொன்னே?"

அம்மா கோபமும் துக்கமுமாக அவளைப் பார்த்தாள்.

"எனக்கு வாயைத் திறக்க இந்தாத்திலே சுதந்திரம் இருக்கா? நடராஜன் பாதிப் பேசிண்டிருக்கும் போது உங்கப்பா பூந்துட்டார். ரஞ்சனி படிப்பை முடிக்கட்டும். அதுக்கப்புறம் தான் கல்யாணம்னு!"

"நல்லவேளை பொழைச்சேன்!" என்று ரஞ்சனி சிரித்தாள்.

"இதைப் பார்! மாமாகிட்டக் கிளியராச் சொல்லிடு, நான் எந்த சந்தையிலேயும் நிக்கத் தயாராயில்லேன்னு!"

"இப்ப வீம்பாப் பேசு. ஒரு உறவுக்காரனும் நமக்கு உதவிக்குக் கிடைக்கப் போறதில்லே!"

"ரைட்! நம்ம கால்லேயே நாம நிப்போம்!" அவள் சிரித்துக் கொண்டு காலித் தட்டை உள்ளே வைத்துவிட்டு ஃபோனுக்கு விரைந்தாள்.

"ரஞ்சனி!" அப்பாவின் குரலைக் கேட்டதும், "ஓ இன்னிக்கு ஸெகண்ட் ஸாட்டர்டேன்னு மறந்து போச்சு. என்ன அப்பா?" என்று அவள் படுக்கையறைக்குள் எட்டிப் பார்த்தாள்.

"உன் பேட்டி வந்திருக்கே!"

"ஓ. காப்பி வந்துடுத்தா? எப்படிப்பா இருக்கு?"

"வெரிகுட்! ஸர்தார்ஜிகளுக்கே ஒன்ட்ராக் மைண்ட்தான்!"

''எல்லாரும் அப்படியில்லே!''

''பொதுவா அப்படித்தான்!''

இவருடன் இப்பொழுது ஒரு தர்க்கம் கூடாது என்று அவள் ஃபோனுக்கு விரைகையில் அவர் சொன்னார்.

''அந்த ராதாகிஷன் போன் பண்ணினன். உன் பேட்டிக்கு நல்ல வரவேற்பாம். பி.ஐ.பி. ப்ரெஸ் ரிப்போர்ட்டர்ஸை அமிருத்ஸருக்கு கவர்ன்மெண்ட் செலவிலே அனுப்பறதாம். அவனுடைய ஸ்டாஃப் ரிப்போர்ட்டர்ஸ் யாருக்கும் இப்ப நேரமில்லையாம். நீ போகச் சம்மதிச்சேன்னா மினிஸ்ட்ரிக்கு உன் பெயரை அனுப்பறேன் என்கிறான்!''

அவள் பரபரப்புடன், ''குட்!'' என்றாள். ''போகட்டுமாப்பா?'' என்றாள் சாதுவாக.

''போயிட்டு வா!'' என்றார் அவர் நிதானமாக. ''கவர்ன்மெண்ட் க்ரூப்பா அனுப்பறதினாலே ஒண்ணும் பயமில்லே!''

அவளால் சில விநாடிகளுக்கு நம்ப முடியவில்லை. அவள் கட்டுரையைப் படித்து ஏற்பட்ட பெருமிதம் அவரை இளக்கியிருக்க வேண்டும் என்று தோன்றிற்று.

அவள் உற்சாகத்துடன் ராதாகிஷனுக்கு ஃபோன் செய்யக் கிளம்புகையில் அம்மா அப்பாவிடம் கோபத்துடன் பேசுவது கேட்டது.

''யாராவது இந்தச் சமயத்துலே ஒரு வயசு வந்த பெண்ணைப் பஞ்சாபுக்கு அனுப்புவாளா? நீங்க கொடுக்கிற இடம்தான் அவ புருஷப் பிள்ளைகளுக்குச் சரியா அலைய ஆரம்பிச்சிருக்கா!''

''நான் எல்லாம் யோசிச்சுத்தான் சரின்னேன். கவர்ன்மெண்ட் அனுப்பறது. ஒரு பயமும் இல்லே. அதைத் தவிர நேரிலே போய்ப் பார்த்தாத்தான் அவளுக்கு விவரம் தெரியும். சும்மா இங்கே உட்கார்ந்துண்டு கவர்ன்மெண்ட் பண்றதெல்லாம் தப்புன்னு பேசறா!''

''ஆமாம், கல்யாணத்துக்கு நிக்கிற பெண்ணுக்கு இதெல்லாம் தெரியணும்னு என்ன அவசியம்?''


ரஞ்சனி தனக்குள் சிரித்துக் கொண்டே ராதாகிஷனுக்குப் ஃபோன் செய்தாள். ''உன் பெயரை அனுப்பிட்டேன். நாளன்னி காலை ஃப்ளைட்லே போய்ச் சாயந்திர ஃப்ளைட்டிலேயே திரும்பிடலாம். ரெடியா இரு!'' என்றான் அவன்.


மாலையில் இந்தச் செய்தியைத் தெரிவிக்க மன்மோஹனுக்கு டெலிஃபோன் செய்தாள்.

''நீயும் அந்தச் சமயத்திலே அமிருத்ஸருக்கு வா மன்மோஹன்!'' என்றாள்.

அவன் வருவான் என்கிற நிச்சயத்துடன் அவள் ரிஸீவரைக் கீழே வைக்கும்போது, திரைக்கு அப்பால் அம்மாவின் பாதங்கள் தெரிந்தன. தன் டெலிபோன் சம்பாஷணையை அம்மா கேட்டுக் கொண்டிருந்திருக்கிறாள் என்று புரிந்தது.

(தொடரும்)





ஆரோக்கியமான பற்களுக்கும் ஈறுகளுக்கும் என்றுமே ஆதாரம்
நம்பகமான கிராம்புத் தைலம் அது தருமே பரிகாரம்

புதிய

இதோ


ப்ராமிஸ் டூத் பவுடர்

காலங்காலமாக பயன்பட்டு வரும் கிராம்புத் தைலம் கொண்டது.

கிராம்புத் தைலம் கொண்ட ப்ராமிஸ் டூத் பவுடர் அளிக்கும் நன்மையைப் பாருங்கள்.

- வாய்த் துர்நாற்றத்தையும் பற்சிதைவுக்குக் காரணமான கிருமிகளையும் அகற்றுகிறது.
- உங்கள் சுவாசத்திற்கு புத்துணர்ச்சியையும் தூய்மையையும் தருகிறது.
- உங்கள் ஈறுகளை இதமாகத் தேய்த்துக் கொடுத்து ஆரோக்கியத்தை உண்டாக்குகிறது.
- உங்கள் பற்களுக்கு பளிச்சிடும் வெண்மையைத் தருகிறது.
- பெப்பர்மிண்ட் மற்றும் கிராம்புத் தைலத்தின் இணையற்ற சுவை.

பல்சாரா



கிராம்புத் தைலம் கொண்ட புதிய இணையற்ற ப்ராமிஸ் டூத் பவுடர்

CHAITRA-BLS-436 TAM

1-5-85

கோபாலி மிகுந்த அலுப்புடன் தன் வீட்டிற்குப் புறப்பட்டான்.

"அப்புறம் எப்போது?'' எனக் கேட்டாள் ரேணுகா. கோபாலியின் ஆபீஸில் டைப்பிஸ்ட். ஒண்டிக்கட்டை. தனியாக இருக்கிறாள்.

எப்படியோ ஏற்பட்ட தொடர்பு. கோபாலியால் வெட்டி எறிய முடியவில்லை. அதுவும் வீட்டில் அவன் பெண்டாட்டி வயிற்றுவலி என்று சுருண்டு சுருண்டு படுத்துக் கொள்ள, அவனுக்கு வேறு இடம் தேவைப்பட்டது.

கோபாலியை அவள் நாடியதற்குக் காரணம் — கிட்டத்தட்ட ஆயிரத்து ஐந்நூறு சம்பளம் வருகிறது. சொந்த வீடு இருக்கிறது. குழந்தை குட்டிகள் இல்லை. திருமணம் என்ற பந்தத்தைப் பற்றிப் பெரிதாக நினைக்கவில்லை.

ஒரு டைப்பிஸ்ட் + ஒரு மரணம் + ஒரு மிரட்டல் + கோபாலி



— அன்னம் —

இனிமேலாவது நிம்மதியாக ஒரு பற்றுக்கோலாக அவனை வைத்துக் கொள்ளலாம் என்பதும் அவன் உறவைக் கத்தரிக்காததற்கு ஒரு காரணம்.

அவள் விருப்பத்திற்கு முட்டுக்கட்டை கோபாலியின் மனைவி ராதா. சொத்தெல்லாம் அவள் பெயரில். அங்கே வெட்டிக் கொண்டு வந்தால் கோபாலி ஒரு ராஜ்யம் இல்லாத ராஜா.

"இப்போதெல்லாம் அவள் சந்தேகப்படுகிறாள்... யாரோ கோள் மூட்டியிருப்பார்கள் போலிருக்கிறது...'' என்றான் கோபாலி தன் சட்டைப் பித்தான்களை மாட்டியபடி.

"எல்லாம் நொண்டிச் சாக்கு... உங்களுக்கு நானும் வேண்டும்... அவளும் வேண்டும்... கத்தரிக்கலாம் என்றால் வழியா இல்லை...?'' எனச் சிணுங்கினாள் ரேணுகா.

கோபாலியின் மனத்தில் அந்த வார்த்தைகள் தைத்தன. இதுவரைக்கும் குழந்தை குட்டி ஏதும் இல்லை... அவளும் நாளுக்கு நாள் தேய்ந்து கொண்டே போகிறாள். என்றைக்கும் எது வேண்டுமானாலும் ஏற்படலாம். அவள் சுகவீனம் எல்லோருக்கும் தெரிந்ததுதானே!

"அடுத்த வாரம் வருகிறேன் ஒரு நல்ல செய்தியுடன்!'' எனச் சுருக்கமாகக் கூறிப் புறப்பட்டான் கோபாலி.

6.5.85

"வீட்டில் எலித் தொல்லை தாங்கவில்லை.. மருந்து இருந்தால் ஏதாவது கொடேன்!'' எனக் கேட்ட கோபாலியை நிமிர்ந்து பார்த்தான் சுதாகர்.



சுதாகர் கோபாலியுடன் வேலை பார்ப்பவன். அவன் மனைவி பெயரில் ஓர் உரக் கடை இருக்கிறது. கூட வேகிருமிநாசினிகளும் விற்கிறான்.

''இதை ஜாக்கிரதையாக வைக்க வேண்டும் கோபாலி... குழந்தைகளின் கையில் கிடைத்தால் ஆபத்து...''

''எங்கள் வீட்டில் குழந்தை ஏது? நிச்சயமாக எனக்கு இப்போது தற்கொலை செய்து கொள்வதாக உத்தேசம் இல்லை!'' என அட்டகாசமாகச் சிரித்தான் கோபாலி.

சுதாகர் அவன் கேட்ட மருந்தை நூறு கிராம் அளந்து கொடுத்து அதற்கான ரசீதையும் எழுதிக் கொடுத்தான். ரசீதின் அடிக்கட்டையில் கோபாலியின் கையெழுத்தை வாங்கிக் கொண்டான்.

கோபாலி தன்னிடம் கொடுக்கப்பட்ட ரசீதைக் கிழித்துப் போட்டுவிட்டு, மருந்துடன் வீட்டிற்கு நடையைக் கட்டினான்

12.5.85

சென்னைக்குக் கொள்முதல் சம்பந்தமாகச் சென்னை போய்த் திரும்பிய சுதாகர் பஸ் நிலையத்தில் இறங்கியதும் கேள்விப்பட்ட செய்தி இதுதான்.

கோபாலியின் மனைவி ராதா போய் விட்டாளாம் — ஏழாம் தேதியே!

கோபாலி நடைப்பிணமாக அலைகிறானாம்.

தன் கடைக்குப் போய் ஐந்தாம் தேதி கோபாலிக்குத் தான் அந்த மருந்து விற்றதற்கான பில்லின் அடிக்கட்டையைப் பத்திரப்படுத்தினான் சுதாகர்.

15.5.85

ரேணுகாவின் வீட்டுக் கதவு தட்டப்பட்டது.

கோபாலியா...? மனைவி இறந்து பத்து நாட்களுக்குள்ளேயா...? ரேணுகா கண்ணாடியில் தன்னைப் பார்த்துக் கொண்டாள். கலைந்து கிடந்த கேசத்தை ஒழுங்குபடுத்திக் கொண்டு தன் வீட்டுக் கதவைத் திறந்தாள்.

வெளியே நின்றது கோபாலி அல்ல. சுதாகர். கோபாலிக்கும் அவளுக்கும் உள்ள நெருக்கம் பற்றி அறிந்தவன் ஒருவன். ஒரு தியேட்டரிலும், மகாபலிபுரத்திலும் தற்செயலாகச் சந்தித்திருக்கிறார்கள்.

''நீங்களா?'' — என ஏமாற்றத்துடன் கேட்டாள் ரேணுகா.

அவள் அவனை எதிர்பார்க்கவும் இல்லை. அப்போது கோபாலி தற்செயலாக வந்துவிட்டால் அவன் தப்பாகப் புரிந்து கொண்டால்...?

''கோபாலியின் மனைவி போய்விட்டாளாம் தெரியுமா?''

''உம்...'' என்றாள் அவள் சுருக்கமாக... இவன் ஏன் கோபாலியைப் பற்றிப் பேசுகிறான்...?

''என் கடையில் தான் எலி மருந்து வாங்கினான்... புரிகிறதா?''

ரேணுகா உஷாரானாள்... என்ன சொல்ல வருகிறான்?

''பில்லில் அவன் கையெழுத்து இருக்கிறது. இதைப் போலீஸில் காட்டினால் போதும்... உடலைத் தோண்டி எடுத்துப் பரிசோதனை செய்து...''

ரேணுகா மிரண்டு போனாள்... அவள் விழிகள் படபடத்தன.

''நான் அப்படி எல்லாம் செய்ய மாட்டேன்... நீ எனக்கு வேண்டியவள். கோபாலி எனக்கு நண்பன். எனக்கு இப்போது பண முடை. உடனடியாகப் பத்தாயிரம் ரூபாய்

தேவைப்படுகிறது..புரிந்துகொள்வாய் என்று நினைக்கிறேன்.''

அவள் பதிலுக்காக அவன் காத்திருக்க வில்லை. அவள் கன்னத்தில் செல்லமாகத் தட்டினான்.

அவள் எதிர்பாராத விதமாக அவனை இழுத்துப் பிடித்து அவன் உதடுகளில் தன் இதழ்களைப் பதித்தாள். ''அப்புறம் ஒரு நாள் நிதானமாக வருகிறேன்!'' என்று கூறிவிட்டுப் புறப்பட்டான் அவன்.

அவன் போனதும் ரேணுகா தன் உதடு களையே அழித்துவிடும் ஆத்திரத்தில் துடைத்துக் கொண்டாள்.

16.5.85

ரேணுகா சொன்னதையெல்லாம் கோபாலி நிதானமாகக் கேட்டான்.

''ராஸ்கல்... டர்டி ரோக்!... அவனை நான்...'' என ஆவேசத்துடன் எழுந்தான்.

''நீங்கள் அந்த மருந்தை வாங்கினீர்களா?'' — எனக் கேட்டாள் ரேணுகா.

''உம்...'' என ஒப்புக்கொண்டான் அவன்.

அப்படியானால்... அப்படியானால்... இவன் அவனுக்காகத் தன் மனைவியைத் தீர்த்துக் கட்டிவிட்டானா?

நாளைக்கு இவளும் அலுத்துப் போனால் இவளையும்...?

''நீங்கள் சொல்வது உண்மைதானா?''

''ஆமாம்... ஆமாம்... அந்த மருந்து அவன் கடையில்தான் வாங்கினேன்!''

தானே போய்ப் போலீஸிடம் சொல்லி விடலாமா? இவன் பெயர், புகைப்படம் பத்திரிகையில் அடிபடும்.

அடுத்த வீடு பக்கத்து வீடுகளில் இவளைக் கௌரவமாக நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். கிராமத்தில் இருக்கும் அவள் பெற்றோர் தற்கொலை செய்து கொள்வார்கள். வெளியே தலை காட்ட முடியாது.

கோபாலி யோசித்தான்.

''சரி! பத்தாயிரம் ரூபாய்தானே... இருபத்திரண்டாம் தேதி இரவு எட்டு மணிக்கு சுதாகரை உன் வீட்டிற்கு வரச் சொல்... நான் பணத்துடன் வருகிறேன்... அன்றைக்குத் தான் அவள் கருமாதி கூட...''


ரேணுகா துவண்டு போய் வெளியே நடந்தாள். மறுநாள் சுதாகர் கடையில் போய் அந்த விவரங்களைத் தெரிவிக்கத் தீர்மானித்துக் கொண்டாள்.

22.5.85

கோபாலி கையில் ஒரு பெட்டியுடன் ஏழரை மணிக்கெல்லாம் வந்து விட்டான்.

ரேணுகா யந்திரம் போல் நடந்து கொண்டாள். கோபாலியைப் பார்க்க அவளுக்குப் பயமாகக் கூட இருந்தது. முரட்டு ஆட்களாகக் கூட இரண்டு பேர்.

இவர்கள் சுதாகரை என்ன செய்யப்போகிறார்கள்? அந்தப் பெட்டியில் பணம் இருக்குமா...? இல்லை, துப்பாக்கி, கத்தி, அரிவாள் என்று...



இளைஞர் ஆண்டு லட்சியம்

போட்டி: ௦

இளைஞர் ஆண்டான இந்த ஆண்டில் என்ன குறிக்கோளை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறீர்கள், உங்கள் முன்னேற்றத்திற்கு அல்லது சமுதாயத்துக்கு உதவும் வகையில்? உங்களுடைய குறிக்கோளைக் கீழேயுள்ள வெற்றிடத்தில் சுருக்கமாக எழுதியனுப்புங்களேன். உங்கள் குறிக்கோள் மற்றவர்களுக்கும் வழி காட்டுவதாக இருக்கும். பிரசுரமானால் பரிசு. தவிர, குலுக்கல் முறையில் ஒருவருக்கு வி.ஐ.பி. ஸூட்கேஸ். இந்த அரைப் பக்கத்தை முழுமையாகக் கத்தரித்து அனுப்புவதுடன் உறையின் மேல் ''இளைஞர் ஆண்டு லட்சியம்'' என்று குறிப்பிடல் அவசியம்.

முடிவு தேதி: 8.7.85

இன்னும் 45 விலையுயர்ந்த வி.ஐ.பி. ஸூட்கேஸ்களைப் பரிசாகப் பெற வாய்ப்புண்டு. வாரம் தவறாமல் போட்டிகளில் பங்கு பெறவும்.

வி.ஐ.பி. ஸூட்கேஸ் பரிசுத்திட்டம்

என் பெயர்: ....

விலாசம்: ....

....

மேலட்டையில்:

குமாரி சபீதா ஆனந்த்

வண்ணப்படம்:

சரஸ்வதி சத்யமூர்த்தி

''எல்லோருக்கும் காப்பி கொடு!'' என்று அதட்டினன் கோபாலி தன் சொந்த வீட்டைப் போல.

காப்பி கலக்கும் போது ரேணுகாவின் விரல்கள் நடுங்கின. ஒருவேளை சுதாகரைக் கொன்று விட்டால் இவளை மட்டும் சும்மா விடுவார்களா? அவள் கை தன்னையறியாமல் தன் கழுத்தைத் தடவிக் கொடுத்தது.

எட்டு மணி. வாயிற்கதவு தட்டப்பட்டது.

கோபாலி செய்த சமிக்ஞையின் மூலம் உடனிருந்த இருவரும் பக்கத்து அறையில் ஒளிந்து கொண்டார்கள்.

''நீ ஒன்றும் பேசாமல் கதவைத் திற!'' என உத்தரவிட்டான் கோபாலி.

சுதாகர் சீட்டியடித்தபடி உள்ளே நுழைந்தான்.

''ஓ! கோபாலி... பணத்துடன் வந்திருக்கிறாய் போலிருக்கிறதே! ஆபீஸில் கேள்விப்பட்டேன். நீ உன் பிராவிடன்ட் பண்டு பணத்தில் கடன் கேட்டதாக...''

''எங்கே அந்த ரசீது?'' எனக் கேட்டான் கோபாலி.

''பத்திரமாக — ஜாக்கிரதையாக — என் இரும்புப் பெட்டியில் இருக்கிறது... சாவி... இதோ என் பாக்கெட்டில்!'' தட்டிக் காண்பித்தான் சுதாகர்.

''போய் அந்த ரசீதை எடுத்து வா... பணத்தை வாங்கிக் கொள்!''

''இதோ பார் கோபாலி... தெரிந்தோ தெரியாமலோ நீ உன் மனைவிக்கு விஷம் வைத்து விட்டாய்... அதற்கான ருசு என்னிடம் இருக்கிறது... எனக்கோ அடிக்கடி பணமுடை வருகிறது... முட்டையிடும் பொன் வாத்து நீ! ரசீதை உன்னிடம் கொடுக்க நான் என்ன முட்டாளா?''

''உன்னால் ஆனதைப் பார்த்துக் கொள் என்று நான் சொல்லி விட்டால்?''

''அத்தனை முட்டாளாக இருக்க மாட்டாய் நீ... நேராக உன் மாமனாரிடம் போவேன்... அவர் கைப்பட ஒரு கடிதம் போலீஸுக்குப் போகும்... உன் பெண்டாட்டி புதைக்கத்தான் பட்டிருக்கிறாள். எரிக்கப்படவில்லை... பிணத்தைத் தோண்டி எடுத்துப் போலீஸில் பரிசோதித்தால், எதனால் அவள் சாகடிக்கப்பட்டாள் என்று தெரிய வரும். அப்புறம் என்ன...? உனக்குத் தூக்கு நிச்சயம்... உன் ஆசைநாயகிக்கு உறுதியாகச் சொல்ல முடியாது... தூக்காவது. ஆயுள் தண்டனையாவது...

ரேணுகாவின் முதுகுத் தண்டு சில்லிட்டது.

''அப்படியானால் நாங்கள் உயிருடன் இருக்கும் வரை நீ மிரட்டிப் பணம் வாங்காமல் இருக்கப் போவதில்லை...''

''நீயும் இவளும் நூறாண்டு வாழ வேண்டும்... என்னுடைய புதையலே நீங்கள் தானே! உன் குற்றத்தை ஒப்புக் கொண்டு ஒரு வாக்குமூலம் எழுதிக் கொடுத்துவிடு. என் பாங்க் லாக்கரில் வைத்துக் கொள்கிறேன். நான் எழுதித் தயாராக வைத்திருக்கிறேன்... ஒரே ஒரு கையெழுத்து மட்டும் போட்டுவிடு... உன் பெண்டாட்டி உடம்பை எத்தனை நாள் நம்ப முடியும்? நீயே சொல்லு!''

''சரி... உன்னிடம் வகையாக மாட்டிக் கொண்டு விட்டேன்.. இனிமேல் சாண் போனால் என்ன, முழம் போனால் என்ன? அந்தப் பேப்பரை இப்படிக் கொடு!''

சுதாகர் தன் பையில் நான்காக மடித்து வைக்கப்பட்டிருந்த வாக்குமூலத்தை எடுத்துக் கொடுத்தான். கோபாலி அவசரப்படாமல் படித்துப் பார்த்தான்.

''ஒரு விவரம் கூட விடாமல் நேரில் பார்த்தது போல் எழுதி இருக்கிறாய்!'' என்று கூறியவன் கையெழுத்துப் போடப் பேனாவைத் திறந்தான் கோபாலி.

''யாராவது சாட்சிக் கையெழுத்துப் போட வேண்டாமா, சுதாகர்!'' எனக் கேட்டான் கோபாலி கையெழுத்திடுமுன்...

''உன் ஆசைநாயகி போடுவாள்... இல்லையா? என் தங்கம்?'' என அவள் முகவாய்க் கட்டையைப் பிடிக்கப் போனான் சுதாகர். அவள் அவன் கையைத் தட்டி விட்டாள்.

''வேண்டாம்... இரண்டு பேரை ஏற்கெனவே நான் அதற்காகக் கூட்டி வந்திருக்கிறேன்!'' என்ற கோபாலி, உள்ளே திரும்பி ''ஸார்!'' எனக் கூப்பிட்டான்.

அறையிலிருந்து வெளியே வந்த இருவரையும் கண்ட சுதாகர் மிரண்டு போனான். அவர்கள் உயரமும் பருமனும் — எடுத்து வைத்த ஒவ்வொரு அடியும்...

''உங்கள் பேச்சு அத்தனையும் நாங்கள் கேட்டோம், மிஸ்டர் சுதாகர்! மிஸ்டர் கோபாலியின் வேண்டுகோளுக்கிணங்க அவர் மனைவியின் உடல் போன வாரம் தோண்டி எடுக்கப்பட்டு போஸ்ட்—மார்ட்டம் செய்யப்பட்டு விட்டது. அது இயற்கையான மரணம் என்று டாக்டர்கள் சொல்லி விட்டார்கள். பொய்யான குற்றச்சாட்டைக் கூறி—மிரட்டிப் பணம் பறிக்க முயற்சி செய்ததற்காக நாங்கள் உங்களைக் கைது செய்கிறோம்!'' என்றார் மறைந்து நின்ற அந்த ஸி. ஐ. டி. போலீஸ் இன்ஸ்பெக்டர்.

''அந்த மருந்து?'' எனத் திகைத்தான் சுதாகர்.

''என்னிடம் பிரிக்கப்படாமல் இருந்தது. அப்படியே போலீஸில் ஒப்படைத்துவிட்டேன். அதில் ஒரு மில்லிகிராம் கூடக் குறையவில்லை என்று அவர்கள் ஒப்புக் கொண்டார்கள்!''

சுதாகரை அவர்கள் இழுத்துப் போன பிறகு ரேணுகா கோபாலியின் மார்பில் தன் முகத்தைப் புதைத்துக் கொண்டு விம்மினாள்!



ஆம்னி பஸ் அவதிகள்

—சில நேரடி அனுபவங்கள்

அண்மையில் எங்களுக்கு அவசரமாக பெங்களூர் போக வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. ரயிலிலும், திருவள்ளுவரிலும் இடமில்லையென்று கையை விரித்துவிட்டதால் ஆம்னி பஸ்ஸை நாடினோம். வீடியோ பஸ்ஸிலேயே இடம் கிடைத்ததால், போகும் போது ஜாலியாக வீடியோ பார்த்துக் கொண்டே செல்லலாம் என்ற ஆசையில் ஏறி உட்கார்ந்தோம்.

பஸ் பூந்தமல்லியைத் தாண்டியதும் பஸ் கம்பெனி ஆள் ஒருவர், ''இந்த பஸ் ஹோசூர் வரைதான் போகும். கர்நாடக எல்லைக்குள் போனால் அந்த மாநிலப் போக்குவரத்துப் போலீஸார் பஸ்ஸைப் பிடித்துக் கொள்வார்கள்...!'' என்று திடீரென்று பயணிகளிடம் ஒருகுண்டைத்தூக்கிப்போட்டார். அவ்வளவு தான்! பயணிகள் அனைவருக்குமே கோபம் வந்து விட்டது.

''இதை எம்பா பஸ் புறப்படும் போதோ அல்லது டிக்கெட் 'புக்' பண்ணும்போதோ சொல்லலே?''

''அப்படியானால் பஸ்ஸைத் திரும்பவும் மெட்ராஸுக்கே திருப்பி விடுப்பா...''

—பயணிகள் கொதித்தனர்.

அந்த வேலையாள் என்ன செய்வார்? கெஞ்சாக் குறையாக, ''ஸார், இந்த விஷயத்தை பஸ் புறப்பட்டுச் சிறிது தூரம் சென்ற பிறகுதான் உங்களிடம் சொல்லச் சொன்னார் எங்கள் முதலாளி. நாங்கள் என்ன ஸார் செய்வோம்?'' என்று சொல்லிவிட்டுப் பழையபடியே போய் அமர்ந்து கொண்டார் அவர்.

பஸ் மெதுவாக ஊர்ந்து சென்று காலை ஆறு மணிக்கு ஹோசூர் சென்றடைந்தது. (வழக்கமாக இந்த நேரத்தில் பெங்களூருக்கே சென்றிருக்க வேண்டும்!) அடுத்த நாற்பது கி. மீட்டரைக் கடந்து பெங்களூர் செல்வது எப்படி என்று திகைத்துக் கொண்டே, கீழேஇறங்கிப்பார்த்தால்எங்கள் பஸ்ஸைப்போலவேஇன்னும்பத்துபஸ்கள்; கொத்துக் கொத்தாய்ப் பயணிகள்! ஏறத்தாழ எல்லாப் பயணிகளுமே ஆத்திரத்தோடும், ஆவேசத்தோடும் டிரைவரிடம் சண்டை போட்டுக் கொண்டிருந்தனர். கடைசியில் ஒருவழியாக ஒரு டப்பா பஸ்ஸில் (கூட்டமான கூட்டம்!) எங்களை ஏற்றி விட்டார் அந்த வேலையாள்.

இதேபோல, சில மாதங்களுக்கு முன்பு ஒரு முறை பெங்களூருக்குச் சென்ற போதும் ஓர் அனுபவம்... சரியாக இரவு ஒரு மணிக்கு நாங்கள் சென்ற ஆம்னி பஸ் தமிழக — கர்நாடக எல்லையில் நின்றது.

"பயணிகள் அனைவரும் இறங்குங்கள்!" என்ற குரல் கேட்டுத் (தூக்கக் கலக்கத்தில் எங்கே சரியாகக் கேட்கிறது!) திடுக்கிட்டு விழித்துப் பார்த்த போது, எங்கள் பஸ் டிரைவர்தான், "இறங்கிப் பத்தடி தூரம் நடந்தால் இன்னொருபஸ்நிற்கும். அதில்ஏறிக்கொண்டு பெங்களூர் செல்லுங்கள்...!" என்று சொல்லிக் கொண்டிருந்தார்.

பயணிகளெல்லாம் வாரிச் சுருட்டிக் கொண்டு அவசரம் அவசரமாக அடுத்த பஸ்ஸுக்கு விரைந்தனர். பெங்களூர் போய்ச் சேர்ந்த போதுதான் எங்களோடு பயணம் செய்த இரண்டு பயணிகள் தங்களுடைய பெட்டிகளில் ஒன்றை முதல் பஸ்ஸிலேயே தவற விட்டுவிட்டு வந்து விட்டார்கள் என்பதே தெரிந்தது!




ஏன் இந்தத் தொல்லைகள்? கர்நாடக மாநிலப் போக்குவரத்துத்துறையைச் சேர்ந்த அதிகாரியொருவரிடம் கேட்டபோது, "இதுபோன்ற ஆம்னி பஸ் முதலாளிகளெல்லாம் ஒரேயொரு பஸ்ஸுக்குத்தான் நேஷனல் பர்மிட் வாங்குகிறார்கள். அந்த ஒரு பர்மிட்டை வைத்துக்கொண்டே நான்கைந்து பஸ்களை விடுகிறார்கள். சிலசமயம்தமிழ்நாடு பர்மிட்டை மட்டும் வைத்துக் கொண்டு கர்நாடகத்திற்குள்ளும் பஸ்களை விடுகிறார்கள். இதனால் எங்களுக்குப் (அரசுக்கா? இவர்களுக்கா?) பெருமளவு வருவாய் இழப்பு ஏற்படுகிறது. முக்கியமாகக் கர்நாடக மாநிலத்திற்குள்ளேயே இதுபோன்றதில்லுமுல்லுகள் நடப்பதால்தான் இப்போது விழிப்புடன் செயல்பட்டுப் பிடிக்கிறோம்!" என்றார்.

இப்படி அவதிப்படும் பயணிகளெல்லாம் பெங்களூருக்குச் செல்லும் பயணிகள் மட்டும்தான் என்பதில்லை. எழும்பூரிலிருந்து நாகர்கோயிலுக்குப் புறப்படும் ஆம்னி பஸ்ஸில் பயணம் செய் தால், மதுரையிலேயே இறக்கி விட்டு, வேறு பஸ்களில் ஏறி நாகர்கோயிலுக்குப் போகும்படி சொல்லி அதற்கான பஸ்கட்டணத்தையும்கையில்கொடுத்து இறக்கி விட்டு விடுவார்கள். இப்படியும் நாங்கள் அனுபவப்பட்டிருக்கிறோம்.

மாலை ஆறு மணியிலிருந்து இரவு பத்தரை மணிவரை கணக்கெடுத்துப் பார்த்தால், சென்னையை விட்டுப் புறப்படும் ஆம்னி பஸ்களின் எண்ணிக்கை ஐம்பதுக்கும் மேல் தேறும். சமீப காலமாக எழும்பூரிலிருந்து மதியம் ஒன்றரை மணிவாக்கில் கூட சில ஆம்னிபஸ்கள் புறப்பட்டுச்செல்லஆரம்பிச்

(தொடர்ச்சி 34— ம் பக்கம்)




வீடியோவிலே 'சாமன்' டைப் டேப் போடறது வாஸ்தவம்னு, ஒரு டிக்கட் கொடுங்க!
பெண் பார்க்கப் போகிறோம், அவசரமா. பஸ்ஸைப் போக விட்டால் உங்களுக்கு புண்ணியம்...
அப்படியா!.. நல்லதாப் போச்சு!.. வெ வீட்லேயும் நாலு பொண்ணுங்க இருக்கு! பாத்துட்டுப் போங்க!
கில்லாடிங்க!.. பாஸஞ்சரை எப்படி இஸ்துகினு வராணுங்க!...
OMNI BUS
புடி, சார் ஒரு பங்கை
நாகர் கோவிலு ஒண்ணு!
குத்தாலம் பத்து!
டேய், எம் பொட்டி!
ஐயோ! நான் மாயவரம் போகணுண்டா!
பைவ் ஸ்டார்
டீ ஸ்டால்
பலே! பஸ் ஸ்டார்ட் ஆயிடிச்சி!
மெகானிக் ஏமகாதகன்!
ஆமா. ஆமா! இந்த லொங்கடாவையே ஸ்டார்ட் பண்ணிட்டானே!
அட ராமா!.. பஸ் ஸ்டா ஆகல்லியே! மெகானி ரூட்டை விட்ட சந்த பாவி.. தூங்கறான்!


நான் ஸ்ரீவைகுண்டம் போகணும்!.. பஸ்ஸைப் பார்த்தா...
ஸ்ரீவைகுண்டம் என்ன.. வைகுண்டமே போயிடலாம்!... கவலைப்படாதீங்க!
OMNI BUS
கன்யாகுமரி! கன்யாகுமரி!
இன்னாடாது! நம்ம தம்பன்லே கை வெக்குதே இந்த சாவு கிராக்கி!
ஃபுல் ஆனாத்தான் அவர் பஸ் கிளம்பும்! அவருக்கு அவசரம்!.. அதாண்டா கன்யா குமரிங்களைக் கூப்பிடுறாரு!
ஆம்னி பஸ்லே வீடியோ பாத்துட்டு வந்ததுலே நேத்து ராப்பூரா தூக்கமில்லே!.. எல்லாம் நாளைக்கு.. ஹாய்.. ஹாய்..!
நான் பஸ் ஓனர்! நீங்க?..
நான் ஆம்னி பஸ் ஓனர்!
உன் ஆம்னி பஸ்ஸில் பயணிகளைச் சித்திரவதை செய்த பாவத்திற்காக நீ அடுத்த ஜென்மத்தில் வாரம் தோறும் ஆம்னி பஸ்ஸில் பயணம் செய்யும் பயணியாகத் தண்டனையை அனுபவிப்பாயாக!

திருக்கின்றன. இந்த பஸ்கள் குறுக்கும் நெடுக்குமாக நிற்பதால் ஏற்படும் போக்கு வரத்து நெரிசலையும் சொல்லி மாளா

இப்படிப்பட்டதொரு நிலையில் ட ஏன் இந்த ஆம்னி பஸ்களை நாடுகிறோர் நாம் பயணம் செய்யப் போவது முன் கூட்டியே தெரிந்தால் ரயிலில் ரிசர்வ் செய்து கொண்டு வசதியாகப் போகலாம். ஆனால், திடீரென்று புறப்பட வேண்டிய கட்டாயம் ஏற்படும் போது ரயிலில் இடமிருக்காது. என்ன செய்வது என்று தவித்துக் கொண்டே ஸ்டேஷனை விட்டு வெளியே வந்தால், சுமார் ஐந்தாறு சிறுவர்கள் நம்மைச் சூழ்ந்து கொண்டு, ''ஸார், திருச்சியா? மதுரையா? பெங்களூரா?'' என்று கையைப் பிடித்துக் கொண்டு இழுக்கிறார்கள். தூரத்தில் நிற்கும் சொகுசு பஸ்ஸைக் காண்பிக்கிறார்கள். வீடியோ ஆசையைத் தூண்டி விடுகிறார்கள். அவ்வளவுதான்; நாம் மாட்டிக் கொண்டு விடுகிறோம்!

ஏன், திருவள்ளுவர் என்னவாயிற்று? என்று சிலர் கேட்கலாம். ஆனால், அனுபவப் பட்ட யாரும் இப்படிக் கேட்க மாட்டார்கள். காரணம்? கவுண்டருக்கு ரிசர்வ் செய்யப் போனால் தகவல் சொல்லுவதற்குச் சரியான ஆட்கள் இருக்க மாட்டார்கள். அப்படியே இருந்தாலும் 'சுள்' ளென்று எரிந்து விழுவார்கள். இவற்றையெல்லாம் தாங்கிக் கொண்டு வரிசையில் நின்றால், ஓர் ஆளுக்கு ஒரு டிக்கெட் கொடுத்து அனுப்புவதற்கே சுமார் ஐந்து நிமிடங்களையாவது சாப்பிட்டுவிடுவார்கள் அந்தக் கவுண்டர் கிளார்க்குகள். சுமார் பத்துப் பேருக்குப் பின்னால் வரிசையில் நின்றால் கூட நாம் டிக்கெட் வாங்கக் குறைந்தது ஒரு மணி நேரமாவது ஆகிவிடும். அந்த அளவுக்குச் சுறுசுறுப்பாகச் செயல்படுவார்கள் அவர்கள். அதனால் திருவள்ளுவரில் டிக்கெட் வாங்கவே மனம் வராது. அந்த வெறுப்பில் தான் ஆம்னி பஸ்களை நாட வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது.

ஒருமுறை இப்படியொரு வெறுப்புணர்ச்சியோடுதான் திருவள்ளுவர் பஸ் ஸ்டாண்டிலிருந்து அவசரமாக ஓடி வந்து மதுரை செல்லும் ஆம்னி பஸ் ஒன்றில் ஏறி உட்கார்ந்தோம். இரவு சுமார் பதினொரு மணிக்குச் செங்கல்பட்டைத் தாண்டிய போது பஸ் ரிப்பேராகி விட்டது. என்ன வெல்லாமோ செய்து பார்த்தார்கள்; பஸ் கிளம்பவேயில்லை. பிறகு எங்கேயோ தூங்கிக் கொண்டிருந்த ஒரு மெக்கானிக்கை எழுப்பிக் கொண்டு வந்து ரிப்பேர் செய்யச் சொல்லி, பஸ் கிளம்பும் போது, அதிகாலை ஐந்து மணி. உண்மையில் அந்த நேரத்திற்கு நாங்கள் மதுரைக்கே சென்றிருக்க வேண்டும்!

இதுபோன்ற கால தாமதத்தோடு பஸ்ஸுக்குள் உட்கார்ந்து போகவே கஷ்டப்பட வேண்டிய நிலையும் உண்டு. அப்படியொரு நெருக்கமான நிலையில்தான் சீட் அரேஞ்ச்மெண்ட்களைச் செய்திருப்பார்கள். இந்த லட்சணத்தில்விடுமுறை,முகூர்த்தம்போன்ற நேரங்களில் ஏராளமான பேர் வெளியூர்களுக்குப் பயணம் செய்வதால், அதைப் பயன்படுத்தி ஆம்னிபஸ்காரர்களும்ஸ்டாண்டிங் டிக்கெட்டுகளை ஏற்றிக் கொள்வார்கள். அப்போது பயணிகளில் யாரும் ஒரு பயணியாகவே தெரிய மாட்டார். ஏதோவொரு லக்கேஜைப் போல்தான் ஆடாமல் அசையாமல் உட்கார்ந்திருப்பார் அல்லது நின்று கொண்டிருப்பார், அப்படியொரு அவலமும் உண்டு!

இந்த நிலையில் வீடியோ போட்டால் யார் பார்க்க முடியும்? எப்படித்தான் பார்க்க முடியும்? அவர் தலை இவருக்கு மறைக்க, இவர் தலை இன்னொருவருக்கு மறைக்க... ஆக ஒருவருக்கொருவர் வாய்ச் சண்டை போட்டுக் கொண்டுதான் பயணம் செய்ய வேண்டியிருக்கும். இத்தனைக்கும் அந்த வீடியோவில் நல்ல படங்களையும் காட்ட மாட்டார்கள். ஏதாவதொரு 'சவை' படத்தைப் போட்டு அறுத்தெடுத்து விடுவார்கள். ஆனால் இவற்றையெல்லாம் தாங்கிக் கொண்டு விழித்திருந்து படம் பார்த்துக் கொண்டே சென்றால் இடையில் சில சமயங்களில் 'சுமன்' படங்களையும் போடுவதாகச் சொல்லிக் கொள்கிறார்கள். ஆனாலும் எங்களுக்கு அந்த அனுபவம் ஏற்படவில்லை.

சரி, இவற்றையெல்லாம் கூட விட்டுத் தள்ளுங்கள். டிக்கெட் வாங்கும் போது, சரியாக எட்டரை மணிக்கே பஸ் புறப்பட்டு விடும் என்று சொன்னார்களே என்று, அவசரம் அவசரமாகப் புறப்பட்டு முட்டி மோதிக்

ஹைட்பார்க் பேச்சு–6.

ஏ. தமிழகத் தலைவர்களே! சிங்கள விலங்குகளின் கோரப் பசிக்குத் தப்பித் தமிழகம் வந்திருக்கும் அந்தத் தமிழர்களைக் குடும்பக் கட்டுப்பாட்டுக் குறியீட்டைப் பூர்த்தி செய்யப் பயன் படுத்தும் கோரத்தையும், குறைந்த கூலிக்கு வேலைக்கு அமர்த்திக் கொள்ளும் கொடுமைகளையும் முதலில் கவனியுங்கள். பிறகு வேண்டுமானால் இலங்கைப் பிரச்னையைப் பற்றி வாய் கிழியப் பேசுங்கள்... வெறுமனே கறுப்பு பேட்ஜ் அணிவதால் மட்டும் உங்கள் கடமை முடிந்துவிடவில்லை என்பதை உடனடியாக உணருங்கள்.

கே. இராசசேகரன்.

மதுரை— 7.



கொண்டு ஓடி வந்து அந்த ஆம்னி பஸ்ஸில் ஏறி உட்கார்ந்தால், அந்த டிரைவர் எங்காவது ஒரு மூலையில் நின்று கொண்டு அலட்சியமாகப் பீடி பற்ற வைத்துக் கொண்டிருப்பார். 'ஓகோ இன்னும் நேரம் இருக்கும் போலிருக்கிறது' என்று நினைத்துக் கொண்டு நாமும் கீழே இறங்கிச் சென்று, ஒரு வாய் காப்பி குடிக்க ஆரம்பிக்கும் போதுதான் 'சீக்கிரம் சீக்கிரம்...' என்று குரல் கொடுப்பார்கள். நாமும் அவசரத்தோடு காப்பியைக் குடித்தும் குடிக்காமலும் ஓடி வந்து உட்கார்ந்தால், சுமார் பத்தடி தூரம் சென்றதும் பஸ் நின்று விடும். பிறகு ஒரு வழியாகச் சுமார் ஒன்பதரை மணிக்கு பஸ் புறப்படும். புறப்பட்ட பஸ் போலீஸ் கமிஷனர் அலுவலகத்தை ஒரு ரவுண்ட் அடித்துவிட்டுப் பிறகு புறப்பட்ட இடத்திற்கே வந்து சேர்ந்துவிடும். பஸ் நிறையும் வரை இதே கூத்துத்தான். ஒரு வழியாக பஸ் நிறைந்து புறப்படும் போதே நமக்குக் களைப்பாகி விடும்; நொந்து போய் விடுவோம்.

ஆமாம், இந்த ஆம்னி பஸ்கள் எப்படி முளைத்தன? நெடுந்தூர பஸ் போக்குவரத்து அனைத்தும் தேசியமயமாக்கப்பட்ட போது முளைத்தது தான் ஆம்னி பஸ்கள். தனியார் யாரும் ஒரு குறிப்பிட்ட வழித்தடத்தில் ரெகுலராக எந்தவொரு பஸ்ஸையும் வியாபார ரீதியில் விடக் கூடாது என்று சட்டம் வந்த போதுதான், 'காண்ட்ராக்ட் கேரேஜ்' என்ற போர்டுகளை மாட்டிக் கொண்டு இந்த ஆம்னி பஸ்கள் கிளம்பின. எங்காவது போலீஸார் பஸ்ஸை நிறுத்திக் கேட்டால் பயணிகள் அனைவரும் தாங்களெல்லாம் ஒன்றாகச் சேர்ந்து டூர் போவதாகச் சொல்லும்படி கூறுவார்கள். அதனால் சட்டத்திலிருந்து சுலபமாகத் தப்ப முடிந்தது.

இருந்தாலும் எந்தப் பயணியாவது வாய் தவறிப் போய் உண்மையைச் சொல்லி விட்டால் என்ன செய்வது? போலீஸாரிடம் மாட்டிக் கொள்ள வேண்டியதுதான். பிறகு அவர்களுக்குமாமூல்கொடுத்துவிட்டுத்தான் புறப்பட்டாக வேண்டும். பார்த்தார்கள் ஆம்னி பஸ் காரர்கள். இடையில்பூசாரிக்கு 'வெட்டு' வதை உள்ளேயிருக்கும் மூலஸ்தானத்திற்கே வெட்டிவிட்டால் எந்தவிதமான தொந்தரவும் ஏற்படாது என்று முடிவு கட்டி ஒரு சங்கம் அமைத்தார்கள். கோட்டைக்குச் சென்று பார்க்க வேண்டியவர்களைப் பார்த்துக் கொடுக்க வேண்டியதைக் கொடுத்துத் தங்களுடைய செயல்களைச் சட்டபூர்வமாக்கிக் கொண்டார்கள்! தேர்தல் நேரங்களிலும், சத்துணவு போன்றவற்றிற்கும் அவ்வப் போது 'நிதியுதவி' செய்ய வேண்டியதைத் தவிர வேறு தொந்தரவே இல்லை என்ற நிலைக்கு வந்து விட்டார்கள். இதுதான் உண்மை!

ஆக, ரயிலில் டிக்கெட் கிடைக்காமல் ஓர் இரவு முழுவதும் ஆம்னி பஸ் (திருவள்ளுவரிலும் இதே லட்சணம்தான்!)ஸில் பயணம் செய்தால், அடுத்த நாள் எந்த வேலையையும் செய்ய முடியாது. அதுவும் வீடியோ பஸ்ஸில் சென்றால் மறுநாள் முழுவதும் தலைவலி நிச்சயம்! உற்சாகத்தையும் சுறுசுறுப்பையும் இழந்தே ஆக வேண்டும். ஆதலால் பயணம் செய்ய வேண்டிய அனைவரும் முன் கூட்டியே திட்டமிட்டு ரயிலில் பெர்த் ரிசர்வ் செய்து கொண்டு பயணம் செய்வதுதான் நல்லது. அப்படியில்லாமல் ஆம்னி பஸ்களில்பயணம் செய்தால், அடுத்த நாள் அவதிப்படப் போவதைத் தவிர்க்கவே முடியாது. இது தான் எங்கள் அனுபவம்.

— பிரியன், மௌலி

படங்கள்: தாமு

அவர்கள்

என்னைக் குழப்பிக் கொண்டிருந்த அந்த விஷயத்தை யாரிடமும் காட்டிக் கொள்ளாமல் பேசிக் கொண்டிருந்தேன்.

"இதுவரைக்கும் இவ்வளவு தூரம் நீங்க போனதில்லே, கேசவா ...? இனிமேட் சேஞ்சா இருக்கறதாலே உடம்புக்கு எதுவும் பண்ணலாம். டாக்டர்கிட்டே செக்கப் பண்ணிக்கங்க...; மூணு மாசம் கடத்தியாகணுமே..?"

ஆபீஸ் மானேஜர் கண்ணாடியை அழுத்தி விட்டபடியே சொன்னார்.

"நீங்க சொன்னபடியே செய்துக்கறேன் சார்..."

"எல்லாம் நல்லபடியாகவே இருக்கும். பெஸ்ட் ஆஃப் லக் மிஸ்டர் கேசவன். சொல்ல மறந்துட்டேனே. ஆபீசுலே நீங்க முடிச்சுத் தர வேண்டிய கணக்கெல்லாம் நாளைக்கு மதியத்துக்குள்ளாற முடிச்சிட்டீங்கன்னா.. வந்த பிறகு உங்களுக்கும் வேலை பளு குறைவாக இருக்கும் பாருங்க...!"

"ஓ. கே. சார்..."

"இந்த ஆபீசுலேயே உனக்கு மட்டுந்தான் டெல்லிக்கு ட்ரெயினிங் போகக் கொடுத்து வச்சிருக்கு... அனுபவிச்சுட்டு வாப்பா...!"

—ஆபீஸ் நண்பன் பொறுமையோடு சீண்டினான்.

"எனக்குக் கல்யாணமாகி முழுசா இருபத்து ஏழு நாள் கூட முடியலே. அதுக்குள்ளே வொய்ஃப்பை பிரிஞ்சு போக வேண்டியதாயிடுச்சேன்னு நான் இருக்கேன். நீ வேறே...!"

வருத்தத்தோடு சொல்லிவிட்டுக் கிளம்பினேன்.

வெளியே வந்ததும் அந்த நினைவு மீண்டும் விஸ்வரூபம் எடுத்தது!

ஐந்து வருடத்திற்கு முன்பாகத்தான் என் பெற்றோர் ஆறு மாத வித்தியாசத்தில் போய்ச் சேர்ந்திருந்தனர். சொந்தமென்றிருந்த ஒரே தம்பியைப் படிக்க வைத்து பட்டதாரியாக்கி விட்டேன். அவனும் என்னைப் பெற்றோரின் நிலையில் வைத்துக் கொண்டிருக்கிறான். எங்கள் இருவர் இடையிலேயும் மனஸ்தாபங்கள் என்பதற்கே என்றும் இடம் இருந்ததில்லை. நான், மனைவி, தம்பி மூவரைத் தவிர வீட்டில் வேறு யாரும் இல்லை. அதனால்தான் இதுவரை எந்தவிதப் பிரச்னையும் இல்லாமல் இருந்த எங்கள் குடும்பத்தில், இனி ஒரு விபரீதம் நடந்து விடுமோ என்று நினைத்து நினைத்துத் தவித்தேன்.

என் மனைவியை, 'அண்ணி அண்ணி' என்று வார்த்தைக்கு வார்த்தை அழைக்கும் என் தம்பிக்கு என் மனைவி ஒரு தாயைப் போல்தான்.

அவனைச் செல்லத்துடன் கண்டிக்கும் போது கூட, அடிக்கும் பாவனையில் கையை ஓங்கிக் காட்டும் அவளுக்கு நிச்சயமாக அவனும் ஒரு பிள்ளையேதான்!

இருந்தாலும்—

மூன்று மாதப் பயிற்சிக்காக டெல்லி செல்கின்ற நான் இந்த நேரத்தில் மனைவியையும் தம்பியையும் ஒன்றாக வீட்டில் விட்டுப் போவதைப் பற்றி ஊர் என்ன சொல்லுமோ என்பதுதான் எனது கலக்கத்திற்குக் காரணமாக இருந்தது!

ஊர் வாயின் பேச்சு, பொய்யாகவே இருப்பினும் அதைத் தாங்கிக் கொள்ளும் திராணியும் என் இதயத்திற்கு இல்லையே... என்ன செய்வேன்?

இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கத் தெரியாமல்தான் நான் தவித்துக் கொண்டிருந்தேன்.

மறுநாள் மாலை ஐந்து மணிக்குப் பயணம்.

✲ ✲ ✲ ✲ ✲

இரவு வீட்டில்—

"அண்ணா... இதோ ரயில்லே ஃபர்ஸ்ட் கிளாஸ் டிக்கெட் ரிசர்வ் செய்துட்டு வந்துட்டேன். நாலரை மணிக்கெல்லாம் சென்ட்ரல்லே இருக்கிறாப்பலே புறப்பட்டுப் போயிடணும்..."

சுறுசுறுப்புடன் சொன்னான் சுந்தர்.

"சரி... நான் பேக் பண்ணச் சொல்லியிருந்தேனே... எல்லாம் முடிச்சுட்டியா?"

"ஓ. கே. அண்ணே! டிரஸ் மட்டும்தான் பாக்கி இருக்கு. லாண்டரியிலே இன்னும் பத்து நிமிடத்திலே தரேன்னு சொல்லியிருக்கான். அதையும் வாங்கி வந்து பேக் பண்ணிட்டா சரியாப் போச்சு. மற்றபடி இரண்டு ஜோடி சாக்ஸ், பூட்ஸ், பவுடர், கண்ணாடி... சீப்பு மற்றதெல்லாம் ரெடி..."

"வெரிகுட்..."

மெலிதாகச் சிரித்துக் கொண்டேன்.

"இங்கே தினமும் காலை அஞ்சு மணிக்கு வெந்நீர் போட்டுக் கொடுத்திடுவேன். அங்கே அதுக்கெல்லாம் வசதி இருக்குமோ என்னமோ?"

பால் டம்ளரில் நீட்டியபடியே கேட்டாள் என் மனைவி.

தனியாக இருப்பார்களே...

''அவ்வளவு பெரிய ஊரிலே அதுக்கான ஏற்பாடெல்லாம் இல்லாமலா போகும்...? சமாளிச்சுக்கறேன் லலிதாம்பிகை...''

அவள் முகத்தில் பிரிவுத் துயர் தெரிந்தது. எனக்கும்தான்!

''மூணு மாசத்திலே ஒரு தடவை கூட வர முடியாதபடி அது என்னங்க பயிற்சியாம்...?''

மெல்லக் கேட்டபடியே அவள் உள்ளே போய் விட்டாள். இவளைப் போயா சந்தேகிப்பது?

''அண்ணே... இதோ டெல்லி விலாசம் ஒண்ணு. இதை வச்சுக்கங்க. என் காலேஜ் மேட்டா இருந்தானே சரவணன்...? அவனோட மாமனார் வீடு அங்கேதான். நேரம் கிடைச்சா போய்ப் பாருங்க. இத்தனை தூரத்தில் அறிமுகம் தேவைப்படுறது நல்லது தானே...!''

''ஆமாமா... கொண்டா...'' என்று வாங்கிக் கொண்டேனே தவிர, எனது குழப்பம் மட்டும் நீங்கவேயில்லை.

* * * * *

மறுநாள் அலுவலகம் சென்று, இருந்த பாக்கி வேலைகளை முடித்துவிட்டு அனைவரின் வாழ்த்துக்களோடு வீடு திரும்பிய என்னோடு, ஆபீஸ்நண்பன் ரவியும்டவுன் பஸ்ஸுக்காகக் காத்திருந்தான்.

''ஆமாம் கேசவன்... உன் மனைவியை அவுங்க பிறந்த வீட்டிலே விட்டுட்டுத்தானே டெல்லிக்குக் கிளம்பறே...?''

அவன் சிகரெட் புகையைச் சுழித்தபடி கேட்டான்—

இலக்குமணன்



''இல்லே...''

நான் அமைதியாகச் சொன்னேன்.

''பின்னே...? இங்கேயேவா விட்டுட்டுப் போறே...? நல்ல பைத்தியக்காரம்பா நீ... உன் தம்பி கல்யாணம் செஞ்சுக்கற வயசுலே இருக்கான்... ரெண்டு பேரும் சேர்ந்து இருந்தா ஊரு என்ன பேசும்னு தெரியுமில்லேயா?''

நான் நினைத்துக் கொண்டிருந்த பிரச்னையை, அவனும் தொட்டுப்பேசியது எனக்கு மேலும் மேலும் குழப்பத்தையே கொடுத்தது!

''மனசுலே சுத்தம் இருக்கு... ஊருக்காகவா நாம வாழ முடியும்...?'' சமாளித்துக் கொண்டு சொன்னேன்.

''என்னமோப்பா... உன் குடும்ப விஷயத்துக்குள் நுழைந்து பேச எனக்கு உரிமை இல்லே. இருந்தாலும் என் மனசுலேபட்டதைச் சொன்னேன்!'' என்றபடியே வந்த பஸ்ஸில் ஏறிக் கொண்டான்.

எத்தனை எளிதாகச் சொல்லிவிட்டுக் கிளம்பி விட்டான் அவன்! எனக்கும் அது தான் சரியென்று தோன்றினாலும் நடைமுறையில்...

தன்னைப் பற்றித் தவறாக எண்ணிக் கொண்டுதானே அண்ணன் அவர் மனைவியைப் பிறந்தகத்திற்கு அனுப்பி வைக்கிறார் என்று தம்பி நினைக்காமலா இருப்பான்?

தன்னை நம்பாமல் அல்லவா தம்பியிடமிருந்து தன்னைப் பிரித்து வைக்கிறார் என்று என் மனைவி எண்ணிப் பார்க்க எவ்வளவு நேரம் ஆகிவிடும்?

அதற்கு என்னதான் வழி?

பலவாறு மூளையைக் கசக்கிக் கொண்டே சென்றேன்.

* * * * *

அப்போதுதான் வீட்டிற்குள் நுழைந்திருப்பேன். என் மனைவி வாய் கொள்ளாமல் சிரித்தபடி நின்று கொண்டிருந்தாள்.

''அண்ணே...! நீங்க ஊருக்குப் போறதுக்கும் முன்னாலே என்ன செய்யறீங்க... அண்ணியை சைதாப்பேட்டையிலுள்ள அவுங்க வீட்டிலே விட்டுட்டுத்தான் போறீங்க...''

தம்பி குதூகலத்துடன் சொன்னான்.

''ஏன்...? அவனுக்கு என்னாச்சு...?''

புரியாமல் கேட்டேன்.

''ரெண்டு மாசத்துக்கும் முன்னே ஒரு இண்டர்வியூவுக்குப் போயிருந்தேன்ல கோவைக்கு...? அங்கே எனக்கு வேலை கிடைச்சுட்டது. இதோ அப்பாயின்ட்மென்ட் ஆர்டர். நாளைக்கே ஜாயின் பண்ணிடணுமாம்...! அண்ணி எப்படி இங்கே தனியா இருப்பாங்க...?''

''நான் ஊருக்குக் கிளம்பற சமயம் பார்த்து உனக்கு வேலை கிடைச்சிருக்கு பாரு சுந்தர்...? ரொம்ப சந்தோஷம்பா... அப்புறம்... நீ சொன்னது மாதிரியே அவளை அங்கே கொண்டு விட்டுட வேண்டியதுதான்...''

ச்சே! இவர்களைப் போயா நான் சந்தேகப்பட்டுத் தவித்தேன்!

அந்த இரு உள்ளங்களின் புனிதமும் காப்பாற்றப்பட்டு விட்ட விதத்தை நினைத்துப் பார்க்கையில் என்னையறியாமலேயே என் கண்கள் பனிக்க ஆரம்பித்து விட்டன!

அருள்வாக்கு

''குருவை விட சிரேஷ்டமானவர் இல்லை. நமக்கு அவரிடத்தில் பூர்ணமான நம்பிக்கை ஏற்பட வேண்டும். அது நிஜமான நம்பிக்கையாக இருக்க வேண்டும். நமக்கு அவரிடத்தில் ஈசுவரனே இப்படி வந்திருக்கிறான் என்ற நம்பிக்கை வந்து விட்டால், அப்புறம் தனியாக ஸ்வாமி கூட வேண்டாம். இந்த நம்பிக்கையே, அவரிடத்தில் நாம் வைக்கிற பக்தியே நம்மைக் கடைத் தேறச் செய்துவிடும்.

வைஷ்ணவர்களுக்கு ஆசார்ய பக்தி தான் மிகவும் பிரதானம்.

ஈசுவர அபராதம் பண்ணினால் ஈசுவரனிடத்திலேயே போய் மன்னிப்புக்



கேட்க வேண்டுமென்பது இல்லை. ஆசார்யன் மன்னித்து விட்டாலே போதும். ஈசுவரனுடைய கோபம் தணிந்துவிடும். ஆனால் குருவினிடத்தில் அபசாரம் பண்ணி விட்டு ஈசுவரனிடத்தில் போனாலும் ஒன்றும் நடக்காது. குருவிடத்திலேயே போய்த்தான் அந்த அபசாரத்துக்கும் நிவிருத்தி தேடிக் கொள்ள வேண்டும் என்று ஸ்வாமியே சொல்லிவிடுவார்.

சிஷ்யனுக்காகக் குருவே பரமாத்மாவிடம் சிபாரிசு பண்ணினால் அவருக்குக் கோபம் போய் இவனுக்கு அநுக்கிரஹம் பண்ணிவிடுவார். ஆனால் குருவுக்கே கோபம் வந்துவிட்டால் ரக்ஷிக்கிறவர் எவருமே இல்லை. இப்படி ஒரு ச்லோகம் கூட இருக்கிறது.

குருர் பிதா குருர் மாதா குருர் தைவம் குருர் கதி:|
சிவே ருஷ்டே குருஸ்த்ராதா குரௌ ருஷ்டே நகச்சன ||

ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராச்சார்ய சுவாமிகள்

நட்சத்திர ஓட்டல்களில் வேலை வாய்ப்புகள்

வரீங்களா? இந்த வாரம் ஃபைவ் ஸ்டார் ஓட்டல்கள் பக்கம் ஒரு ரவுண்டு அடித்து அங்குள்ள வேலை வாய்ப்புகள் பற்றித் தெரிந்து கொள்ளலாம்...!

இங்கேயும் பலவிதமான வேலைகளுக்கு வாய்ப்புகள் இருக்கின்றன. இங்கு ரெஸ்பான்ஸிபிள் பதவிகளுக்குத் தேவைப்படுபவர்கள் வெறும் டிகிரிகாரர்களோ அல்லது போஸ்ட் கிராஜுவேட்டுகளோ அல்ல. கூடவே கொசுருக ஹோட்டல் மானேஜ்மெண்ட்டில் டிகிரியோ, டிப்ளமாவோ வாங்கினவர்கள்தான்.

இங்குள்ள வேலைகளை நிர்வாகம், விருந்தினர்களைக் கவனித்தல், சமையல் என்று வகைவகையாய்ப் பிரிக்கலாம்.

சமையல் பகுதியில் எடுபிடி வேலை செய்பவர் முதல் கேட்டரிங் செக்ஷனின் சீஃப் வரை எத்தனையோ! பொதுவாக இந்தப் பிரிவில் கேட்டரிங் இன்ஸ்டிடியூட்டில் படித்தவர்களுக்குச் சுலபமாய் வேலை கிடைத்து விடுகிறது. இங்கே பணி புரிபவர்களுக்குச் சிக்கனமான முறையிலும், மிகச் சுவையாகவும், விதம் விதமாகவும் சாப்பிடுபவர்கள் 'சபாஷ்' சொல்லும் படியும் தயாரிக்கிற திறமை பெற்றிருக்க வேண்டும்.

தவிர ரெஸ்டாரண்டில், சமைத்த உணவைப் பரிமாறுகிற வேலையும் உண்டு; தங்கியிருப்பவர் அறைக்கே உணவை எடுத்துச் சென்று தருகிற வேலையும் உண்டு. இதற்கு எஸ். எஸ். எல். ஸி. கூடப் போதும். ரொம்பவும் பணிவாக நடந்து கொள்ளுகிற குணம் மிக மிக அவசியம். ஆனால் இவர்களுக்கு எந்தவிதமான தாழ்வு மனப்பான்மையும் இருக்கக் கூடாது. இன்னொரு மிக முக்கியமான தகுதி, சரளமான ஆங்கிலத்தைப் புரிந்து கொள்கிற, பேசுகிற திறமை. இது இல்லையெனில் "யூ ஆர் அன்ஃபிட் பார் திஸ் ஜாப்" என்று நிர்தாட்சண்யமாய்ச் சொல்லி கல்தா கொடுத்து விடுவார்கள்.

இது தவிர ரிஸப்ஷன் அஸிஸ்டெண்ட், என்று ஆரம்பித்து, ஓட்டலுக்கு ஓட்டல் வேறுபடுகிற பல் வேறு பதவிகள்; பொறுப்புகள்; வேலைகள். இதற்கெல்லாம் டிகிரிக்காரர்கள் போதும்; என்றாலும் நட்சத்திர ஓட்டல்காரர்கள் விரும்புவதென்னவோ, எம். பி. ஏ., ஹோட்டல் மானேஜ்மெண்ட், பப்ளிக் ரிலேஷன்ஸ் போன்ற அடிஷனல் குவாலிஃபிகேஷன் உள்ளவர்களைத்தான்.

பி. காம், எம். காம். படித்தவர்களுக்கும், தவிர ஸி. ஏ. ஐ. ஸி. டபுள்யூ. ஏ. படித்தவர்களுக்கும் அக்கவுண்ட்ஸ் டிப்பார்ட்மெண்ட்டில் வேலை கிடைக்கும்.

இவையெல்லாம் போக, ஓட்டலில் உள்ள மின்சார சமாச்சாரங்களைப் பராமரிக்க, பழுது பார்க்க, டிகிரி, டிப்ளமா ஹோல்டர்கள் வேலைக்கு நியமிக்கப் படுகிறார்கள்.

'நான் எஸ். எஸ். எல். ஸி. கூட பாஸ் செய்யவில்லை! எனக்கு ஏதாவது சான்ஸ் இருக்கிறதா?' என்று கேட்பவர்களுக்குப் பதில்; "ஓ. எஸ்! கவலையே வேண்டாம். அறைகளையும், மற்ற இடங்களையும் துடைத்துச் சுத்தம் செய்வது எட்ஸட்ரா வேலைகள் கிடைக்கும் உங்களுக்கு. இதற்கும் ஓரளவு ஆங்கில அறிவு இருந்தால் நல்லது.

பெண்களுக்கு ரிஸப்ஷனிலும், மற்றும் நிர்வாகப் பொறுப்புகளிலும் வாய்ப்பிருக்கிறது.

ஆங்கிலம் தவிர, பிரெஞ்சு, ஜெர்மன் போன்ற அந்நிய மொழிகளும் பிற இந்திய மொழிகளும் தெரிந்திருப்பது இந்த ஃபீல்டில் ஒரு ப்ளஸ் பாயிண்ட்.

முன்னாள் ராணுவத்தினர், செக்யூரிட்டி பொறுப்புகளில் அமர்த்தப்படுகிறார்கள்.

'சேல்ஸ் பிரமோஷன்' என்று ஓட்டலின் பிஸினஸை விருத்தி செய்வதற்காகச் சிலர் நியமிக்கப் படுவார்கள்.

ஓட்டல் லைனில் வர விரும்புகிறவர்களுக்கு ஒரு முக்கியமான வார்த்தை: சிடுசிடுப்பு, எதற்கெடுத்தாலும் சட்டென உணர்ச்சி வசப்பட்டுவிடும் சுபாவம், முன்கோபம் இவையெல்லாவற்றையும் மூட்டை கட்டி வைத்து விடுங்கள்!

பாங்க் போல, ரயில்வே போல இங்கே எல்லா ஓட்டல்களுக்குமாய்ச் சேர்த்து, பரீட்சையெல்லாம் வைத்துத் தேர்வு செய்யப்படுவதில்லை. அவ்வப்போது செய்தித்தாள்களில் விளம்பரம் வரும். "அப்ளை" பண்ண வேண்டியதுதான். பொதுவாக நேரடியாகவே இண்டர்வியூவுக்கு அழைப்பார்கள். இதில் இரண்டு மூன்று ரவுண்டு கூட இருக்கும்.

சம்பளம். இது ஓட்டலுக்கு ஓட்டல் வேறுபடுகிற ஒன்று. லோயர் கேடர்க்காரர்களுக்குச் சம்பளம் கொஞ்சம் குறைச்சல்தான். பெரிய, பொறுப்பான பதவிகளுக்கு நல்ல சம்பளமும், பிற வசதிகளும் கிடைக்கும்.

தகவல்: **எஸ். சந்திரமௌலி**



ஆகாச கங்கை

பி.வி.ஆர்

24

வசுமதி அரவிந்தனுடைய கண்களைச் சந்தித்தாள். அவளால் பேச முடியவில்லை.

''வசு! நீயா .... இந்த வேளையிலா? ஏன் உன் முகம் இப்படிக் கோரமாகக் கலங்கிப் போயிருக்கு?''

''உன்னை வான்னு சொல்ல மாட்டீங்களா அர்விந்த்?''

''இது உன் வீடு மாதிரி, வசு! வரச் சொல்லித்தான் நீ வரணுமா?''

அரவிந்தன் நகர்ந்து திரும்பி உள்ளே செல்ல வசுமதி பின் தொடர்ந்தாள்.

''அர்விந்த்!''

''உம்...''

''எனக்கு இப்ப ரொம்பப் பசிக்கிறது..''

''சாப்பிடலாம்...''

''நான் இன்னிக்கு இங்கேயே தூங்கலாமா?''

''உன் வீட்டில் உன்னைத் தேட மாட்டார்களா, வசு?''

''மாட்டார்கள்...''

''எனக்கு ஆட்சேபணை இல்லை''.

''அவன் ஏதாவும் கத்துவான்''.

''அவ ஏன் கத்தணும்?''

''அவளுக்கு என்னை ஒரு தடவை பிடிச்சா ஒம்பது தடவை வெறுப்பு ஏற்படறது...''

''அது ஏற்படாமல் நீதான் பார்த்துக் கொள்ள வேணும்''.

''இப்ப அவ என்ன செய்யறா?''

''தெரியலே... நீ பெல் அடிக்கறப்ப என் கிட்டே பேசிண்டிருந்தா''.

சொன்ன அவன் மாயாவின் படுக்கை அறைக்குச் சென்றான்.

மாயா, தலையணை இல்லாமல் தூங்கிக் கொண்டிருந்தாள். முகமெல்லாம் வியர்த்து முத்துக் கட்டியிருந்தது.

மின் விசிறியைப்போட்டுவிளக்கை அணைத்தான்.

''தாங்க் யூ அந்து!''

கண்களைத்திறக்காமலேமாயா பேசினாள்.

''நீ இன்னும் சாப்பிடலே, மாயா...''

''நீ சாப்பிடறப்ப நானும் சாப்பிடறேன்.''

''வசுமதி வந்திருக்கா...''

மாயா இன்னும் கண் திறவாமல், ''எதுக்கு?'' என்று கேட்டாள்.

''பசிக்கிறதாம்''.

''அவளும்சாப்பிடட்டும்...ஏன் அவளுக்கு அவள் வீட்லே சாப்பாடு போடலையா?''

''தெரியாது, மாயா...! நீ ஓய்வு எடுத்துக்கோ... நான் அரை மணி நேரத்திலே எல்லாம் தயார் பண்ணிடறேன்.''

''தாங்க் யூ அந்து!'' என்ற அவள், ''இங்கே வாயேன்!'' என்றாள்.


அவள் கட்டிலில் முழங்காலை இடித்த வாறாய் அவள் அருகே போய் நின்றான்.

மெல்லிய குரலில், ''அவள் எங்கே இருக்கா?'' என்றாள்.

''பாத்ரூமில் முகம் அலம்பிண்டிருக்கா.''

மறுகணம் படுக்கையில் எழுந்து உட்கார்ந்த மாயா,, அரவிந்தனுடைய கழுத்தைப் பிடித்து இழுத்தாள்.

''அந்து! அந்து! நீ ரொம்ப நல்லவன்... என்னைக் கடைசி வரை காப்பாத்துவியா?''



''ஏம்மா இப்படிக் கேட்கறே, நான் உன்னைக் காப்பாத்தத்தானே கல்யாணம் செய்துண்டிருக்கேன்''.

''அவன் மறுபடியும் என்னைத் தேடிண்டு வருவானா?''

''யார்மா?''

''அதான் ... அவன் ... மலபார் ஹில்ஸ் கார்டன்லே.... அவன் ... அவன் வந்தா நான் என்ன செய்வேன் அந்து? அவன் கூட வந்தவன் டிரைவர் வயிற்றிலே குத்தினான் ... அவனும் கூட வருவானா? உன் வயிற்றிலே குத்துவானா?''

''யாரும் இனிமே வரமாட்டா, மாயா ... நான் இருக்கிறப்ப உன்னை யாரும் நெருங்க மாட்டா ...''

''என்னாலேதானே டிரைவர் செத்துப் போனான்?''

''சீச்சி ... உன்னைத் தாக்கியவனை நீ கல்லாலே அடிச்சே. அவன் எப்படியிருக்கான்னு ஏன் டிரைவர் பார்க்க ஓடணும்? அதுவும் இருட்லே, மழை பெய்யறப்ப? அதான் இன்னொருத்தன் குத்தினான்''.

''உன்னை அவன் குத்த மாட்டானே ...''

''மாட்டான் ...''

''அந்து!''

''என்னம்மா?''

''எனக்கு உன்னைப் பிடிச்சிருக்கு...''

''தாங்க் யூ மாயா ...''

''ரேப் பண்றது பெரிய தப்பு இல்லே''

''ஆமாம், மாயா''.

''அவன் அன்னிக்கு ரேப் பண்ணியிருந்தா என்ன நடந்திருக்கும்?''

''நீதான் தப்பிச்சுண்டாயே, மாயா.''

''அன்னிக்கு அவன் என்னை ரேப் பண்ணியிருந்தால், நான் செத்துப் போயிருப்பேன்''

''கொஞ்சம் ரெஸ்ட் எடுத்துக்கோ, மாயா ....

அவள் இன்னும் அவன் கழுத்தை விடவில்லை. அவனுக்கு வலித்தது.

''அந்து ...

''சொல்லும்மா ...''

''ஆம்பிளைதான் பொண்ணை ரேப் பண்ணுவான் இல்லியா?''

''ஆமாம்''.

''எப்பவோ ஒரு புஸ்தகத்திலே படிச்சேன் அந்து ... ஒரு பொண் ஒரு ஆணை ரேப் பண்ரு ...''

''நம்ம தேசத்திலே அப்படி நடக்காது, மாயா ...''



''வசுமதியைப் பார்க்கறப்பவெல்லாம எனக்கு அந்தப் பொண்ணு நினைவு வர்றது.''

''வசு நல்ல பெண்''

''நீ சொல்றே...''

''நீயே பாரேன். அவ இன்னிக்கு நம்ப வீட்லேதான் தூங்கப் போறா!''

''எங்கே இடம்?''

''சமாளிச்சுக்கலாம்...''

''இன்னிக்கு ஒரு நா நீ என் கூட இந்தக் கட்டில்லே படுத்துக்கோ, அந்து...''

''உனக்குக் கஷ்டமா இருக்கும்''.

''சந்தோஷமா இருக்கும், அந்து. உன்னைத் தொட்டுண்டே தூங்குவேன். உன் தூக்கம் கெட்டுடாதே?''

''அதோ பாத்ரூம் கதவு திறந்தாச்சு... என் கழுத்தை விடு, மாயா...

கையை எடுத்த அதே கணத்தில மாயாவின் அதரங்கள் அரவிந்தனுடைய கன்னத்தில் பதிந்தன.

அரவிந்தனுடைய நரம்புகள் புல்லரிக்க, அவன் ஆச்சரியமும், திகைப்புமாய் நின்றான்.

''தப்பு செய்ஞ்சுட்டேனா, அந்து?''

''இல்லேம்மா''.

''நீ தூங்க வர்றப்ப அந்தக் கன்னத்திலேயும் தர்றேன்...''

சொல்லிவிட்டு மாயா பாட ஆரம்பித்தாள்:

* * * * *

சாப்பாடு முடிந்தவுடனே மாயா படுக்கை அறைக்கு ஓடினாள்.

''என்கிட்ட அவ ஒரு வார்த்தை பேசலே!'' என்றாள் வசு.

''ஏன் இதையெல்லாம் பெரிசா நினைக்கிறே, வசு!''

''தப்புத்தான் அர்விந்த்... அவ இருக்கிற நிலையில் எதையும் பெரிசு பண்ணக் கூடாது.''

அரவிந்தன் பதில் கூறவில்லை.

''மிஸ்டர் தாரக்ராமே சொன்னார், மாயாவுக்கு இந்த ஜன்மத்தில குணமாகாதுன்னு.''

''யார்கிட்ட சொன்னார்?'' அரவிந்தனுடைய ரத்தம் சூடேறலாயிற்று.

''எங்கிட்டே. ஹைகோர்ட்டுக்கு என்னைப் பார்க்க வந்திருந்தார்''.

''கேஸ் விஷயமாகவா?''

''இல்லே''

''அப்ப?''

''மாயா — அரவிந்த் விஷயமா''

''என்ன கேட்டார்?''

''என் பெண் எப்படி இருக்கார்னு விசாரிச்சார்?''

''அதை உன்னிடம் விசாரிப்பானேன்?''

''இங்கே வரக்கூடாதுன்னு நீங்க கண்டிஷன் போட்டிருப்பதாகச் சொன்னார்''.

''அது வேறு விஷயம். தாரக்ராம் உன்னை விசாரிப்பானேன்?''

''நான் இங்கே தினசரி வர்றேன்னு அவருக்குத் தெரிஞ்சிருக்கு போலிருக்கு?''

அடுத்த கணமே ஆராமுதன் அவன் கண் முன் வந்தார். அவர்தான் சொல்லியிருக்க வேண்டும். வசுவின் பெற்றோர்கள் தாரக்ராமைச் சந்தித்துப் பேச நிச்சயமாக வாய்ப்பு இல்லை.

வசு தொடர்ந்தாள்.

''பெரிய தப்பு செய்ஞ்சுட்டதா அவர் மாய்ஞ்சு போனார்''.

''என்ன தப்பு?''

''பாம்பே லே பெரிய பெரிய டாக்டர்களெல்லாம் அட்வைஸ் பண்ணினார்களாம், மாயாவுக்கு கலியாணமே செய்யக் கூடாதுன்னு. வீட்லேயே வைச்சுண்டு என்ன சிகிச்சையை எப்படி செஞ்சாலும் அவளுக்குக் குணமாகிற வாய்ப்பு இல்லையாம். ஒரு நல்ல மென்டல் அஸைலத்தில சேர்த்தால், உடனடியா இல்லேன்னாலும், அஞ்சாறு வருஷத்திலே கொஞ்சம் தேறலாம்னு சொன்னார்களாம். ஆனா அவர்களை எல்லாம் லட்சியம் பண்ணாமே அவசரப்பட்டு உங்களுக்குக் கொடுத்து விட்டாராம்''.

''இதை எல்லாம் தாரக்ராம், அதாவது என் மாமனார் — உன்கிட்டே — அதாவது, வசுகிட்டே சொன்னாரா?'' என்று கேட்டான் அரவிந்தன்.

''ஆமாம், அர்விந்த்!''

''நீ என்ன நினைக்கிறே, வசு!''

''அவசரப் பட்டுட்டீங்க, அர்விந்த்... புலி வாலைப் பிடிச்சுட்டீங்க... அதுவும் பைத்தியம் பிடிச்ச புலி''.

அரவிந்தன் பீரிட்டு வந்த சினத்தை அடக்கிக் கொண்டான்.

''இப்ப என்ன செய்ய?''

''இண்டியன் லூனஸி ஆக்ட் அப்படீன்னு ஒரு சட்டம் இருக்கு. டாக்டர்கன்ட்டேந்து சர்ட்டிபிகேட் வாங்கிட்டா, கோர்ட் உத்தர

ஹைட்பார்க் பேச்சு



7. 'பண வீக்கத்திற்குக் காரணம் மிகுதியான பணப் புழக்கம் தான்' என்று பொருளாதார நிபுணர்களே கூறுகிறார்கள். இந்த நிலையில் 'பண வீக்கத்தைக் கட்டுப்படுத்த வேண்டும்' என்று நொடிக்கு நூறு தரம் சொல்லிக் கொண்டிருக்கும் அரசாங்கமே, 'லோன்மேளா' என்ற பெயரில் திரும்பி வராத கடன்களை அள்ளி வீசிக் கொண்டும், மாநிலத்துக்கு மாநிலம் லாட்டரிச் சீட்டுக்களை ஏராளமாக அச்சடித்து விற்றுக் கொண்டிருப்பதும் என்ன முரண்பாடு? இது பற்றிக் 'கல்கி'யின் ஹைட்பார்க் பேச்சு பகுதியில் வேண்டுமானால் பேசலாமே தவிர, வேறு என்ன நடந்து விடப் போகிறது?

சென்னை—44. கே. கணபதி சுப்பிரமணியன்.



ஷா வாலஸ் வழங்கும்
சூப்பர் பவர்
ரீகல்
டிடர்ஜெண்ட் கட்டி
அழுக்கைத் தகர்த்திடும்
துணிகளைக் காத்திடும்
ரீகலின் அபார சலவை சக்தி, உங்கள் துணிகளில் விடாப்பிடியாகப் படிந்திருக்கும் அழுக்கைத் தகர்த்து விரட்டுகிறது. உங்கள் துணிகளை அதிவெண்மையாகவும் பளிச்சென்றும் சலவை செய்கிறது.
மேலும் ரீகலின் பாதுகாப்பான சலவை உங்கள் துணிகளுக்கு இதமானது. மென்மையானது... புதுமையான நறுமணத்துடன் கூட.
Super Power
Regal
Tough on dirt - Soft on clothes
ACIL/0592/83-Tam.
ஷா வாலஸின் தரமான தயாரிப்பு
Shaw Wallace


CONFERENC
எனக்கு எப்படிய்யா தெரியும்! அவங்க ராகமாலிகா பட்டு சேலை கட்டிகிட்டு ஆர் பாட்டமா வந்து நின்னுங்க! சீப் கெஸ்ட்ன்னு நெனச்சு மாலையை போட்டுட்டேன்.
இப்ப சீப் கெஸ்ட்டுக்கு என்ன போடறது?
UMA FEATURES

ஹைபார்க் பேச்சு — 8.

நமது 'மாண்புமிகு'க்கள் அனைவரும் மக்களுக்கு உழைப்பதற்காகவே அவதாரம் எடுத்திருப்பது போல் பேசுகிறார்கள். அப்படியானால் ஓர் அமைச்சர் ஒரு பகுதிக்கு வரும்போது, அந்தப் பகுதியில் போக்குவரத்து அனைத்தையுமே நிறுத்தி, அவசரமாகச் செல்லும் மக்களை அவதிக்குள்ளாக்குவது எதற்காக? நமது மாண்புமிகுக்களைத்தான் கேட்கிறேன்...?

மதுரை— 1. எஸ். பிரியதர்ஷினி.



வும் அனுமதியும் கிடைக்கும்''.

''நீ புத்திசாலி வக்கீல், வசு! ஆனா சட்டம் வேறே, மனிதாபிமானம் வேறே!''

''மனிதாபிமானம் என்கிற பெயரில் நீங்க உங்களையே தினசரி குத்திக் கிழிச்சு ரணகளமாக்கிக்கறது விவேகம் இல்லே, அர்விந்த்!''

''உண்மைதான்... தாரக்ராம் என்னை ஏமாத்திட்டார், வசு. நோ, நான் ஏமாந்துட்டேன்... எதிர்காலத்திலே கிடைக்கக் கூடிய பெரிய பதவிக்காக நான் அவர் விரிச்ச வலையில் விழுந்து விட்டேன்...''

அவனுடைய குரலில் கேவல் ஒலித்தது.

வசுமதிக்கு அவனுடைய குரலின் தீனஒலி ஊட்ட சக்தியாகத் தோன்றியது.

''நடந்து போனதை ஏன் நினைச்சுப் புலம்பறீங்க, அர்விந்த்? நானும் தியாகம்ங்கற பேர்லே பெரிய தப்பைப் பண்ணினேன். அதுக்காக நெஞ்சார அழறேன்... தூக்கமில்லாம தவிச்சேன்... ஆனா தினசரி இங்கே வந்து போனதில், தினசரி உங்க முகத்தைப் பார்க்கறதில், உங்களோட ரெண்டு வார்த்தை பேசறதில் என் துக்கமெல்லாம் மறைஞ்சு போறது. ஆனா இது தற்காலிகமா மறையற துக்கம்...''

''உண்மைதான் வசு''.

''ஊரையும் உலகத்தையும் நினைச்சு நினைச்சு மனம் தளரக் கூடாது, அர்விந்த்! ஒவ்வொருத்தனுக்கு ஆயுசு எழுபதானாலும் வாழற வாழ்க்கையை அளந்து பார்த்தால் அஞ்சாறு வருஷம் கூடத் தேறாது. ஆனா அந்த அஞ்சாறு வருஷம்தான் முக்கியம். இன்பமும், மகிழ்ச்சியும் அப்பத்தான் கிடைக்கிறது. இதை நீங்க இப்பவும் சம்பாதிச்சுக்க முடியும்... மாயாவின் அப்பாவே சொல்லிட்டார், அவ தேறாத கேஸ்னு...''

வசு முடித்துவிட்டு ஆர்வமாகப் பார்த்தாள். மத்தியானத்திலிருந்து ஒத்திகைபார்த்து ஒத்திகை பார்த்துப் பேசிய வார்த்தைகள். என்ன பதில் கிடைக்குமோ? என்ற பயத்துடன் உருவாக்கிய வார்த்தைகள்!

''யோசிக்க வேண்டிய விஷயம், வசு''.

''நன்றாக யோசியுங்கள், அர்விந்த்!''

''நிச்சயமாக... நீ சொல்வது போல நான் ஏன் அஞ்சாறு வருஷ இன்பத்தைத் தூக்கி எறிய வேண்டும்? ஒரு பெண்ணுக்காக ஒருவன் எத்தனை நாட்கள்தான் வீட்டுக்குள்ளேயே முடங்கிக் கிடக்க முடியும்?''

''இப்பத்தான் நீங்க சிந்திக்க ஆரம்பிச்சிருக்கீங்க!'' என்றாள் வசுமதி.

அரவிந்தன் சிரித்தான்.

''நீயும் மேற்கொண்டு திங்க் பண்ணு, வசு... குட் நைட். ஹாபி ட்ரீம்ஸ்!''

''தாங்க் யூ, அர்விந்த்!'' என்ற வசு, அவனுடைய கையைப் பிடித்துக் கொண்டாள்.

''என் ரத்தத்தோடு ரத்தமாய் நீங்க கலந்துட்டீங்க, அர்விந்த். நீங்க இல்லேன்னா நான் இல்லே!''

''மாயா முழிச்சுப்பா... நீ கொஞ்சம் பொறுமையா இருக்கணும். நான் இன்னிக்கு அவ பெட் ரூம்லே தூங்கப் போறேன்... அவ காத்துண்டிருப்பா''.

''அவ தூங்கிப் போயிருப்பா''.

''மாயாவைப் பற்றி எதுவும் நிச்சயமா சொல்ல முடியாது, வசு''.

''ஆனா இன்னிக்கு ஃபர்ஸ்ட் நைட் இல்லியோ....?''

''ஃபர்ஸ்ட் நைட் எப்பப் பிறக்கும்னு எனக்குத் தெரியாது, வசு. நான் வரேன்''.

வசு ஆனந்தமயமான கனவுகளுடன் தூங்க, அரவிந்தன் கட்டிலின் ஓரமாய்ப் படுத்துக் கொண்டு, கண்களை அகலத் திறந்து யோசித்தான்.

திடீரென்று அவனுடைய உடம்போடு உடம்பாய் உராய்ந்து மாயா அவனை அணைத்துக் கொண்டாள்.

அவளுடைய அணைப்பு நீண்ட நேரம் விலகாமலே தொடர்ந்தது.

அரவிந்தன் அவளையும் மறந்து ஒரு முடிவுக்கு வந்தான்.

தாரக்ராமை அவன் சந்திக்க வேண்டும். உடனடியாகச் சந்திக்க வேண்டும்.

* * * * *

மறுநாள் அதிகாலையில் வசு தன் வீட்டுக்குத் திரும்பிய பிறகு, டெலிபோனில் ஓட்டல் டாஜுடன் தொடர்பு கொண்டு பேசினான்.

தாரக்ராம் அறையில் இல்லை என்றும், பத்து மணி அளவில்தான் திரும்புவார் என்றும் தகவல் கிடைத்தது. அவன் ஒன்பதரைக்கு மாயாவையும் அழைத்துக் கொண்டு சந்திப்பது என்று தீர்மானித்தான்.

சரியாக ஒன்பது இருபத்தைந்துக்கு எதிர்பாராத நிகழ்ச்சி ஒன்று முளைத்து அவனைத் தடுத்தது.

(தொடரும்)

நரசம்மாவை அப்புறம் பார்த்துக்கலாம்

தோளில் குழந்தையுடனும், கையில் ஓர் அழுக்கு பிளாஸ்டிக் கூடையுடனும் பஸ் ஸ்டாப்பில் நின்று கொண்டிருந்த பெண்ணையே விழிப்புடன் பார்த்துக் கொண்டிருந்தான் தமிழ்மணி.

சில்லறை எடுக்கக் கைக் கூடையிலிருந்து பர்ஸை எடுத்துப் பிரித்தபோது, சில பத்து ரூபாய் நோட்டுக்கள் கண்ணில் படவும் உஷாரானான். சில்லறையை எடுத்ததும் பர்ஸை மடித்து கைக் கூடையின் அடியில் வைத்து சிறு துண்டில் அதை அவள் மூடிக் கொண்டதை நுட்பமாய் மனதில் குறித்துக் கொண்டான்.

அந்தச் சில அழுக்கு நோட்டுகள் அவனை வசீகரித்தன. இன்றைய வருமானம் கணிசம் தான் என்று மனதுக்குள் உற்சாகம் சங்கீதம் பாடிற்று. சாராய பாட்டிலும் நரசம்மாவும் மனதுக்குள் நர்த்தனமாடினர். நேற்று இரவு நரசம்மா, 'துட்டுக் கொண்டாரமெ உள்ளே நொளையாதே, ஆமா' என்று கதவை அறைந்து சாத்தியதும் கையில் ரூபாய் நோட்டுடன் 'அவளை அணைத்துக் கொண்டு துலுக்காணம் அவனைப் பார்த்து கெக்கலித்ததும் நினைவைத் தகித்தன.

'துட்டுத்தானே வேணும்...? இன்னைக்குப் பார்ரீ, நரசம்மா... ஒன்னைய கவனிச்சுக்கிர்றேன்'.

நரம்புகள் நரசம்மாவின் நினைவில் முறுக்கேற பற்களைக் கிட்டித்துக் கொண்டு; கைகளை இறுக மூடிக் கொண்டான். பெருமூச்சொன்று நரசம்மா நினைவுடன் உதிர்ந்தது.

பொங்கி வழிந்த கூட்டத்துடன் பஸ் குலுக்கிக் கொண்டு வந்து நின்றது.

குழந்தையை நன்றாய்த் தோளில் சரித்துக் கொண்டு பிளாஸ்டிக் கூடையை கைக்குள் மாட்டிக் கொண்டு அவசர அவசரமாய் ஏறினாள் அந்தப் பெண். பின்னாலேயே அவள் மீது இடித்துக் கொண்டு ஏறினான் தமிழ்மணி. வலது கைவிரல்கள் கனகச்சிதமாய்க் கூடைக்குள் புகுந்து அனாயசமான லாகவத்துடன் பர்ஸை எடுத்து அதே வேகத்தில் மடித்து வழித்துக் கட்டியிருந்த லுங்கிக்குள் கால் சட்டைப் பைக்குள் மறைத்தன. பின்னால் இன்னும் சிலர் இடித்துக் கொண்டு ஏறவும் அவர்களுக்கு வழி விடுகிறவனாய் வேக வேகமாய் உள்ளே போனான்.

"அவனவன் பாதையிலே நின்னுகினா, மத்தவன் எப்டி ஏர்றது? உன்ர வந்தாத் தானே? பொம்பளைங்க மேலே இட்சுகினே நிக்கறானுகபா... அக்கா தங்கச்சி கூடப் பொறக்கல்லே.... தூ...." என்று பெரிதாய் விமரிசித்துவிட்டு பஸ்ஸுக்குள் தன்னைச் செலுத்திக் கொண்டான்.

"நீ பெரிய யோக்யன்தான், போடா" என்கிற மாதிரி உறுமல் உறுமிக் கொண்டு பஸ் கிளம்பிற்று.

பஸ்ஸுக்குள் கவனமாய்ப் பார்வையைச் சுழற்றினான் தமிழ்மணி.

போலீஸ்காரர்கள் யாரும் கண்ணில் படாதது மனதுக்கு நிம்மதியாய் இருந்தது. அந்த ரூட்டில் இருக்கிற போலீஸ் ஸ்டேஷன்கள் எல்லாவற்றிலுமே தெரிந்த போலீஸ்காரர்கள்தாம் இருக்கிறார்கள் என்றாலும் பொதுமக்கள் முன்பு கடுமையாகத்தான் தோற்றமளிப்பார்கள். லட்டியை ஓங்கி அடித்தாலும் வலிக்காமல் அடிப்பார்கள். அப்புறம் தனியாய்ப் பார்க்கிறபோது, 'இன்னா சார், ரொம்ப அடிச்சிட்டியே?' என்றால், 'அத்தையெல்லாம் கண்டுக்காதெ, பப்ளிக் பாத்துக்கினுகீறான்லே' என்று சமாதானப்படுத்துவார்கள். அவனுக்குப்பின் நிறையப் பேர் பஸ்ஸுக்குள் ஏறிவிட்டதால், உடனே பஸ்ஸை விட்டு இறங்க முடியாமல் போய் விட்டது. பொதுவாக, அவர்கள் தொழில் நுணுக்கத்தில் இந்தமாதிரி பர்ஸை எடுத்ததும் ஸ்பாட்டை விட்டு உடனே அகன்று விட வேண்டும் என்பது முதல் பாடம். சில சமயங்களில் கடைப்பிடிக்க முடிவதில்லை.

அந்தப் பெண் என்ன செய்கிறாள் என்று கடைக் கண்ணால் கவனித்தான்.

கையிலிருந்து சில்லறையைக் கொடுத்து டிக்கட் வாங்கிக் கொண்டாள். இதற்குள் உட்கார இடம் கிடைக்கவும் அந்த இடத்தில் அமர்ந்து குழந்தையை மடியில் கிடத்தினாள். உள் வேதனையின் வெளியீடு, அதன் முகத்தில் அழுகையாய்ப் படர, மெதுவாய்ச் சமாதானப்படுத்தினாள். மெலிந்து வற்றி அழக் கூட சக்தியில்லாமல் துணிக்குள் நெளிந்த அந்தக் குழந்தையைப் பார்க்கவே பாவமாய் இருந்தது. பின்னர் காலோரமாகக் கூடையை நகர்த்திக் கொண்டாள்.

அடுத்த பஸ் ஸ்டாப் வரவும் இறங்க முயன்றான் தமிழ்மணி.

ஜெயரதன்

யார் யாரோ வேகமாய் ஏறவும் சற்றுத் தயங்கியவன் பஸ் ஸ்டாப்பில் மஃப்டியில் இன்ஸ்பெக்டர் விவேகானந்தன் நிற்பதைக் கண்டதும் இறங்குவதைத் தவிர்த்தான். அவன் தொழிலில் சந்தித்த இன்ஸ்பெக்டர் களிச்-கண்டிப்பும், கறாரும் மிகவும் உள்ளவர்களுள் அவரும் ஒருவர். அவனைப் பார்த்தால் லேசில் விடமாட்டார். ஏதாவது கேள்வி மேல் கேள்வி கேட்டு துளைத்து எடுத்து விடுவார். அதற்குள் அந்தப் பெண் விஷயம் அறிந்து அழத் தொடங்கினால், ஆபத்து தான்! சந்திர மண்டலத்திற்குள் போய்ப் பதுங்கினாலும் பிடித்துத் தோலை உரித்து விடுவார். போன வருடம் அறுபத்து மூவர் உற்சவத்தில் ஒரு பெண்ணின் கழுத்திலிருந்து சங்கிலியை எடுக்க முயலும்போது, பக்கத்து கடையின் மாடியிலிருந்து கழுகாய்ப் பார்த்துக் கொண்டிருந்தவர், அப்படியே தாவிக் குதித்து, பூனைக் குட்டியைத் தூக்குகிற மாதிரி கவ்வி, அறைந்த அறையில்...

தாடை எலும்புகள் வலிக்கிற மாதிரி இருக்கவும் கைகளால் தாடையைத் தடவிக் கொண்டே, பஸ்ஸைவிட்டு இறங்கும் எண்ணத்தைக் கைவிட்டான்.



பஸ் கிளம்பிற்று.

சற்று அசௌகர்யமாக உணரலானான் தமிழ்மணி.

அந்தப் பெண் பர்ஸை இழந்ததைக் கண்டு பிடித்துக் கூப்பாடு போட்டுவிட்டால்?

பஸ்ஸை போலீஸ் ஸ்டேஷனுக்குத்தான் எடுத்துப் போவார்கள். என்னதான் மாமூல் போலீஸ்காரர்கள் என்றாலும் பொது ஜனங்கள் முன்னால் தப்பிப்பது கஷ்டம். நைஸாக பர்ஸைக் கீழே நழுவ விட்டுவிடலாம் என்கிற எமர்ஜன்ஸித் திட்டம் கைவசம் இருந்தாலும், நிறையப் பத்து ரூபாய் நோட்டுக்களை இழக்க மனம் வரவில்லை. நரசம்மா வேறு வாய் நிறைய வெற்றிலையோடு, உடம்பு நிறைய மதமதவென்று சதைகளோடு சிரமப்படுத்திக் கொண்டிருந்தாள். ஏதாவது சிக்னலில் நின்றால் சட்டென்று இறங்கிவிடலாமென்றால் இன்றைக்கென்று எல்லா சிக்னலும் கிடைத்து விடவே, வண்டி சீறிப் பாய்ந்து கொண்டிருந்தது.

சற்று நேரம் கழிந்தது.

அவன் எதிர்பார்த்தது நடந்துவிட்டது.

அந்தப் பெண் தன் பர்ஸ் பறிபோனதைக் கண்டுபிடித்து விட்டாள் போலிருக்கிறது. பரபரப்புடன் கைக்கூடையைக் கவிழ்த்தாள். தவிப்புடன் மடியிலும் அங்கும் இங்குமாய்த் தேடினாள்.

''அய்யய்யோ....! என் பர்ஸைக் காணுங்க....''

சன்னக் குரலில் அந்தப் பெண்ணின் அழுகை எல்லார் கவனத்தையும் ஈர்த்தது. ஒரு பரபரப்புப் பொங்கி வழிய எல்லாரும் விசாரிக்கத் தொடங்கினர்.

''எத்தனை ரூபாய்ம்மா வச்சிருந்தீங்க?''

''நூறு ரூபாய்ச் சில்லறை''

''அவ்ளோ ரூபாயை இப்படிக் கூடைக்குள்ள வச்சிட்டு வரலாமா....? எங்கேம்மா ஏறினீங்க...?''

''ஷெனாய் நகரில் ஏறினேன்... கைக்கூடையிலே அடியிலே பர்ஸை வச்சுத் துண்டினாலே மூடி வச்சிருந்தேன். கொழந்தைக்கு வைத்தியம் பாக்கக் கொண்டு வந்தேன்....''

அந்தப் பெண் பெரிதாய் அழத் தொடங்கினாள்.

''ஷெனாய் நகர்லியா? ரெண்டு மூணு ஸ்டாப் போயிடுச்சே? எடுத்தவன் அப்பவே எறங்கியிருப்பானே? என்னம்மா நீங்க? கொஞ்சம் ஜாக்கிரதையாக இருந்திருக்க வேணாம்? போன ஸ்டாப்பிலேயே ஒருத்தன் சந்தேகப்படற மாதிரி இறங்கினான்.... நான் கவனிச்சு ஜாக்கிரதையா இருந்தேன்... அவனாகத்தான் இருக்கும்''.

''கரெக்ட். நான் கூடப் பாத்தேன். கூலிங் கிளாஸ் போட்டுக்கிட்டு மோஷன்லே எறங்கினான். அவனுத்தான் அவனாத்தான் இருக்கும். மொகத்துலே பிக்பாக்கட்னு எழுதியிருந்திச்சு...''

மற்றவர் ஊர்ஜிதம் செய்தார்.

''பஸ்ஸை போலீஸ் ஸ்டேஷனுக்கு எடுத்துக்கிட்டு போப்பா, டிரைவர்... எங்கேயும்

நிறுத்தாதே....'' என்று யாரோ ஒருவர் ஆதரவு இடவும் சிலர் ஆட்சேபித்தனர்.

''ஆபீஸ் டயம். ஏற்கனவேயே லேட். இன்னும் போலீஸ் ஸ்டேஷன் அது இதுன்னு ஏகமா நேரமாயிடும்... அங்கே போனா மட்டும் என்ன ஆயிடப் போறது? வீணா டயம்தான் வேஸ்ட்.... நாமதான் ஜாக்ரதையாக இருந்திருக்கணும்....''

கையில் வி.ஐ.பி. பெட்டியைப் பிடித்துக் கொண்டிருந்தவர் ஆங்கிலத்தில் முணுமுணுத்தார்.

எல்லாவற்றையும் கவனித்துக் கொண்டிருந்தான் தமிழ்மணி.

யாரோ அந்தப் பெண்ணை பேற்கொண்டு விசாரிக்கவும் அவள் அழுதுக் கொண்டே சொன்னாள்.

''..... கொழந்தைக்கு ரொம்ப முடியல்லே. கவர்மெண்டு ஆஸ்பத்திரிலேயெல்லாம் காமிச்சும் ஒரு பிரயோஜனமும் இல்லே.... மூணு பெண் கொழந்தைகளுக்கு அப்புறம் தங்கின ஒரே பிள்ளைக் குழந்தை. பிரைவேட் டாக்டர் கிட்டக் காட்டலாம்னு, அவர் தன்னோட ரத்தத்தை வித்து பணத்தை வாங்கி எங்கிட்டக் குடுத்து அனுப்பிச்சார்.... ஒடம்பு ரொம்பக் களைப்பா இருக்குன்னு வீட்டிலே படுத்திண்டிருக்கார்.

''....கல்யாணத்துக்குச் சமையல் பண்ற வேலே. கோட்டை அடுப்புச் சூட்டிலே நின்னு நின்னு ஒடம்பிலே ரத்தம் பூரா வத்திப் போயிடுத்து.....கொழந்தைக்கு வைத்தியம் பாக்கக்காக இல்லாமெ ரத்தத்தை வித்துக் கொண்டு வந்த காசு... அநியாயமா எந்தப் பாவியோ எடுத்துண்டுட்டானே? என் கொழந்தையைக் காப்பாத்த முடியாமெப் பண்ணிட்டானே....?''

கேவலும் கதறலுமாய் அந்தப் பெண் அழுது கொண்டே பஸ்ஸை விட்டு இறங்கினாள். எல்லாரும் 'த்சு த்சு' என்றார்கள்.

''அடுத்தாப்லே போலீஸ் ஸ்டேஷன். போய் ரிப்போர்ட் குடும்மா... பாவம்... புள்ளைக்கு வைத்தியம் பண்றதுக்காக பணம் கொண்டாந்திச்சாம்....எவனோ அடிச்சிட்டான். ரொம்ப மோசம்.... பாவம்....''

விதவிதமான அனுதாபங்களைச் சுமந்து கொண்டு அவளை இறக்கி விட்டு விட்டு, பஸ் சீறிக் கொண்டு போயிற்று.



ஹைஃபார்க் பேச்சு — 9.

ஆணும் பெண்ணும் சமம் என்கிறோம். பெண்ணுக்கும் சொத்துரிமை உண்டு என்கிறோம். அதே சமயத்தில் ஆதரவற்றிருக்கும் தன் வயதான பெற்றோரை ஒரு பெண் தனது குடும்பத்தோடு அழைத்துக் கொள்ளுவதை மட்டும் ஏன் கேவலமாக நினைக்கிறோம்? அவளுக்கு உரிமையில்லாதது போல் பேசுகிறோம். இந்த நிலை மாற நமது அரசாங்கம் கட்டாயச் சட்டம் ஒன்றை இயற்றித்தான் ஆக வேண்டும்.

சென்னை — 41. கண்ணம்மாள்.

தமிழ்மணியும் இறங்கினான்.

அந்தப் பெண் அழுது கொண்டு நின்றாள்.

நகத்தைக் கடித்துக் கொண்டு, அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.

கால்சட்டைப்பையில் அந்தப் பெண்ணின் பர்ஸ், மெதுவாக கனக்க ஆரம்பித்தது.

அவள் தோளில் குழந்தை மயங்கிச் சரிந்து கிடந்தது.

இன்னொரு பஸ் அவசர அவசரமாய் வந்து பிரயாணிகளை இறக்கி விட்டுப் புறப்பட்டது.

சட்டென்று தன் பையிலிருந்த பர்ஸை எடுத்து அந்தப் பெண் மீது வீசி எறிந்து விட்டு, புறப்பட்டுவிட்ட பஸ்ஸில் ஏறித் தொற்றிக் கொண்டான். பஸ்ஸில் தொங்கியவாறே, அந்தப் பெண் சந்தோஷ அதிர்வுகளுடன் அந்தப் பர்ஸை எடுத்துக் கொண்டதைப் பார்த்தான். மனம் லேசாகி மிகக் கிறுகிறுப்பாக இருந்தது.

* * * * *

நாசமாபோறவளைப் பாத்து ரெண்டு நாளாயிடுச்சி.... இன்னைக்கு அவளைப் பாத்தாகணும்... ஷோ வுடற நேரம் நல்ல கூட்டம். எவனாவது மாட்டுவான். பஸ் ஸ்டாப்பில் குவிந்து கொண்டிருந்த கூட்டத்திற்குள் லாவகமாய் நுழைந்தான் தமிழ்மணி.

ஹைஃபார்க் பேச்சு — 10.

இப்போது எதிர்க்கட்சிகள் எதுவுமே பலமானதாக இல்லை. தொலைக்காட்சியும், வானொலியும் ஆளுங் கட்சியின் ஏகபோக சொத்துக்களாகிவிட்டன. இந்த நிலையில்தான் பத்திரிகைகளின் பங்கு மிக மிக முக்கியமானதாக இருக்கிறது. ஆனால் நடைமுறையில்... பெரும்பான்மையான பத்திரிகைகள் அரசின் தவறான நடவடிக்கைகளைக் கூட ஆதரித்துத்தான் எழுதுகின்றன. இது எள்ளளவும் நல்லதற்கில்லை. இதுமாதிரியான பத்திரிகைகள் தங்கள் போக்கை மாற்றிக் கொள்ள வேண்டும். இல்லையெனில் ஆளுங் கட்சி சர்வாதிகாரத்தனமாகத்தான் செயல்படும்.

ஜி. சரஸ்வதி

ஆச்சாள்புரம்.



மோகினி திருக்கோலம்

36

காப்பாற்றியவர் இங்கிலீஷ்காரர்

அந்நாளில் மராத்தியரின் தென் வியாபகம் திகில் கொடுப்பதாக இருந்தது.

ஆரம்பத்தில் சிவாஜியும் அவரது வம்சத்தாரும் வந்த போது மராட்டியப் படையின் நுழைவு இனிமையாகவும் இதமாகவும் இருந்தது.

ஆனால் பின்னர் போகப் போக, நிலைமை வெகுவாக மாறி விட்டது.

எல்லா இனிமைகளும் நட்பு உணர்வுகளும் மறைந்து விட்டன!

மராட்டியர் என்றாலே மக்கள் நடுங்குவதாக இருக்கிறது.

ஆனால் மராட்டியத் தலைமை பலவீனமானதாலும் பூசலுக்கு உட்பட்டதாலும், படைப் பிரிவுகள் பல தம்மிச்சையாக இயங்கத் தொடங்கின.

அவர்களது சுதந்திரங்களுக்குத் தென்னகம் ஒரு சுலப இரையாக இருந்தது. இங்கே உட்பூசல்கள் இருந்தன. அரசாங்கங்கள் நலிந்திருந்தன. தவிர வியாபாரிகளாக இங்கிலீஷ், பிரெஞ்சுக்காரர்கள் தோன்றி உள் விவகாரங்களில் மெள்ள மெள்ள இழுபடத் தொடங்கி இருந்தார்கள்.

இவை அனைத்துமே ஒரு குழப்ப நாட்டாண்மையை உண்டு பண்ணியிருக்க,

மராட்டிய தன்னிச்சைப் பிரிவுகள் இங்கே தம் விருப்பப்படி இயங்க இது நல்ல வேட்டை நிலமாக மாறிவிட்டது.

பல பிரிவுகள் தங்கள் மூலப்படையை விட்டு வெளிவந்து யார் பணம் கொடுத்தாலும் அவர்கள் பக்கம் போர் புரியத் தொடங்கின.

இன்னும் சில பிரிவுகள் தங்கள் சுயநலமே குறியாக அங்கங்கே திடீர் எனப் புகுந்து கொள்ளையிலும் சூறையிலும் ஈடுபட்டன.

கதை நிகழ்ந்த காலத்தில் இந்த தன்னிச்சைப் படையினர் கோயில் திருவிழாக்காலங்களில் திடீரென்று தாக்கி மக்களிடம் கொள்ளை அடித்து வந்தனர்.

இவர்களைக் கண்டு அஞ்சி கிராம ஜனங்கள் நகரங்கள் நோக்கிப் போக ஆரம்பித்தனர்.

அத்தகைய மராட்டிய கும்பல் ஒன்றுதான் 'மோகினித் திருக்கோலம்' காணப் போகும் யாத்திரிக கோஷ்டியின் ஒற்றர்களுக்குத் தென்பட்டது.

இரண்டாவது ஒற்றன் வந்த போது மராட்டியர் நகர்ந்து போய் விட்டார்கள் என்று தெரிவித்தான்.

வர்மனும் இதர முக்கியஸ்தர்களும் யோசித்தார்கள். போய் விடலாம் என்று தீர்மானித்தார்கள். கோஷ்டி புறப்பட்டது.

ஒரு முகூர்த்தம் நடந்த பின்னர் நிலம் தொய்ந்து ஒரு கணவாய் வந்தது.

மழைக்காலங்களில் நீர் நிரம்பிச் சாரும் கணவாய்.

இப்போது இருபக்கமும் கோரம்புல்லும் நாணலும் வளர்ந்திருந்தன.

படுகையில் படும் கற்கள் சிதறிக் கிடந்தன.

அந்த இடத்தில் போன போதுதான் 'ஓ' என்று இரைச்சல் தொனியுடன் மராட்டியர் அவர்களை நோக்கி இறங்கினார்கள்.


அது ஒரு திடீர் தோற்றம், யாருக்குமே அது கண்கட்டு வித்தையாக இருந்தது.

மராட்டியர் தமது பறக்கும் குதிரைகளில் வந்தார்கள். நாற்பது ஐம்பது பேர் இருக்கும். அத்தனை பேரும் ஏகோபித்து வருவது ஆச்சரியமாக இருந்தது.

நொடியில் அவர்கள் பல்லக்குகளைச் சூழ்ந்தார்கள். பூசல் ஒன்று உலோக ஓசையோடு கிளம்பியது. வர்மனது யாத்திரிகர்கள் அனைவரும் வீரர்கள் ஆனார்கள். பாளையக்காரர்கள் அவர்கள்! மின்னல் சொடுக்குகள் போல வாட்கள் மேலே எழுந்தன. பரந்த விதியான மார்புகளும், திண்டு திண்டான உடம்புகளும் அங்குமிங்கும் மத்த கஜங்கள் போல் ஊடுருவின.

ஆரம்பத்தில் சில மராட்டியர் உதிர்ந்தார்கள். ஆனால் அவர்கள் இவ்விதச் சண்டைகளில் நிறையத் தேர்ச்சி பெற்றவர்கள். அவர்கள் குதிரைகளும் மிகவும் பழக்கப்பட்டவை. சில நிமிடம் நடந்த சண்டையில் பாளையக்காரர்கள் வளைக்கப்பட்டார்கள்.

அத்தனை பேரும் இளைத்துக் கொண்டு அடிமைகள் போல் நின்றார்கள்.



வர்மனை இருவர் பிடித்திருந்தார்கள். அவன் பார்வை கவலையோடு பல்லக்குகளை நோக்கியது.
மராட்டியர் உக்கிரமாக மீசைகளை உருவினார்கள்.
''பல்லக்கை இறக்கு!'' என்க, அவை மெதுவாகப் பூமி நோக்கித் தாழ்ந்தன.
திரைச் சீலைகள் மெதுவாக அசைந்தன. ஆகா! திருப்பதிப் பணம் கடைசியில் யாரிடம் போய்ச் சேரப் போகிறது! வடபிரதேசக் கொள்ளைக்காரர்களிடமா?
வர்மன் வெகுண்டான். நாலு பக்கமும் பார்த்துப் புழுங்கினான்.
அப்போது திடீரென்று எழும்பிய புழுதி அவனைத் திகைக்க வைத்தது.

பத்துப் பதினைந்து குதிரைகள் வலப் புறத்தில் உற்பத்தியாயின!
மந்திரத்தில் கட்டுண்டது போல் மிக ஒழுங்காக வந்தன. மராட்டியர் திகைத்தார்கள். வர்மன் ஆச்சரியமுடன் பார்த்தான்.
வந்த கும்பல் இங்கிலீஷ்காரர்களாக இருந்தது. இருதிறத்தாரும் அவர்களைப் பார்த்தார்கள்.
இங்கிலீஷ் குதிரைக்காரர்கள் நெருங்கினார்கள். அங்குள்ள காட்சியை வெறித்துப் பார்த்தார்கள். அவர்களுக்குப் புரிந்து விட்டது.
இங்கிலீஷ் தலைவன், மராட்டியத் தலைவனைப் பார்த்தான். ''நான் நூறு எண்ணுவதற்குள் நீங்கள் இங்கிருந்து அகல வேண்டும்'' என்று எண்ணத் தொடங்கினான்.
ஐம்பது எண்ணுவதற்குள் மராட்டியர் அந்த இங்கிலீஷ்காரர் மீது பாய்ந்தார்கள். திரும்பியும் பூசல் எழ, வர்மனின் ஆட்கள் மீண்டும் பூசலில் இறங்கினார்கள்.
வர்மன் முதல் முறையாக இங்கிலீஷ்காரர்கள் செய்யும் யுத்தத்தைப் பார்த்தான்.
சண்டையில் கூட எதுகை மோனை இருப்பது புரிந்தது. ஒரு கட்டுப்பாடு! ஒழுங்கு! ஒரு நேர்த்தி! ஒரு கம்பீரம்!
நாலே நிமிடங்களில் மராட்டியர் சிதறினார்கள். இறந்தது போக மிஞ்சியவர் பறந்து ஓடினார்கள்.
பிறகு இங்கிலீஷ் தலைவன் உத்தரவிட, அவனது ஆட்கள் நூல் பிடித்தாற்போல் அணி வகுத்து நின்றார்கள். அதுவே பார்ப்பதற்கு ரம்மியமாக இருந்தது!



ஸ்ரீ வேணுகோபாலன்



ஹைட்பார்க் பேச்சு — 11.

'கிராமங்கள்தான் நாட்டின் முதுகெலும்பு' என்றார் மகாத்மா. ஆனால் கிராமங்களை யார் கவனிக்கிறார்கள்? சாலை — போக்குவரத்து வசதி, மருத்துவ வசதி, கல்வி வசதி போன்ற எந்த வசதியுமே கிராமங்களைச் சென்று அடையாதது என்ன நியாயம்? சமுதாய நலனை நோக்கமாகக் கொண்ட அனைவரும் கிராமங்களுக்குச் சென்று, சுற்றுப்புறச் சுகாதாரம், குடும்பக் கட்டுப்பாடு, கல்வி போன்றவற்றை எடுத்துச் சொல்ல வேண்டும். இல்லையென்றால் இந்திய தேசம் முன்னேறுவதற்கான வாய்ப்பே இல்லை.

சென்னை — 110, ஜெ. ரமாதேவிப்ரியா

ராகமாலிகா வழங்கும் பட்டுப் புடவையைக் குலுக்கல் முறையில் பரிசாகப் பெறும் அதிர்ஷ்டசாலி இவர்:

ஜெ. ரமாதேவிப்ரியா,
392, இராமலிங்க காலனி,
பொன்னியம்மன்மேடு,
சென்னை — 110.

"நீங்கள் யார்? எங்கே போகிறீர்கள்?" என்று கேட்டார் இங்கிலீஷ் தளபதி.

"பொம்மராஜபாளையம் ஜமீன் யாத்திரை கோஷ்டி இது. கடலம் பக்கத்திலுள்ள திருமாமங்கைக்குப் போகிறார்கள்."

"ஓ! யாத்திரீகர்களா? ஜாக்கிரதையாகப் போங்கள்! இந்த நாட்டில் கொள்ளையும், கொலையும் அதிகமாகப் போய் விட்டது. ஜனங்கள் பாழாகப் போகிறார்களே!" என்று சொல்லிவிட்டு, தன் கோஷ்டிக்கு உத்தரவிட்டுப் புறப்பட்டான்.

வர்மன் ஓடிப்போய் நன்றிக்காக ஒரு முத்து மாலையை அவனிடம் கொடுக்க, புன்னகையோடு அதை விலக்கிவிட்டு அவன் மேலே போனான்.

பிறகு அத்தனை பேரும் களைத்து உட்கார்ந்து நடந்ததை எல்லாம் அசை போட வர்மன் மட்டும் யோசனையில் ஆழ்கிறான்.

அந்த இங்கிலீஷ் தளபதி அவன் மனத்தில் வெகுவாகப் பதிந்திருந்தான்.

பேசாமல் போக வேண்டியவன் அவன். இந்த நாட்டுக்காரர்கள் தம்மிடையே செய்து கொள்ளும் பூசல் இது. இதைக் கண்டு கொள்ளாமல் அவன் போக வேண்டியதுதானே! இங்கிலீஷ் கும்பனியின் முன்னால் போகும் பொதி மாடுகளைப் பார்த்தால் அந்த இங்கிலீஷ்காரன் ஒரு வியாபாரியாக இருக்க வேண்டும். சொந்த பாதுகாப்புக்கு அந்தக் காவலாளிகளை வைத்துக் கொண்டிருப்பான். வர்மன் கோஷ்டிக்கு அவன் துணை புரிய வந்தது ஆச்சரியம்தானே!

"வீரரே!" என்று குரல் கேட்டது.

பல்லக்கிலிருந்து சிந்துவின் தலை எட்டிப் பார்த்தது. விழிகளின் காந்தக்கிரணம் மனத்தை அள்ளியது. சிறு நகை மட்டும் அதர நுனியில் ஒட்ட, சந்திர ஒளி போல் முகச் சாயலை அவனை நோக்கிக் காட்டினாள்.

வர்மன் அவளருகே சென்றான்.

"வீரரே! களைத்து விட்டீரா?" என்றாள் அவள்.

அந்தரங்கமாகக் குரல் வந்தது. உடம்பில் சில்லிடும் குளிர்ச்சியை அவனுக்குத் தந்தது.

"கடைசி வரை போய்ச் சேருவது கடினம் போல இருக்கிறதே!" என்றாள் சிந்து.

"ஆமாம்! தேவி! நமக்கு ஆட்கள் போதாது போல இருக்கிறதே!" என்றான் வர்மன்.

"கவலைப்படாதீர்கள். மாமண்டூருக்குக் கிழக்கே அங்கங்கே நமது ஆட்கள் துணையாக வருவார்கள்" என்றாள் சிந்து.

"ஏற்பாடு ஆகியிருக்கிறதா?"

"ஆமாம்!" என்றாள் அவள்.

"பொக்கிஷம் பத்திரமாகப் புதுச்சேரி போய்ச் சேருமா?" என்றான் வர்மன்.

"வேங்கடவன் சொத்து. அவரே அதைப் பாதுகாத்துக் கொள்வார்" என்றாள் சிந்து.

"நம்பிக்கைவைக்கிறேன் யாரிடம் அதைச் சேர்ப்பிக்க விருப்பப்படுகிறாரோ, அவரிடமே சேர்ப்பிப்பார்".

"நம் கனவுகள் பூக்கத் தொடங்கி விட்டன" என்றாள் சிந்து.

பூக்கள் ஆயிரம் தொடுத்தாற் போல முகம் மினுக்கியது.

அந்தக் கணத்தில் வர்மன் மனத்தில் ஆயிரம் சிந்தனைகள் உதித்தன. செஞ்சுகா எழுதிய வரி கூட நினைவுக்கு வந்தது. எல்லாவற்றையும் துறந்து ஒரு குடும்ப வாழ்வில் இறங்கி விடலாமென்று எண்ணம் குமிழ்ந்தது. "செல்லமணி" என்று தாயார் அழைப்பது கேட்டது! கிராமத்தில் அத்தனை உறவுக்காரர்களின் அழைப்பும் கேட்டன. மனத்தில் ஒரு தாபமே எழுந்தது. எல்லோரையும் விட்டு எங்கேயோ வந்து எது எதிலோ ஆழ்ந்து இப்படி ஆகிவிட்டோமே என்று நினைத்தான். சிந்து மட்டும் இசைவு தந்தால்...

ஆமாம். அவள் மட்டும் இசைவு தந்தால் போதும். அவளையும் அழைத்துக்கொண்டு

னருக்குப் போய்விடலாம். தாயார் அக மகிழ்ந்து போவாள். "ராசாத்தி மாதிரி ஒருத்தியை எங்கேயிருந்து கொண்டாந்தே!" என்று கேட்பாள். "ராசாத்திதான்" என்று வர்மன் கூறுவான்.

வர்மன் தன் மனக் காட்சிகளில் லயித்திருக்கும்போது, "ம்...ம்... ஆகட்டும்" என்று குரல் கேட்டது.

திரும்பிப்பார்த்தான். வேன்ஸான் அங்கே திடீரென்று முளைத்து எல்லோருக்கும் உத்தரவு கொடுத்துக் கொண்டிருந்தார்.

அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது.

இந்த வேன்ஸான் உண்மையில் யார்? வர்மனுக்கு சிநேகிதனா, பகையாளியா?

கோஷ்டி புறப்பட, வேன்ஸான் தடித்த மீசையோடு புன்னகை பூத்து அவனை நோக்கி வந்தார்.

* * * *

ஆர்க்காட்டுக் கோட்டை மீது கிளைவ் அந்தி வேளையில் சுற்றும் போது, மனம் சற்று கலங்கியது.

வெளியே கோட்டையைச் சுற்றி ஆயிரக் கணக்கான நவாப் படையைப் பார்த்ததனால் அல்ல.

அவனது மதிப்பிற்கு அந்தப் படை இருபதினாயிரம் இருக்கும்.

அதற்கு முன் அவனது நானூற்று சொச்சம் படை கொசு மாதிரிதான்.

ஆனால் அதற்காக அவன் அஞ்சவில்லை.

அவன் அஞ்சியதெல்லாம் உணவுக்காக. ஆமாம்! படை நகர்வது வாகனத்தில் அல்ல. உணவில்தான்.

அத்தனை பேரும் வாடி வதங்குகிறார்கள்.

முற்றுகை ஆரம்பித்து முப்பத்தெட்டு நாட்கள் ஆகின்றன. இன்னும் அவன் கேட்ட பணம் வந்தபாடில்லை.

பணம் வராவிட்டால் எந்தக் காரியமும் நிறைவேறாது.

அதுவும் அவன் மாட்டியிருக்கும் இடமோ ஆர்காட்டுக் கோட்டைக்குள். வெளியே சூழ்ந்திருப்பதுவோ, சமுத்திரம்போல்பெரிய படை! இதனிடையே வியூகம் பண்ணி வெளியே போய்விட முடியுமா?

முடியாது. சாதாரண நிலையில் இருந்தால் உத்தரவு போட்டு அனைவரையும் வெளியே சாகசங்கள் செய்து கொண்டு போய் விடலாம். ஆனால் எல்லோரும் பட்டினி! கால் பட்டினி, அரைப் பட்டினி. இவர்களைக் கொண்டு எப்படி சாகசம் புரிவது?

கிளைவ் தனது தொலைதூரக் கருவியை எடுத்துப் பார்த்தான்.

யாருமே ஆர்க்காடு பக்கம் வருவதாகத் தெரியவில்லை.

கம்பெனி கவர்னர் உறங்குகிறாரா?

(தொடரும்)

ஸ்பாட் லைட்

என்னுடைய அண்ணாநகர்த் தொகுதியில் ஏகாம்பரேஸ்வரர் கோயில் உள்ளது. இங்கு அறங்காவலராக நியமிக்கப்பட்டு இருக்கும் ஒருவர் அந்தப் பகுதி போலீஸ் நிலையத்தில் 'ரவுடி' லிஸ்டில் உள்ளவர். இப்படிப்பட்டவர்களை அறங்காவலர்களாகப் போடலாமா?

— சோ. மா. ராமச்சந்திரன் (தி.மு.க).

இங்கே ராமாவரம் தோட்டத்தில் எம். ஜி. ஆர். என்ன எண்ணுகிறாரோ, அதையே டெல்லி செங்கோட்டையில் செயல்படுத்துகிறார் பிரதமர் ராஜீவ் காந்தி.

— அமைச்சர் பண்ருட்டி ராமச்சந்திரன்

சென்னை சைதாப்பேட்டை தொகுதியில் கொசுத் தொல்லை அதிகமாக இருக்கிறது. கொசுக்களெல்லாம் வண்டுகளைப் போல இருக்கின்றன.

—சைதை துரைசாமி எம்.எல்.ஏ.
(அ. இ. அ. தி. மு. க.)

காமராஜர் படிக்க வைத்தார். கருணாநிதி குடிக்க வைத்தார் என்று எங்களை (தி.மு.க.)க் குற்றம் சொன்ன நீங்களும் (அ. இ. அ. தி. மு. க.) அதே தவறைச் செய்கிறீர்களே, என்ன நியாயம்?


—ரகுமான்கான்.

அண்ணாசாலையில், நான் கண் மூடுவதற்கு முன்னால் அண்ணா அறிவாலயத்தைக் கட்டி முடிக்க வேண்டும். அதற்கு ஒரு கோடி ரூபாய்க்குமேல் நிதி தேவைப்படும் என்றே தோன்றுகிறது. உடன்பிறப்பே, அந்தத் தொகையை உன்னிடமிருந்துதான் எதிர்பார்க்கிறேன்.

—கலைஞர் மு. கருணாநிதி.

ஈழத்தமிழர் பிரச்னையில் தமிழகம் அமைதியாக இருப்பதாக நினைக்காதீர்கள். ஒருநாள் எரிமலை போல் வெடிக்கத்தான் போகிறது. அதை வெடிக்க வைக்கவும் எங்களுக்குத் தெரியும். அப்போது டெல்லியில்உள்ளவர்கள்புரிந்துகொள்வார்கள்.

—நெடுமாறன்.



"ஆல் இண்டியா ரேடியோ சென்னை வானொலி நிலையம்"

ராஜாஜி வாழ்க்கை வரலாறு

ராஜ்மோகன் காந்தி

11

லஞ்ச ஊழல் குற்றங்களை சட்டபூர்வமாக நிரூபிப்பது மிகக் கடினம் என்று உணர்ந்தார் ஸி. ஆர். எனவே, இக்குற்றங்களை யாரேனும் தொடர்ந்து செய்து வருவதாக சந்தேகிக்கப்படுவது உறுதியானால் அவரை திட்டவட்டமான சான்றுகள் இல்லாமலேயே பதவி நீக்கம் செய்யலாம் என்ற விதியை



ஏற்படுத்தினார். அதே சமயத்தில் ஏதேனும் ஒரு விதத்தில் ஏமாற்றம் அடைந்த நபர்கள் அதிகாரிகளின் பேரில் பொய்க் குற்றம் சாட்டினால் அவ்வதிகாரிகளுக்கு அரசு தகுந்த பாதுகாப்பு அளிக்கும் என்றும் அறிவித்தார்.

ஈ. வெ. ரா.. வின் கொள்கைகளையும் பேச்சுக்களையும் பிரசுரிப்பதற்காகவே நடத்தப்பட்ட பத்திரிகையான 'விடுதலை' கலப்படக் குற்றம் சாட்டப்பெற்ற வெண்ணெய்த் தயாரிப்பாளர்கள் மீது தொடரப்பட்ட வழக்கு ஒன்று அவர்கள் காங்கிரஸ் ஆதரவாளர்கள் என்பதால் வாபஸ் பெறப் படுவதாக இடித்துரைத்த போது ஸி. ஆர். உடனே விசாரித்து, வழக்கு வாபஸ் பெறப்படாவிட்டாலும் பலமுறை ஒத்தி வைக்கப்பட்டிருப்பதைக் கண்டறிந்தார். வழக்கைத் துரிதப்படுத்த நடவடிக்கை எடுத்தார். 'இந்த வழக்கு புஸ்வாணமாகிவிடக் கூடாது.. ஏதோ பேருக்கு அபராதம் விதித்தது போல் வழக்கின் தீர்ப்பு இருந்து விடக் கூடாது' என்று அரசாங்க வழக்கறிஞர்களை எச்சரித்துக் கோப்புகளில் எழுதினார்.

புத்தகங்கள் மீதும் பத்திரிகைகள் மீதும் பிரிட்டிஷ் அரசு விதித்திருந்த பல தடைகளை நீக்கினார் ஸி. ஆர். இதனால் பயனடைந்தவர்களுள் ஒருவர் ஈ. வெ. ரா. வின் சகோதரரும் 'விடுதலை' ஆசிரியருமான கிருஷ்ணசுவாமி. முந்தைய ஆட்சி இவரிடம் பெற்றுக்கொண்ட ஆயிரம் ரூபாய் பெறுமானமுள்ள இரண்டு டெபாஸிட்டுகள் திருப்பித்தரப்பட்டன. வன்முறையை ஊக்குவித்த எழுத்துக்களுக்கு மட்டும் தடை நீடித்தது. சென்னையில் தடை செய்யப்பட்ட சில புத்தகங்கள் உ. பி. யில் சட்டபூர்வமாய் அனுமதிக்கப்பட்டு வருவதை சட்டசபையில் சிலர் சுட்டிக் காட்டிய போது, 'நன்றி, (அதைக் கட்டுப்படுத்த) உ. பி. அரசுடன் தொடர்பு கொள்கிறேன்' என்று பதிலளித்தார் ஸி. ஆர். அதேநேரத்தில் தீவிரவாதியான காங்கிரஸ் இளைஞர் ஈ. எம். எஸ். நம்பூதிரிபாடு வீட்டில் சென்னை அரசின் போலீஸ் புகுந்து சோதனையிட்டதை ராஜாஜி ஆட்சேபித்தார். நம்பூதிரிபாடு தடை செய்யப்பட்ட புத்தகம் ஒன்றை வைத்திருப்பதாகப் போலீஸார் சந்தேகப்பட்டனர். ஸி. ஆர்., இதுபோன்ற சோதனைகளை உடனடியாக திறுத்துமாறு உத்தரவிட்டார். தடை செய்யப்பட்டிருந்த அப்புத்தகம் ஜான் ஸ்ட்ரேச்சி எழுதியது. ஸி. ஆர். அதை, 'வன்முறையையோ புரட்சியையோ தூண்டும்

> ஒருமுறை கலைவாணரும், கவிஞரும், கலைஞரும் ஒன்றாக உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்த போது — ஒருவர் ''நான் படமெடுக்கப் போகிறேன்'' என்றார். உடனே கலைவாணர் ''யார் மறுபடி வாசிக்கப் போவது?'' என்று கூறியதும் அறையெங்கும் சிரிப்பலை மோதியதாம்.
>
> —நாமக்கல் இரமேஷ்குமார்.

புத்தகம் அல்ல. இங்கிலாந்தில் சகஜமாய் அனுமதிக்கப்பட்டு வரும் மார்க்ஸீய இலக்கியம்'' என்று வர்ணித்தார். நம்பூதிரிபாடு பிற்காலத்தில் பிரபல கம்யூனிஸ்ட் தலைவராகவும் கேரள முதல்வராகவும் விளங்கினார்.

* * * * *

அன்றைய சென்னை ராஜதானியின் தலைமைச் செயலாளர் சர் ஸெஸில் ஃபேபியன் பிராக்கன்பரி ஒரு பார்ஸியின் மகன். பிரதம மந்திரியைக் காட்டிலும் மூன்று வயது இளையவர். ஒல்லியாய், உயரமாய் இருந்த இந்த இலட்சியவாதி ஒரு கடும் உழைப்பாளி. மதுவைத் தீண்டாதவர். பிரிட்டிஷ் அரசிடம் விசுவாசம் வைத்திருந்தாலும் சுயாட்சி முறையே சரி என்று நம்பியவர். பிற்காலத்தில் ஸி. ஆர். மிக அன்புடன் இந்தத் தலைமைச் செயலாளரை அடிக்கடி நினைவு கூர்ந்தார். சுருக்கமாகவும், வெளிப்படையாகவும் தம் அறிவுரைகளைப் பிரதம மந்திரிக்கு வழங்குவார் பிராக்கன்பரி. தாம் கூறிய ஆலோசனைக்கு நேர்மாறாகப் பிரதம மந்திரி அடிக்கடி உத்தரவுகளைப் பிறப்பித்தாலும், அவற்றை ஏற்று, வெகு சிரத்தையாக நிறைவேற்றினார். 'சரியாகக் காலை பதினொரு மணிக்கு பிராக்கன்பரி ஸி. ஆரின் அலுவலகத்தினுள் நுழைவார். என்னென்ன செய்ய வேண்டும் என்று கேட்டுத் தெரிந்து கொண்டு அவற்றை அமல் படுத்துவார்' என்று பிரதம மந்திரியின் அலுவலர்களுள் ஒருவர் நினைவு கூர்கிறார். ஸி. ஆரும் தம் பங்குக்குக் கௌரவம் பாராட்டாமல் ஏதேனும் முக்கியமான விஷயம் பற்றி கலந்துரையாட வேண்டுமெனில் சில அடிகள் எடுத்து வைத்துத் தலைமைச் செயலரின் அறைக்கே சென்று விடுவார். அபூர்வமாய் அவர்கள் ஒரே ரயிலில் பிரயாணம் செய்த தருணங்களில் தமது *இன்டர் வகுப்புப் பெட்டியிலிருந்து ராஜாஜி இறங்கி, பிளாட்பாரத்தில் நடந்து, பிராக்கன்பரி இருந்த முதல் வகுப்புப் பெட்டிக்குச் சென்று ஜன்னல் வழியே பேசிக் கொண்டிருப்பார்.

* * * * *

இருபது வயதுக்கு உட்பட்டோர் கொலைக் குற்றத்துக்குத் தண்டிக்கப்படுவதெனில் மரண தண்டனைக்குப் பதில் ஆயுள் தண்டனையே அளிக்க வேண்டும் என்று சென்னை உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி சிபாரிசு செய்தார். நீதித் துறை மந்திரி சுப்பராயன் இதற்கு இணங்குவார் என்றே தோன்றியது. எர்ஸ்கைனும் இக்கருத்தை ஆதரித்தார். ஆனால் பிரதம மந்திரியின் ஒப்புதல் கிடைக்கவில்லை. இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டால் குற்றவாளியின் வயது குறித்து தர்க்கங்களை ஏற்படுத்துவதோடு அனாவசியமாய் வழக்கு வளர்ந்து கொண்டே போகும் என்று ஸி. ஆர். எதிர்பார்த்தார். 'குற்றவாளி இளைஞர் என்ற காரணத்துக்காக தண்டனையைக் குறைப்பது ஏற்புடையதானாலும் அதற்கு ஒரு பொது விதியைக் கொண்டு வருவது சரியாகுமா?' என்ற வினாவை எழுப்பினார். 'கொலை கொடூரமானதா, திட்டமிட்டுச் செய்யப்பட்டதா, குற்றவாளி இளைஞனா என்பதையெல்லாம் சட்டத்தை நிலைநாட்டி, தீர்ப்பை நிறைவேற்ற வேண்டிய பொறுப்பில் உள்ள நிர்வாகத்தினர்தான் வழக்கு முடிந்த பிறகு அமைதியாகத் தீர்மானிக்க வேண்டும்' என்று ஸி. ஆர். கோப்பில் குறிப்பு எழுதினார். எர்ஸ்கைன், 'இதோடு இந்த விவகாரத்தை விட்டு விடலாம்' என்று எழுதினார்.

* * * * *

1939 ஜூன் மாதத்தில் சென்னை ராஜதானியில் வானொலி ஒலிபரப்பு அறிமுகமாயிற்று. உண்மையில், இதற்கு ஒன்பது ஆண்டுகளுக்கு முன்னரே ஒரு எளிய டிரான்ஸ்மிட்டர் நகரின் சில நபர்களுக்கு இசை நிகழ்ச்சிகளை வழங்க ஆரம்பித்துவிட்டதால் அதையே ஒலிபரப்பின் ஆரம்பமாகக் கொள்ள வேண்டும். இப்போது அகில இந்திய ரேடியோ தென்னகத்தில் தனது வானொலி நிலையத்தை ஏற்படுத்தியது. அ. இ. ரே. தலைவர் லயனல் ஃபீல்டன் ஒலிபரப்பைத் துவக்கி வைத்துப் பேசுமாறு ராஜாஜியை அழைத்தார். ஸி. ஆர். வானொலி நேயர்களுக்கு ரேடியோவைப் பற்றி விளக்கினார்: ''இனி லண்டனில் கூறப்படும் ஒரு ஹாஸ்யத் துணுக்கை இங்கே நீங்கள் கேட்டு ரசிக்கலாம். ஆகாயத்தை வென்று அதை நாம் ஒலியைச் சுமந்து செல்லும் ஒரு வாகனமாக்கிக் கொண்டுள்ளது அற்புதமான விஷயம்தான். காற்று ஒலியைச் சுமப்பதில் மாட்டு வண்டி என்றால், ஆகாயம், கப்பல் அல்லது ரயில் போன்றது. அது அதிவேகமாயும் நெடுந்தூரத்துக்கும் ஒலியைச் சுமந்து செல்கிறது.'' தொடர்ந்து, நகைச்சுவையோடு எச்சரித்தார் பிரதம மந்திரி: ''தூரத்தில் உள்ள கழுதைகள் கத்துவது அண்மையில் உள்ள கழுதைகள் கத்துவதை விடச் சிறப்பாக இருந்துவிடப் போவதில்லை. சென்னை வானொலி தன் நேயர்களுக்குத் தரமான நிகழ்ச்சிகளையே வழங்கும் என்று நம்புகிறேன்.''

திறப்புவிழா சமயத்தில் 3,000 ரேடியோ லைசென்சுகள் வாங்கப்பட்டிருந்தன.

தமிழாக்கம்

சீதா ரவி

(தொடரும்)

* மூன்றாவது வகுப்புக்கும் இரண்டாவது வகுப்புக்கும் இடைப்பட்டது.



பாடசாலை வித்யார்த்திகளின் ஒரு பகுதி

மஹான் ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதர் அவர்களால் 1542—ல் ஸ்தாபிக்கப்பட்டு தொடர்ந்து நடந்து வரும் கும்பகோணம் "ராஜா வேத காவ்ய பாடசாலை"யை மேற்படி ஸமிதியானது தாய் போல் இயங்கி காப்பாற்றி வருகிறது. தற்போது பாடசாலையில் 75 மாணாக்கர்கள் வேதாத்யயனம் செய்துவருகின்றனர். அவர்களுக்கு ஒருநாள் உணவளிக்க சுமார் ரூ. 200/— ஆகிறது. இந்த தர்மம் நிரந்தரமாய் நடக்க ரூ. 2000/— மூலதனம் ஏற்படுத்தியோ (அ) அவ்வப்போது ரூ. 200/— அனுப்பியோ ஒரு குறிப்பிட்ட தினத்தில் ஸமாராதனை நடத்தும் கைங்கர்யத்தில் பங்கு கொள்ளக் கோருகிறோம். நன்கொடைக்கு 80—G விதியின்படி வருமானவரி விலக்கு உண்டு.

விபரங்களுக்கு:

அத்வைத வித்யாசார்ய மஹாராஜ ஸாஹேப்
ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதர் புண்ய ஸ்மரண ஸமிதி
கும்பகோணம்



கல்கி ஓவியர் திரு விஜு அவர்களின் குமாரி சௌ. **கல்யாணிக்கும்** கோவை திரு C.A. வெங்கட்ரமணன் (Retd. Officer, UCO Bank, Divisional office, Madras) அவர்களின் மூத்த குமாரன் சிரஞ்சீவி **அனந்தராமன்** B.A.விற்கும் (South India Sugars, Mundiambakkam, Madras) **6-6-85** அன்று சென்னையில் திருமணம் வெகு சிறப்பாக நடைபெற்றது.

வாழ்க மணமக்கள்

பெரிய புள்ளிகள்

கிரிக்கெட் ஸ்ரீகாந்த்

இவன்
மட்டையை எடுத்து
அடிக்கும் போதெல்லாம்
தாங்கள்
பட்டையை எடுத்து
அடித்தது போல் —
இளைஞர்கள்
போதை கொண்டு
குதிக்கிறார்கள்!
இவன்
ரன்களைக் குவிக்கும்
ராட்சத யந்திரம்
இந்த யந்திரம்
தமிழ்நாட்டில்
தயாரானது
என்பதை •
எண்ணும்போது
எனக்குக்
கவிதை ...
வருகிறது!



இளையராஜா

இளையராஜா!
கறுப்பும் வெள்ளையுமான
கட்டைகளைத் தொட்டே
இவனால்
வர்ணங்களை
உண்டாக்க முடிகிறது!
எப்போதும்
ஏராளமான
விசிறிகள் இருப்பதால்...
இவனுக்கு
வியர்ப்பதே இல்லை!
இவன்தான் —
நாட்டுப் பாடலை
நகரத்திற்கு அழைத்து வந்து
கோடம்பாக்கத்தில்
குடி வைத்தான்!



ராஜீவ் காந்தி



ஓ!
இளைஞனே!
இன்றைய
அரசியல்வாதிகள்
ஆகாயத்தில் பறந்து
கொண்டிருக்க —
ஆகாயத்தில்
பறந்து கொண்டிருந்த
நீயோ —
அரசியலுக்கு
இறங்கி வந்திருக்கிறாய்!
பயிற்சி விமானம்
ஓட்டிய உன் கையில்தான்
எங்கள்
பாரத விமானம்
பத்திரமாய் இருக்கும்.

எம். எம். இஸ்மாயில்



இவன்
எக்காலத்தும்
கம்பனுக்கு
வக்காலத்து
வாங்கும்
வக்கீல்!
எத்தனையோ
திருடர்களை—
இவன்
கண்டுபிடித்திருக்கிறான்:
கம்பனைத் திருடிய
தமிழை —
இவன்
கண்டுபிடித்ததே இல்லை!

‘கவிஞர் வாலி’யின்
‘பெரிய புள்ளிகள்’
கவிதைத்
தொகுப்பிலிருந்து
மௌஷ்மி

(கனிமுத்துப் பதிப்பகம்,
727, அண்ணா சாலை,
சென்னை— 600 006).



சிவாஜி கணேசன்

உன்
குணச்சித்திர நடிப்பைக்
கண்டு
கேமரா லென்ஸ்களில் கூட
ஈரம் கசிவதுண்டு
படச்சுருள் —
உன் நடிப்பை
பதிவுசெய்துகொள்வதைப்
பெருமையாய் எண்ணு
கிறது!

உன்
விழிகளைக் காட்டிலும்
அதிக
மொழிகள் தெரிந்தவன்
மாநிலத்தில் இல்லை!

ரஜினிகாந்த்

எத்தனையோ நடிகர்கள் —
கிடைத்ததை வைத்துக்
கொண்டு
'கிருஷ்ணராமா!' என்று
இருக்கும் பொழுது...
இவன் மட்டும்
'ஹரே! கிருஷ்ணா!' என்று
ஆன்மீகத்தைத் தேடி
அலைகிறான்.
இவனுடைய
வணக்கத்துக்குரிய
பெரியவர்கள்
இருக்குமிடம்
இரண்டே இரண்டு...
ஒன்று — கவிதாலயம்!
மற்றொன்று — மந்திராலயம்!





நாமகிரிப்பேட்டை கிருஷ்ணன்

புல்லாங்குழல் ஊதாமல்
நாதஸ்வரத்தை ஊதுகின்ற
கிருஷ்ணன்
நீ ஒருவன்தான்!
நாதஸ்வரம் என்றும் —
ஒரே ஒரு ஸ்வரத்தை
வைத்துக் கொண்டு...
நீ
ஏழு ஸ்வரங்களை
எழுப்புகிறாய்!
நீ
இசைக்கும் போது
எங்களுக்கு
மட்டுமல்ல;
நாதஸ்வரத்துக்குப்
புல்லரிக்கிறது!

சுஜாதா

இவன்
இந்த வாலியோடு
கோலி விளையாடியவன்!
இவன் —
தன் பெயருக்குத்தான்
புடவையைச்
சுற்றி விட்டிருக்கிறானே
தவிர....
இவனது
எழுத்துக்கள்
வேட்டி கட்டிக் கொண்டு
வெளியே
தான்
உலா வருகின்றன!
இவன்
பெங்களூர்க்காரனாக
இருந்தாலும்
எங்களூர்க்காரன்
என்பதில்
எனக்குப் பெருமையே!

கலைஞர் கருணாநிதி



நீ
மூவேந்தர்களின்
மொத்த வடிவம்!
உன்னை —
சோழனென்று சொல்ல
லாம்....


திருவாரூரில்
தேரை ஓட்டியதால்!
பாண்டியனென்று சொல்ல
லாம்....

பைந்தமிழைப்
பேணி வளர்த்ததால்!
சேரனென்று சொல்ல
லாம்....

சிலப்பதிகாரத்தை —
மீண்டும்
திரையில் இசைத்ததால்!



"அடகு வைத்துப் படித்த அப்பாவிகள்..."



ஞாயிற்றுக்கிழமை

வழி தோறும் விழி வைத்து
வராத கடிதத்திற்கு
ஏங்கிவிடும்
ஏமாற்றப் பெருமூச்சு
இல்லாத ஒரே நாள்.

எஸ். ராமன்,
B.B.A. மூன்றாம் ஆண்டு,
சௌராஷ்டிரா கல்லூரி,
மதுரை — 4.



பட்டதாரிகள்!

எதிர்கால அரண்மனைக் கனவில்
இருந்த வீடுகளையும்
அடகுவைத்துப் படித்த
இந்த அப்பாவிகள்;
பட்டமளிப்பு விழாவன்று
கறுப்பு அங்கி அணிந்தனரே!
அது,
துக்கத்தின் துவக்கவிழா
எனக் காட்டவோ!

மு. அயூப்கான்,
இளங்கலை மருந்தாக்கியல்
மூன்றாமாண்டு
மதுரை மருத்துவக் கல்லூரி,
மதுரை — 20.

எழுத்தாளர்களே!

உமது பேனாமுனைகள்
இந்த சமுதாய,
சாக்கடையில் நீந்தி,
தெருவோர நாயகரின்
திருவோட்டை எடை பார்த்து,
அரசியல் முதல்
ஆன்மீகம் வரை
தில்லு முல்லுகளை களைந்துவிட்டு,
புகை நுழையா இடமெல்லாம்,
புகுந்து வரட்டும்.

வெ. ச. தமிழரசன்,
பி. எஸ். ஸி. முதலாண்டு
(விலங்கியல்)
பெரியார் கலைக் கல்லூரி,
கடலூர் — 1.






குடை:

நம்மை நனைத்து
துன்புறுத்தும்
மேகங்களுக்கு
நாம் காட்டும்
கறுப்புக் கொடி!

பூட்டு:

மனிதனின்
நேர்மைச்சாவி
கணிசமாக தேய்ந்து
சந்தேக பூட்டிற்கு
பொருந்தியபோது
உருவானது!





வாத்தியார்:

மந்திரக்கோல்
இல்லாமலேயே
க்ளாஸ் ரூமை
பெட்ரூமாய்
மாற்றும் மந்திரவாதி!

— எம். சிதம்பரம்,
முதலாண்டு போஸ்ட்கிராஜுவேட்
டிப்ளமோ இன் அக்கௌண்ட்ஸ்
அண்ட் டாக்ஸேசன்,
சென்னைப் பல்கலைக்கழகம்,
சென்னை — 5.

மாணவர் பக்கங்கள்

விளைவு...

சில புரட்சி
இளைஞர்கள்
'ஜாதி இல்லை'
என்று விண்ணப்பங்களில்
எழுதியதன் விளைவு —
'ஜாதி இல்லை'
என்றொரு ஜாதியை
அரசு அறிவித்தது.

சி. லக்ஷ்மி,
முதுநிலை முதலாமாண்டு,
(சரித்திரம்)
அஞ்சல் வழிப் பாடத்திட்டம்
திருப்பூர் — 4..



அழியாச் சுடர் மௌனி

ஜெயகாந்தன்

'தமிழ்ச் சிறுகதை உலகில் திருமூலர் என்று புதுமைப்பித்தனால் வர்ணிக்கப்பட்டவர் மௌனி.

தமிழிலக்கியத்தில் மறுமலர்ச்சிக் காலமான 1930—களில் மணிக்கொடி தோன்றியது. நவீன இலக்கிய தாகமும் லட்சியமும் கொண்ட ஓர் எழுத்தாளர் அணி அக்காலத்தில் உருவாகியது. பி. எஸ். ராமையா, கு.ப.ரா. ஸ்டாலின் ஸ்ரீனிவாசன், ந. சிதம்பர சுப்ரமணியன், சிட்டி, சி. சு. செல்லப்பா, க. நா. சு., பிச்சமூர்த்தி போன்ற பெயர்களையெல்லாம் 1950—களில்நான் எழுதத்தொடங்கிய காலத்தில் அறியலானேன்.

இந்தப் பெயர்களின் நடுவே மௌனி என்ற பெயர் தரித்த சி. மணி என்கிறவரின் படைப்புகள் ஏதும் அக்காலத்திலேயே தேடினாலும் கிடைக்காத நிலையில்தான் இருந்தது.

மணிக்கொடி காலத்தின் சாதனைகளுக்கெல்லாம் மகுடமாய் ஜ்வலித்த புதுமைப்பித்தனின் படைப்புகள் விமரிசனங்கள் அனைத்தையும் படித்த போது பலவிடங்களில் 'மௌனி'யைப் பற்றிய குறிப்புகள்தான் கிடைத்தன.



50—களின் மத்தியில் அனேகமாக உயிருடன் வாழ்ந்திருந்த எல்லா மணிக்கொடி எழுத்தாளர்களுடனும் எனக்குப் பரிச்சயமும் நட்பும் நேர்ந்தன. எனினும் இந்த 'மௌனி' என்ற மனிதர் எங்கேயும் கண்ணில் தட்டுப்பட்டது கூட இல்லை.

50—களின் இறுதிவாக்கில் சென்னையில் உள்ள எழுத்தாளர்கள் மத்தியில் ஒரு புதிய எழுச்சியும் கூட்டு இலக்கிய முயற்சிகளும் தலை எடுத்தன.

அகில இந்திய எழுத்தாளர் மாநாடு ஒன்று மிக விமரிசையாக அக்காலத்தில் சென்னையில் நடைபெற்றது. அந்த மகாநாட்டுக்கு 'மௌனி' வந்து கலந்து கொள்ளலாம் என்று எதிர்பார்க்கப்பட்டது. அந்த மகாநாட்டில் நான் கலந்து கொண்டேன். மௌனி அதில் கலந்து கொண்டதாக நினைவில்லை.

அக்காலத்தில் நான் பணியாற்றிக் கொண்டிருந்த ஸ்டார் பிரசுரம் 'அழியாச் சுடர்' என்ற தலைப்பில் மௌனியின் சிறுகதைகளைத் தொகுத்து வெளியிட்டது.

அந்தக் கதைகள் மிகவும் அபூர்வமானவை என்பது என் அபிப்பிராயம். அவரது நடை மிகவும் அலாதியானது. டம்பமில்லாதது. சுகமான, சோகமான ஒரு வாழ்க்கைப் பார்வை... அந்தத் தொகுதியிலிருந்த 'மாறுதல்' என்ற கதை இப்போதும் என் மனத்தை விட்டு நீங்காமலிருக்கிறது. சிறுகதைகளை—கதை என்கிற தரத்திலிருந்து கவிதை என்ற நிலைக்கு உயர்த்த அவரது எழுத்துக்கள், முயல்கின்றன...

ஒரு காலத்தில் எழுத உட்காருவதற்கு முன்பு, மௌனியின் அழியாச்சுடர் தொகுதியில் உள்ள 'மாறுதல்' என்ற ஒரு கதையை நான் திரும்பத் திரும்பப் படித்திருக்கிறேன். அதற்குக் காரணம் ஏதும் இல்லை. அப்படியொரு பழக்கம் என்னிடம் இருந்தது. அது குறித்து நான் ஒரு கட்டுரையில் குறிப்பிட்டிருந்தேன். வாசகர்களும் நண்பர்களும் தான் மௌனியின் வாசகன் என்று கருதி மௌனியின் நூல்களைத் தேடினர். நூல்கள்

ஏது? ஒரு தொகுதிதான் நானறிந்தவரை வந்திருக்கிறது. இதில் ரசமான விஷயம்: அந்தக் குறிப்பிட்ட கட்டுரையைப் படித்துவிட்டு, மௌனியும் என்னைத் தேட ஆரம்பித்தது தான்.

எல்லாரும் மறந்துவிட்ட ஒரு பெயரை நினைவுபடுத்த விரும்பினேன். அது அவருக்கு எத்தகைய மகிழ்ச்சியை அளித்திருக்கும்! என்னைப் பார்க்க விரும்புவதாக, சிதம்பரத்திலிருந்து வந்த ஒரு நண்பர் மூலம் சொல்லியனுப்பியிருந்தார் மௌனி.

'மௌனி' மிகவும் ஒதுங்கியே வாழ்ந்துவிட்டார். சிதம்பரத்தில் வசதியான மிராசுதார் வாழ்வு. இளமைக்காலத்திலிருந்த அதே மாதிரியான மாற்றமில்லாத, வளர்ச்சியும் இல்லாதவாழ்க்கைப்பார்வை. ஆரம்பகாலத்தில் எழுதிய சில மணியான சிறுகதைகளைத் தவிர வேறு எழுதி இருக்கிறாரா என்பது சந்தேகமே.

மணிக்கொடி எழுத்தாளர்கள் பலர் ஒருவர் பின் ஒருவராய் மறைந்து விட்டனர்.

மௌனி சிதம்பரத்தில் வாழ்கிறார் என்று தெரிந்தவுடன் ஒருமுறை நான் என் சொந்த ஊரான கடலூருக்குச்சென்றபோதுமௌனியைப் பார்ப்பதற்காகச் சிதம்பரம் சென்றேன். ஒரு பொழுது அவரோடு தங்கி உரையாடி மகிழ்ந்தேன். பேச்சிலும், சிந்தனையிலும் என்றும் இளமை தவழ்கிற மனம் படைத்தவர் மௌனி.

அவரது சொந்த வாழ்வில்நிறைய சோகங்களை அனுபவித்தவர். வளர்ந்த, படித்த, பட்டம் பெற்ற ஒரு மகன் குளிக்கும் அறையில் மின்சாரம் தாக்கி மாண்டு போன சோகத்தைச் சுமந்து கொண்டிருந்த மௌனி, வாழ்வின் அடிநாதம் பிரிவும் சோகமும்தான் என்பதை என்னிடம் சொல்லிக் கொண்டிருந்தார்.

அந்த முதல் சந்திப்புக்குப்பின் மூன்று நான்கு முறை நான் சிதம்பரத்தைக் கடந்து செல்கிற போதும் வருகிற போதும் சிதம்பரம் வடக்குத் தெருவில் உள்ள அவரது வீட்டுக்குச் சென்று அவரைப் பார்ப்பேன்.

எனது முன் தலைமுறையைச் சேர்ந்த எழுத்தாளர்கள் பலரோடு சமத்துவமான நட்பை வளர்த்துக் கொண்டிருக்கிறேன் நான்.

அத்தகைய அன்பான நண்பர்களில் ஒருவராய்த் திகழ்ந்தவர் மௌனி. அவரைத் தமிழ் வாசகர்கள் அவ்வளவாக அறிய மாட்டார்கள். எல்லாருக்கும் அவரது கதைகள் புரியாதுதான். 'நாங்கள் வாசகர்களுக்காக எழுதுகிறோம். அவர் எங்களுக்காக எழுதுகிறார்' என்று எழுதுபவர்கள் சொல்லத் தகுந்த எழுத்துக்கள் மௌனியின் எழுத்துக்கள்.

அவர் பெரிதாக ஒன்றும் சாதிக்காவிடினும் தமிழ் மறுமலர்ச்சிக் காலத்தில தனித்துவம் மிகுந்த சிறுகதைகளைப் படைத்துத் தனித்துவத்துடன் பிரகாசிக்கிறார் என்றே இப்போதும் நான் நினைக்கிறேன்.

'மௌனி' காலமாகி விட்டார் என்ற சேதி கேட்ட போது மௌனமாக இருந்த ஓர் இலக்கிய இதயம் இறுதியாக நின்று போய் விட்டது என்று புரிந்து கொண்டேன்.

நல்லவேளை! மௌனி எழுத்தை நம்பி வாழவில்லை. எழுத்தும் அவரை நம்பி இல்லை என்பதால் இந்த இழப்பின் சோகம் எல்லாருக்கும் தெரியவில்லை.

மறுமலர்ச்சி இலக்கிய சகாப்தத்தின் மறக்க முடியாத ஒரு பெயர் 'மௌனி.' படித்தவர்கள் மறக்க முடியாத படைப்புகள் அவரது சிறுகதைகள்.

அவர் தோன்றினார்; புகழோடு தோன்றினார் என்பதற்கு 'அழியாச் சுடர்' ஒன்று போதும்!

ஆயுதங்களைச் செய்து குவிக்கும் வல்லரசுகளே! உங்களது திறமைகளை ஆக்க பூர்வமான காரியங்களுக்கே பயன்படுத்துங்கள். படைப்பது, காப்பது, அழிப்பது மூன்றுமே இயற்கைக்கும் இறைவனுக்கும் உள்ள உரிமை. அதில் அழிப்பதை மட்டும் ஏன் நீங்கள் தேர்ந்தெடுக்கிறீர்கள்? இனிமேலாவது உலக சமாதானத்திற்குப் பாடுபட்டு உங்கள் சகோதர, சகோதரிகளை வாழ விடுங்கள்.

கோயமுத்தூர்— 1. சி. யோகேஸ்வரி.

பேச்சு — 12.

ஜைட்டபார்க் —




பேச்சு — 13.

ஜைட்டபார்க்



மார்க்கெட்டுக்குப் போனால் எதுவுமே சரியான எடையில் கிடைப்பதில்லை. எந்த வியாபாரியிடமாவது எடைக்கல் எதுவுமில்லாமல் தராசைத் தூக்கச் சொன்னால் நம் கதி அவ்வளவுதான்! இந்த மாபெரும் திருட்டைத்தடுக்க அதிகாரிகளோ, சட்டங்களோ, இந்த நாட்டில் கிடையவே கிடையாதா? வயிறெரிந்து கேட்கிறேன்...

சென்னை— 33. எஸ். கமலா.



ஃபிளையிங் கிளப்பும் தமிழக அரசின் மெத்தனப் போக்கும்!

1930-ல் ஆரம்பிக்கப்பட்ட சென்னை ஃப்ளையிங்கிளப்புக்குப் பொன்விழா நடத்தப்பட்டதோ இல்லையோ அடிக்கடி மூடு விழா நடத்தப்படும் சூழ்நிலை உருவாகிக்கொண்டே தான் இருக்கிறது! ஆமாம்! கிளப்பின் நோட்டீஸ் போர்டில் ஓர் அறிவிப்பு: "நிர்வாகக் கஷ்டங்கள் காரணமாகக் கிளப் தன் பணிகளை நிறுத்திக்கொள்கிறது. பணிகள் தொடர்வது பற்றி அறிவிப்பு வரும்!" என்று எழுதியிருந்தார்கள். அதன்படி இப்போது மீண்டும் செயல்படத் தொடங்கியிருக்கிறது. இருந்தாலும் அப்படியோர் அறிவிப்புச் செய்யும் அளவுக்கு நிலைமை மோசமானதற்கு என்ன காரணம்?

ஃப்ளையிங் கிளப் செயலாளர் சந்திரசேகரனைச் சந்தித்தேன்; சோகமாய்ப் பேசினார்...

கிளப் ஆரம்பித்துச் சுமார் 55 வருடங்கள் ஆகின்றன. ஆரம்பத்தில் ஐரோப்பியர்களின் 'சோஷியல் கிளப்'பாய் இருந்தது. இப்போது வருடா வருடம் இருபது பேருக்கு பிரைவேட் பைலட் லைசென்ஸ் பெறவும், பதினாறு பேருக்கு விமானப் பராமரிப்புப் பயிற்சி பெறவும் செய்கிறோம். இங்கே பயிற்சி பெற்ற அத்தனை பேரும் இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் நல்ல பொறுப்பில் இருக்கிறார்கள். இந்த கிளப் மத்திய – மாநில அரசுகளின் உதவியுடன் நடப்பதால் மிகக் குறைந்த கட்டணமே வசூலிக்கப்படுகிறது.

(இதுபோன்ற ஃப்ளையிங் கிளப்புகள் சென்னை தவிர மத்தியப் பிரதேசம், பஞ்சாப் மாநிலங்களில் இருக்கின்றன.)

இங்கே முன்பு பயிற்சியாளர்களுக்கென ஐந்து விமானங்கள் இருந்தனவாம். அதில் மூன்று ரிப்பேரானதால் இப்போது உபயோகத்திலிருப்பவை இரண்டு புஷ்பக் விமானங்கள் மட்டுமே. ரிப்பேரான விமானங்களைப் பழுது பார்க்க நிதி வசதி இல்லாத நிலை. இந்த ஆண்டு பட்ஜெட்படி பெட்ரோல் விலையும் உயர்ந்து விட்டதால் செலவும் அதிகரித்து விட்டது.

82-ல் தமிழக அரசு வாங்கிய ஹெலிகாப்டர் இவர்களின் பராமரிப்பில் தான் இருக்கிறது. தவிர, செயற்கை மழை பெய்விக்கும் விமானம் ஒன்றும் இருக்கிறது. இவை இரண்டுக்குமாய்ச் சேர்ந்து மாதம் 27,000 வரை பராமரிப்புச் செலவாகிறது. இந்த வகையில் கடந்த இரண்டாண்டுகளில் ஆன பராமரிப்புச் செலவில் கணிசமான ரூபாயைத் தமிழக அரசு தராமலிருந்தது. முன்பு ஒருமுறை இதேபோல் மோசமான நிதிநிலை காரணமாய் மூடிவிட முடிவெடுத்த போதுதான் தமிழக அரசு ஒரு லட்ச ரூபாய் வழங்கியதாம். இப்போதும் அதேபோல் மூடிவிட முடிவெடுத்த போதுதான் 3.8 லட்ச ரூபாய் வழங்கியிருக்கிறது. தமிழக அரசுக்கு ஏன் இந்த மெத்தனம்? செயலாளர் சந்திரசேகரனுக்கு மட்டுமல்ல நமக்கும் அது புரியவில்லை!

சந்திப்பு: **மௌஷ்மி.**

Printed by V. Murali and Published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Ltd. at the Bharathan Press, Race Course Road Guindy, Madras-600032 (Phone: 431543)

Assistant Editor: P. S. Mani — Editor: K. Rajendran



**ஈறுகளை பலப்படுத்துவதற்கான விசேட
அஸ்ட்ரிஞ்ஜெண்ட் அடங்கியிருப்பது ஃபோர்ஹென்ஸ் ஒன்றில்தான்.
உங்கள் ஈறுகள் உறுதியோடிருக்கும் போது உங்கள்
பற்கள் நீடித்த ஆயுளைப் பெறுகின்றன.**

சிறந்த அமெரிக்கப் பல் டாக்டர் ஆர். ஜே.
ஃபோர்ஹென், தன்னுடைய டூத் பேஸ்ட்டில் விசேட
அஸ்ட்ரிஞ்ஜெண்ட் ஒன்றைச் சேர்த்தார்! அது,
ஈறுகளில் நேரடியாக செயல்பட்டு உண்மையிலேயே
அவற்றை பலப்படுத்துகிறது. அது, ஈறுகளைப்
உறுதிப்படுத்துவதால் பற்கள் சிறந்த
பிடிமானத்தைப் பெறுகின்றன. ஆகவே பற்களுக்கு
உறுதியான அடித்தளமும் நீடித்த ஆயுளும்
கிடைக்கின்றன.



ஃபோர்ஹென்ஸ் – பல் டாக்டரால் உருவாக்கப்பட்ட டூத்பேஸ்ட்

339F 303 TAM

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka

